வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu விரமலர்




Email : news@eelanadu.lk மலர் : 03 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 209 பக்கங்கள் : 23


03 எரிபொருள் தட்டுப்பாடு அரசின் திட்டமிட்ட சதி!


04 கோட்டாபய உடனே பதவி விலகவேண்டும்


08 பிரகடனப் படுத்தப்படாத முடக்க நிலையில் நாடு


11 டோக்கன் முறையும் மக்களின் குழப்பமும்

## எரிபொருள், எரிவாயு பிரச்னைக்கு இன்னும் 10 நாள்களுள் தீர்வு வரும்!



### ஜனாதிபதி கோட்டாபய நம்பிக்கை

கொழும்பு, ஜூலை. 03

**நாட்டில் தற்போது நிலவும் சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் பிரச்னைக்கு இன்னும் 10 நாட்களுக்குள் தீர்வை பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 10 பேர் அணிக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி இவ்வாறு உறுதியளித்தார் என்று பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்தார்.

அத்துடன், இது தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துமாறு தமது அணி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தது எனவும் அவர் கூறினார். (அ)

## எரிபொருள் வழங்க கோரி எம்.பிக்களுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை. 03

எரிபொருள் மற்றும் எரிவாயு கேட்டு பொது மக்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமிருந்து நாளாந்தம் நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் வருவதால் அமைச்சர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக பல எம்.பி.க்கள் பொதுக்கூட்

22

## பொலிஸாருக்கு 4000 சைக்கிள்கள்

கொழும்பு, ஜூலை. 03

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக 4000 சைக்கிள்களை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், பொலிஸாரின் கடமைகளை இலகுவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

22

## சிறப்பாக நடைபெற்றது மடுமாதா ஆடித்திருவிழா



மன்னார், ஜூலை. 03

மன்னார் மடு அன்னையின் ஆடித் திருவிழா நேற்று சனிக்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது.

மடுத் திருத்தலத்தின் திருவிழா கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

22

## பதவி துறக்கத் தயாராகும் அரச நிறுவன பிரதானிகள்

கொழும்பு, ஜூலை. 03

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உட்பட அரச நிறுவனங்களின் பிரதானிகள் தமது பதவிகளில் இருந்து விலக தயாராகி வருவதாக தெரிய வருகிறது.

22

## அடுத்த வாரம் முதல் நாடு முற்றாக முடங்கும் நிலை!

கொழும்பு, ஜூலை. 03

எதிர்வரும் வாரத்தில் இருந்து நாடு முழுமையாக முடங்கும் அபாயத்தை எதிர்நோக்கி உள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் உத்தியோகபூர்வமாக முடிவு செய்யாவிட்டாலும், எரிபொருள் நெருக்கடி

22

## பாடசாலைகளிலிருந்து மாணவர் இடைவிலகும் நிலை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை. 03

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகும் அபாயம் அதிகரித்துள்ளதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக காகிதங்களை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

22

## இராணுவ முகாம்களில் இருந்து வைத்தியர்களுக்கு எரிபொருள்

கொழும்பு, ஜூலை.03

வைத்தியர்களுக்கு இராணுவ முகாமில் இருந்து எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இராணுவத் தளபதியும் இந்த நடவடிக்கைக்கு இணக்கம் தெரி

22

## அரசுக்கு எதிரான 2ஆம் அலை சுனாமியைப் போல் இருக்கும்



### அநுரகுமார எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 03

'இந்த அரசை விரட்டுவதற்கான 2 ஆவது அலை விரைவில் ஆரம்பமாகும். அந்த அலை சாதாரண அலையாக அல்லாமல், சுனாமிபோல் இருக்கும். இலக்கை அடையாமல் ஓயமாட்டோம்."

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த அரசை விரட்டியடிக்க வீதியில் இறங்குவோம் என்ற தொனிப் பொருளின்கீழ் அம்ப

22

## யாழ் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையம் முன் மக்கள் ஏ-9 வீதியை மறித்து போராட்டம்!

### எரிபொருள் பங்கீடு முறையற்றது என தெரிவித்து

யாழ்ப்பாணம், ஜூலை. 03

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் உள்ள லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிறைவடைந்து விட்டதாக விநியோகத்தை மேற்கொண்ட இராணுவத்தினர் தெரிவித்ததை அடுத்து பொதுமக்கள் வீதியை மறித்து நேற்று மாலை 6

22



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

வீதியில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடிய ஒரு பையனை வழிமறித்த பொலிஸ்காரர் கேட்டார்: 'நீ எங்கே இருக்கிறாய்?'

அவற்கு அவன் சொன்னான்: 'எங்க அம்மா அப்பா கூட' என்று.

அதன் பின்னர் அவர்களிடையேயான சம்பாஷனை இது.

பொலிஸ்: உங்க அம்மா அப்பா எங்க தங்கியிருக்கிறாங்க?

பையன்: என்கூட தங்கியிருக்கிறாங்க.

பொலிஸ்: நீங்கள் எல்லாரும் எங்க இருக்கிறீங்க?

பையன்: எல்லாரும் ஒண்ணாத்தான் தங்கியிருக்கிறோம்.

பொலிஸ்: உங்க வீடு எங்க இருக்குது?

பையன்: எங்க பக்கத்து விட்டுக்கு அருகில் இருக்குது.

பொலிஸ்: அப்ப உங்க பக்கத்து வீடு எங்க இருக்குது?

பையன்: எங்கட வீட்டுக்கு பக்கத்திலை.

இது ஒன்றும் தேவைகருதி அல்ல. உங்களை கொஞ்சம் சிரிக்க வைப்பதற்காகத்தான். ஏன் சிரிக்க வைக்க முயன்றேன் என்பதை இந்தப் பத்தியை படித்த பின்னர் உணருவீர்கள் என்று நினைக்கிறேன்.

இப்போது, நாடு எழுதப்படாத முடக்கநிலையில் இருக்கின்றது. அவசியமற்று யாரும் வெளியே செல்லத் தயாராக இல்லை.

காரணம் வேறு ஒன்றுமல்ல, வெளியே செல்ல வாகனத்திற்கு எரிபொருள் இல்லை. சிலரிடம் துளிகூட பெற்றோலோ டீசலோ இல்லை. சிலரிடம் பல மணி நேரம் கியூவில் நின்று பெற்ற பெற்றோல் இருந்தாலும், அவசியமில்லாமல் விணடிக்க மனது இடம் தராததால் அவசியமற்ற அலுவலை தவிர்க்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இதைவிட இன்னும் சிலர், இரண்டாயிரம் ரூபாவிற்கும் அதிகமான பணத்தைக் கொடுத்து வாங்கிய ஒரு லீட்டர் பெற்றோலை அவசியமற்ற தேவைகளுக்கு பயன்படுத்த விருப்பமில்லாது இருக்கின்றனர்.

'ஈழநாடு' குழுமத்தில் பல வருடங்களாக பணியாற்றிய சிற்றூழியர் ஒருவர் இதுவரை காலமும் சைக்கிளில் வேலைக்கு வந்துகொண்டிருந்தார். இருந்த சைக்கிளை ஏழாயிரம் ரூபாவிற்கு விற்றுவிட்டு, அதனோடு சேர்த்து தனது சேமிப்பையும் போட்டு சில மாதங்களுக்கு முன்னர்தான் ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கியிருந்தார்.

இப்போது அவர், வேலைக்கு வருவதற்கு பெற்றோலும் இல்லாமல், சைக்கிளும் இல்லாமல் வேலைக்கு வரமுடியாது தவியாய் தவிக்கிறார். இப்போது சைக்கிள் வாங்க, ஐம்பதினாயிரம் இருந்தாலும் வாங்க முடியாத நிலை.

இப்படியான கதைகள் இப்போது ஆயிரக்கணக்கில் உண்டு.

எப்போது இந்த நிலை மாறும் என்பது யாருக்கும் தெரியவில்லை. இருபத்து இரண்டாம் திகதிக்குப் பின்னர் தான் இனி நாட்டுக்கு எரிபொருள் வரும் என்று பிரதமர் அலுவலகம் சில தினங்களுக்கு முன்னர் தெளிவுபடுத்தியிருந்தது.

இதனால், பத்தாம் திகதி வந்துவிடும் என்று தனது டிவிற்றரில் பதிவிட்ட சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவை இப்போது காணவில்லை. அவரும் சுற்றுலா போய்விட்டாரோ தெரியவில்லை.

ஆனால், பிரதமர் அலுவலகம் சொன்னதுபோல, இருபத்திரண்டாம் திகதிக்கு பின்னர்தான் எரிபொருள் வரும். இதுவும், இந்தியாவிலிருந்தே வரவிருக்கின்றதாம்.

இந்திய வங்கி ஒன்றிடமிருந்து இலங்கை பெறவிருக்கும் ஐநூறு மில்லியன் டொலர் கடனில் இந்த எரிபொருள் வரவிருக்கின்றது.

அதுவும் நான்கு தடவைகள் கப்பலில் சில பத்தாயிரம் மெட்ரிக்தொன் எரிபொருள் வரக்கூடும் என்கின்றன சில தகவல் தெரிந்த வட்டாரங்கள்.

இந்த பொருளாதார நெருக்கடி தொடங்குவதற்கு முன்னதாக, இலங்கைக்கு தினசரி நான்காயிரத்து ஐநூறு தொன் பெற்றோலும் ஐயாயிரம் தொன் டீசலும் ஆயிரத்து ஐநூறு தொன் மண்ணெண்ணெயும் தேவைப்பட்டன.

அதாவது, இலங்கையிலிருக்கும் வாகனங்கள் அனைத்தும் வழமைபோல ஓடுவதெனில் இது தேவை.

அப்படியெனில், இந்தியாவிலிருந்து வரவிருக்கும் இந்த சில பத்தாயிரம் தொன் எரிபொருளும் எத்தனை நாட்களுக்கு போதுமானது என்பதை நீங்களே கணக்கிட்டு பார்த்துக்கொள்ளுங்கள்.

தற்போது அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் வழங்கப்படுவது போல சிக்கனமாக, மிகவும் சிக்கனமாகவும் பாவித்தாலும் சில வேளைகளில் அதனைக் கொண்டு ஒரு மாதத்தையோ அல்லது அதற்கும் சற்று கூடிய வாரங்களையோ சமாளிக்கலாம் என்கின்றன தொடர்பான சில வட்டாரங்கள்.

அடுத்து என்ன நடக்கும் என்பதோ, எப்படி சமாளிப்பது என்பதோ இன்று வரை பிரதமருக்கு கூட தெரியவில்லை என்பதுதான் நிஜம்!

இப்போது, மேலே அந்த நகைச்சுவை துணுக்கை ஏன் எழுதினேன் என்பதை புரிந்திருப்பீர்கள். இனி என்ன செய்யப்போகின்றோம் என்ற கவலையோடு இந்தப் பத்தியை படித்து முடிக்கப்போகின்ற உங்களை முதலில் கொஞ்சம் சிரிக்க வைக்கத்தான்!

**- ஊர்க்குருவி**

# பொருளாதார நெருக்கடியினால் சிறுவர்களுக்கு உளவியல் பாதிப்பு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை. 03

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக சிறுவர்கள் கடுமையான உளவியல் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள் எதிர்நோக்கும் உளவியல் ரீதியான பிரச்னைகள் தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மற்றும் பஸ் கட்டண அதிகரிப்புக்கு மத்தியில் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில் மன அழுத்தம் ஏற்படாமல் சிறுவர்களைப் பாதுகாக்க பெற்றோர் உட்பட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (அ)

# விமான நிலையங்களை முழுமையாக மூட வேண்டிய நெருக்கடியான நிலை!

கொழும்பு, ஜூலை. 03

இலங்கையில் உள்ள விமான நிலையங்களின் செயற்பாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக, போக்குவரத்துத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

டீசல் கிடைக்காததால் பயணிகள் போக்குவரத்து சேவைகள் கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இதனால், 90 சதவீத தனியார் பஸ்கள் இன்னும் இயங்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளை ரயில்கள் மற்றும் உள்ளூர் பஸ்கள் மூலம் பூர்த்தி செய்து கொண்டனர்.

தற்போதைய சூழ்நிலையால் விமான நிலைய செயல்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

விமான நிலையத்தை நடத்துவதற்கு அத்தியாவசியமான ஊழியர்களே தற்போது பணிக்கு அழைக்கப்படவுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறி, தெரிவித்துள்ளார்.

நாட்டின் விமான எரிபொருள் கையிருப்பும் வேகமாக குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இலங்கை வருவதற்கும் புறப்படுவதற்கும் எரிபொருளை கொண்டு வருமாறு சர்வதேச விமான நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் நிலை என்ன என்பதனை அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கும் சிறிய அளவிலான எரிபொருள் மாத்திரமே கிடைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் விமான சேவை அதிகார சபையுடன் இணைந்து ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு எரிபொருள் பெறுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மியன்மாருக்கு இலங்கை வழங்கவுள்ள நன்கொடை

கொழும்பு, ஜூலை. 03

மியன்மாருக்கு 6 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை வழங்க இலங்கை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் தலையீட்டில் இந்த நன்கொடை நடைபெறும்.

இலங்கையில் கொள்வனவு செய்யப்பட்ட பைசர் தடுப்பூசி மருந்துகளின் இருப்பு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் காலாவதியாகவுள்ளது என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் , 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது டோஸ் வழங்குவதற்காகவும் 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

எனினும் 20 வயதுக்கு மேற்பட்டோரில் 54 வீதமானோரே இதுவரை மூன்றாவது டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அதன் காரணமாக சுமார் எட்டு மில்லியன் பைசர் தடுப்பூசிகள் எதிர்வரும் மாதமளவில் காலாவதியாகும் நிலையில் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

அத்துடன் ஒமைக்ரோன் திரிபின் உப திரிபுகள் சில உருவாகியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் மக்கள் நான்காவது கோவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டுமென சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# மட்டுப்படுத்தப்பட்டது தனியார் பஸ் சேவை!

### சுமார் 500 பஸ்கள் சேவை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை. 03

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் பஸ்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்களில் பல தனியார் பஸ்கள் எரிபொருளை பெற்றுக்கொள்வதாக அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

உதிரிப் பாகங்கள் இல்லாத காரணத்தினால் சுமார் 500 பஸ்கள் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ஏனைய பஸ்கள் வழமை போன்று இயங்கும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# எரிபொருள் தட்டுப்பாடு அரசின் திட்டமிட்ட சதி!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 03

நாட்டில் திட்டமிட்டு எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, நீண்டகாலத்துக்கு மக்களை வரிசைகளில் காத்திருக்கவைத்து, எரிபொருள் விநியோகத்தை எந்தவொரு தனியார் நிறுவனத்திடமேனும் ஒப்படையுங்கள் என்று மக்களை அவர்களது வாயினால் கூறவைப்பதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது. அதன் மூலம் நாட்டின் முக்கிய வளங்களை தனியார்மயப்படுத்துவதற்கே அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் செயற்பாடுகளின் காரணமாக தற்போது நாடு பாரிய நெருக்கடிகளுக்கு



முகங்கொடுத்திருப்பதுடன், படுகுழிக்குள் விழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எமது நாட்டின் உணவுப் பாதுகாப்பு மட்டம் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டு, அத்தியாவசியப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ரணில்-ராஜபக்ஷ அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான உதவிகளை சர்வதேச நாடுகளிடம் கோரியிருப்பதாகக் கூறி அந்த நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அப்புகைப்படத்தை வெளியிடுகின்றார்கள்.

அதன்மூலம் புகைப்பட அரசியல் முறையொன்றைக் கட்டியெழுப்பியிருக்கின்றார்கள். ஆனால் இன்னமும் பொருளாதார நிலைவரத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நாட்டுக்கு அடுத்த எரிபொருள் கப்பல் எதிர்வரும் 22 ஆம் திகதியின் பின்னரே வரும் என்று சாகல ரத்நாயக்க கூறுகின்றார். எனவே அதுவரை எரிபொருளின்றி பொதுமக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையேற்படும்.

இதனைப் பயன்படுத்தி எரிபொருள் விநியோகத்தைத் தனியார்மயப்படுத்துவதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது.

திட்டமிட்டு எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, நீண்டகாலத்திற்கு மக்களை வரிசைகளில் காத்திருக்க வைத்து, எரிபொருள் விநியோகத்தை எந்தவொரு தனியார் நிறுவனத்திடமேனும் ஒப்படையுங்கள் என்று அவர்களை அவர்களது வாயினால் கூற வைப்பதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது - என்றார். (அ)

# திருச்சி, மதுரை - கொழும்பு சரக்கு விமான சேவைகள் இடைநிறுத்தம்!

சென்னை, ஜூலை. 03

இந்தியாவின் திருச்சி, மதுரை விமான நிலையங்களிலிருந்து இலங்கைக்கு நேற்று முன்தினம் முதல் சரக்கு விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து இருந்து சென்னை, திருச்சி, மதுரை ஆகிய விமான நிலையங்களுக்கு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் விமான சேவை மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில், தினசரி சென்னைக்கு 3 சேவையும், திருச்சிக்கு 3 சேவையும், மதுரைக்கு ஒரு சேவையும் அளித்து வந்தது. ஆனால், தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் விலை உயர்வு காரணமாக சென்னைக்கு 02 விமான சேவையும், திருச்சிக்கு ஒரு விமான சேவையும், மதுரைக்கு வாரத்துக்கு 03 சேவையும் என குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் சரக்கு விமான சேவையை நிறுத்துவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனால் சென்னை, திருச்சி, மதுரையில் இருந்து நாளொன்றுக்கு சராசரியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த 10 தொன் பொருட்கள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது கவலை வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்க முயன்றவர் கைது

கொழும்பு, ஜூலை. 03

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனை செய்ய முற்பட்ட நபர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 32 கிராம் 68 மில்லிகிராம் கேரள கஞ்சா சுருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராஜகிரியவில் உள்ள கல்லூரியொன்றுக்கு அருகில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனை செய்வதற்காக, சந்தேகநபர் இந்த கஞ்சா சுருள்களை தயாரித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

50 வயதுடைய நபரே இவ்வாறு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிக்கப்பட்டது. (அ)

# 90000 மெற்றிக் தொன் எரிபொருளுடன் மூன்று கப்பல்கள் இலங்கைக்கு வரும்!

கொழும்பு, ஜூலை. 03

மொத்தம் 90,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் பெற்றோல் தாங்கிய மூன்று கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளன.

ஒவ்வொன்றும் தலா 30,000 மெற்றிக் தொன் எரிபொருளை தாங்கி வருகைதரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, முதலாவது கப்பல் ஜூலை 13 முதல் 15ஆம் திகதிக்குள்ளும், 2ஆவது கப்பல் ஜூலை 29 முதல் 31ஆம் திகதிக்குள்ளும், 3ஆவது கப்பல் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதியன்றும் வருகை தரும் என லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)



# இந்து, பௌத்த துறவிகள் இணைந்து வறிய குடும்பத்துக்கு வீடு அமைப்பு

மட்டக்களப்பு, ஜூலை. 03

இந்து, பௌத்த மதங்களின் துறவிகள் இணைந்து வருமானம் குறைந்த ஒரு குடும்பத்துக்கான வீடொன்றை அமைத்து கொடுத்து அதனை திறந்து வைத்த நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இன நல்லிணக்கத்திற்குரிய சிறந்த முன்னுதாரணமான இந்த நிகழ்வில் ரிசிகேச சுவாமிகள் ஸ்ரீமத் நித்தியானந்தா சரஸ்வதி மகராஜ் ஜி மற்றும் வணக்கத்துக்குரிய அத்தி பூஜ்ய உடுவன ரத்னபால நாயக்க தேரர் ஆகியோரின் நட்பை வெளிப்படுத்தும் வகையிலேயே இந்த நிகழ்வு நடைபெற்றது.

இன மத மொழி கடந்து ஒற்றுமையை உணர வைக்கும் இச்சிறப்பு நிகழ்வில் அன்பானந்தா மகராஜி மற்றும் பௌத்த துறவிகள் கலந்து கொண்டு ஆசி வழங்கினர்.

இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு முருகன் ஆலய தலைவர் ஆர்.ஜெகநாதன் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்ற தலைவர் வே.சந்திரசேகரம் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதல்

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதல்

திருமலை, ஜூலை. 03

திருகோணமலை-லிங்கநகர் ஐ.ஓ.சிக்கு சொந்தமான எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்ற மோதலில் இளைஞரொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மோதல் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

இதன் போது திருகோணமலை பாலையூற்று பகுதியைச் சேர்ந்த டி.டிலூபர் (வயது-26) என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாக எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட வரிசையில் நின்ற நிலையில் நேற்றுஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதாகவும் இதனையடுத்து குறித்த இளைஞரை பொல்லால் தாக்கியதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதலினால் காயமுற்ற இளைஞர் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடும் ஊழியர் மீது சட்ட நடவடிக்கை!

## தபால் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 03

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடும் ஊழியர்களுக்கு எதிராக கடமையிலிருந்து விலகியதன் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தொழிற்சங்கங்களுக்கு எழுத்து மூலம் நேற்று அறிவிக்கவுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் மாத்திரமே திறக்கப்படும் என தபால் மா அதிபர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தபால் தொழிற்சங்கங்கள் கடந்த 26 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

வேலை நிறுத்தம் காரணமாக, கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனையின் வெளிநாட்டு பிரிவில் அனுப்பப்படாத பொதிகள் தேங்கியுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# கோட்டாபய உடனே பதவி விலகவேண்டும்

## டிலான் பெரேரா வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 03

**"நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும்."**

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோல்வி அடைந்துவிட்டார். தன்னால் முடியாது என்பதைப் பிரதர் மஹிந்த ராஜபக்ஷவும் நிரூபித்துவிட்டார். எனவே,



இதனை விளையாட்டாகக் கருதக்கூடாது.

ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலகி, சர்வகட்சி இடைக்கால அரசை அமைப்பதற்கு இடமளிக்க வேண்டும் - என்றார்.

# குளவிகள் கொட்டி குடும்பஸ்தர் பலி!

## பொகவந்தலாவையில் சோகம்

கொழும்பு, ஜூலை. 03

பொகவந்தலாவை மேல் பிரிவு தோட்டப் பகுதியில் உள்ள 17ஆம் இலக்க வனப் பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற 4 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்கானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூன்று பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது எனப் பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ கீழ்ப் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 50 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சிக்கன் பத்மநாதன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு மன்னாரில் எரிபொருள் வழங்கல்

மன்னார், ஜூலை. 03

நாடளாவிய ரீதியில் எரிபொருள் பிரச்சினை உச்ச கட்டத்தை எட்டியுள்ள நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் ஆகியோரின் தலைமையில் நேற்று சனிக்கிழமை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின் கீழ் பணிபுரியும் சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மன்னார் சுகாதார ஊழியர்கள் தொழிற்சங்கம் மற்றும் வைத்தியர்கள் இணைந்து எரிபொருள் கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது டன் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளித்திருந்தனர்.

இந்த நிலையில் சுகாதார ஊழியர்களின் கோரிக்கையின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை காலை தொடக்கம் விசேட ஏற்பாட்டின் கீழ் சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது. (அ)

# தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் உணவளிப்பதற்காக ரூபா 20 மில்லியன்!

கொழும்பு, ஜூலை. 03

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்குகளுக்கு தேவையான உணவைப் பெற்றுக்கொள்ள 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் 100 வகையான பாலூட்டிகள், 110 வகையான பறவையினங்கள், 65 வகையான மீன்கள், 34 வகையான ஊர்வன, 3 வகையான ஈரூடகவாழிகள், 30 வகையான பட்டாம்பூச்சிகள் மற்றும் 10 வகையான கடல்வாழ் உயிரினங்கள் உள்ளன.

இவற்றுக்கு அடுத்த 5 மாதங்களுக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்வதற்காக 20 மில்லியன் ரூபா வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இன்று தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் 83ஆவது வருட பூர்த்தி விழா கொண்டாடப்படவுள்ளது. (அ)

# மண்டபம் அகதிகள் முகாமிலிருந்த ஈழத் தமிழ் இளைஞர் உயிர்மாய்ப்பு

சென்னை,ஜூலை. 03

தமிழகத்தில் மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த இலங்கை தமிழ் இளைஞர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ராணி என்ற பெண் ஒரு மகன், மூன்று பெண் பிள்ளைகளுடன் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகத்திற்கு சென்று மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கி வசித்து வருகின்றார்.

இந்நிலையில் இலங்கை அகதியான ராணி என்ற பெண்ணின் மகனான 22 வயதுடைய இளைஞர் நிரோஷன் கடந்த சில நாட்களாக வேலைக்கு செல்லாமல் நண்பர்களுடன் சேர்ந்து செல்போனில் கேம் விளையாடி சுற்றித் திரிந்துள்ளார்.

இதையடுத்து ஆத்திரமடைந்த தாய், தனது மகனை கேம் விளையாடுவதை விட்டு விட்டு வேலைக்கு செல்லுமாறு கண்டித்துள்ளார்.

இதையடுத்து தாயின் கண்டிப்பால் மனம் உடைந்த ஈழத் தமிழ் இளைஞர் நிரோஷன் நஞ்சருந்தியுள்ளார்.

இதையடுத்து மயக்க நிலையில் இருந்த நிரோஷனை அவரது நண்பர்கள் வைத்தியசாலையில் அனுமதித்து அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து உயிரிழந்த ஈழத் தமிழர் இளைஞரின் உடலை உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமிற்கு கொண்டு வரும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இது குறித்து உயிரிழந்த ஈழத் தமிழர் இளைஞரின் சகோதரி பிரியா கொடுத்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# சிபெற்கோ நிரப்பு நிலையங்களில் 90 வீதமானவை மூடப்பட்டுள்ளன

கொழும்பு, ஜூலை. 03

எரிபொருள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து, இலங்கை கனிய எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கத்தினருக்கும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையே நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

எரிபொருள் கிடைக்காமையால் முகங்கொடுத்துள்ள பிரச்னைகள் தொடர்பில், இலங்கை கனிய எண்ணெய் விநியோகஸ்தர்களினால், இதன்போது பிரதமருக்கு விரிவான விளக்கமளிக்கப்பட் டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன நிரப்பு நிலையங் களில், 90 சதவீதமானவை தற்போது மூடப்பட்டுள்ளன.

கையிருப்பில் உள்ள எரிபொருளை, அத்தியாவசிய சேவைகளுக்கு விநியோகிப்பதற்காக, எஞ்சியுள்ள 10 சதவீத நிரப்பு நிலையங்கள் திறக்கப் பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில், இந்த கலந்துரையாடலில், வங்கிக் கடனை மீளச் செலுத் தல் மற்றும் ஊழியர்களுக்கு வேதனம் வழங்குதல் உள்ளிட்ட பிரச்சினைகளை இலங்கை கனிய எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கம், பிரதமரின் கவனத்துக்கு கொண்டு சென்றது.




இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற பிரதமர் அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க, பெரும்பாலும் 15 ஆம் அல்லது 16ஆம் திகதி நாட்டுக்கு எரிபொருள் கப்பல் வரும் என எதிர்பார்ப்பதாக கூறியுள்ளார்.

இதேவேளை, லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நேற்று முன்தினம் சுமார் 200 நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்க நடவக்கை எடுத்த நிலையில், நேற்றைய தினமும் அந்தப் பணிகள் தொடர்ந்ததாக தெரிவிக் கப்பட்டது. (அ)

# நான்கு கோடி ரூபாய் பெறுமதி கொண்ட தங்கப்பாளங்களுடன் இலங்கையர் கைது

கொழும்பு, ஜூலை. 03

நான்கு கோடி ரூபாய் பெறுமதியான தங்கப்பாளங்களுடன் டுபாயில் இருந்து வந்த இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை டுபாயிலிருந்து விமானம் மூலம் நாட்டை வந்த குறித்த நபரிடமிருந்து 16 தங்கப் பாளங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி 4 கோடியே 72 இலட்சத்து 11 ஆயிரம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. (அ)

# வாழைச்சேனையில் ஒருவர் ஹெரோயினுடன் சிக்கினார்

மட்டக்களப்பு, ஜூலை.03

வாழைச்சேனையில் வைத்து 38 வயதுடைய நபரொருவர் ஹெரோயின் போதைபொருளுடன் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கதிரவெளி விஷேட அதிரடிப் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது மக்களடி வீதி, வாழைச் சேனை-4 எனும் முகவரியில் வைத்து போதைப்பொருளை விற்பனை செய்ய முற்பட்ட வேளை இவர் கைது செய்யப் பட்டார்.

இவரிடமிருந்து 11 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்ற நடவடிக்கைகாக வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
03.07.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆனி 19

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கலவரங்களுக்கான வாய்ப்புக்கள்?

நாளுக்கு நாள் நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன. எவராலும் நாட்டை, ஒரு கட்டத்திற்கு மேல் முன்கொண்டு செல்லக் கூடிய சூழல் காணப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் ஆரம்பத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர்களும், இப்போது சோர்வடைந்திருக்கின்றனர். இந்த நிலையில் மீளவும் கலவரங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் எச்சரிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அதற்கான வாய்ப்புக்களை புறம்தள்ள முடியாது. ஏனெனில் மக்கள் மத்தியில் விரக்திநிலை அதிகரித்து வருகின்றது. அது உச்சநிலையடைந்தால், நிலைமைகள் மோசமடையலாம்.

இதன் ஆரம்ப கட்டமாகவே ஆங்காங்கே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முற்றிலுமாக படையினரின் வசமாகியிருக்கின்றன. இதுவரையில் படையினருக்கும் பொது மக்களுக்குமிடையில் மோதல்கள் இடம்பெறவில்லை. ஆனால் எரிபொருளுக்கான நீண்ட வரிசை நிலைமை சரிசெய்யப்படாவிட்டால், எவ்வேளையிலும் நிலைமைகள் மாறலாம். இது தொடர்பில் அரச நிர்வாகத்தினர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

சிறிலங்காவின் தற்போதைய நிலைமையை பொறுத்தவரையில், எரிபொருளுக்கான நீண்ட வரிசையையே உடனடியாக தீர்க்கப்பட வேண்டி பிரச்னையாகும். எரிபொருளுக்கான நீண்ட வரிசைதான், அனைத்து பிரச்னைகளுக்குமான அடிப்படையான பிரச்னையாகும். இந்த நீண்ட வரிசைகளே, சிறிலங்காவின் சீர்குலைவின் அடையாளமாக இருக்கின்றது. நீண்ட வரிசைகளே, சிறிலங்காவின் ஸ்திரமற்ற நிலையை எடுத்துரைக்கின்றது. இந்த நிலையில், மக்களுக்கு தெரிந்த ஒன்றாக முரண்படுவதும் மோதுவதுமே மிச்சமாகிப் போகலாம்.

இனியொரு கலவரம் ஏற்பட்டால், நிலைமைகள் கட்டுப்படுத்த முடியாதளவிற்கு மோசமடையலாம். ஏனெனில் முன்னர் இடம்பெற்ற வன்முறைகள் கட்டுக்குள் இருந்தது. அதேவேளை, வன்முறைகளுக்கு தெளிவான அரசியல் இலக்கும் இருந்தது. வன்முறைகள் அரசியல் இலக்கை கொண்டிருக்கும் போது அதன் தன்மை முற்றிலும் வேறானது. ஆனால் வன்முறைகள் லும்பன்களால் கட்டுப்படுத்தப்படுமாக இருந்தால் அதன் தன்மை முற்றிலும் வேறாக இருக்கும். ஒரு வேளை வன்முறைகள் மீளவும் வெடிக்குமாக இருந்தால், அதன் தாக்கம் கடுமையானதாக இருக்கலாம்.

பொதுவாக பொருளாதார நெருக்கடிகளை ஆட்சியாளர்களால் கட்டுப்படுத்த முடியாமல் போகின்ற போது, வன்முறைகளை ஒரு கட்டத்திற்கு மேல் தடுக்க முடியாமல் போகும். சிறிலங்காவின் நிலைமையும் அவ்வாறானதொரு ஆபத்தான கட்டத்தை எட்டிவிட்டது. ரணில் விக்கிரமசிங்கவே இறுதி நம்பிக்கையாக இருந்தார். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளும் பெரியளவில் வெற்றிபெறவில்லை. இதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒரு காரணமாக இல்லாவிட்டாலும் கூட, நெருக்கடிநிலையை கையாளும் வாக்குறுதியோடுதான், ரணில் பொறுப்புக்களை ஏற்றிருந்தார். இந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகவும் குரல்கள் வலுவடைகின்றன. ரணில் வெறுமனே ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் நோக்கோடுதான், இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டாரா என்னும் பழைய விமர்சனம் மீளவும் உத்வேகம் பெறுகின்றது.

ஒட்டு மொத்தத்தில், மீட்பர்கள் தொடர்பான நம்பிக்கைகள் எவையும் மக்களை ஈர்க்கவில்லை. மீட்பர்கள் தொடர்பான அனைத்து நம்பிக்கையூட்டல்களும் பொய்த்துவிட்ட சூழலில்தான், வன்முறை தொடர்பான எதிர்வுகூறல்கள் வெளிவருகின்றன. இதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. எடுத்துக் கொள்ளவும் கூடாது. இவ்வாறான சூழலில் தமிழ் அரசியல் தலைவர்கள் என்போரும், சிவில் சமூகமும் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில், மோசமான நெருக்கடிகள் அனைத்தையும் சர்வநாசமாக்கிவிடக் கூடியவை. அதே வேளை, தமிழ் மக்கள் வன்முறைகளுக்கு பலியாகிவிடக் கூடாது. சிறிலங்காவின் கட்டமைப்புக்கள் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒரே மாதிரியாக நோக்கிய வரலாற்றில்லை. இதனையும் தமிழ் தரப்புக்கள் மறந்துவிடக் கூடாது.

# ஏலியன்கள் - பறக்கும் தட்டுகள் புதிர்கள் இன்னும் நீடிப்பது ஏன்?

*பிரபஞ்சத்தில் வேற்றுக்கிரகவாசிகளுக்கான தேடல் என்பது மிகவும் சுவாரசியமான தேடல்களில் ஒன்றாகும். யு. எவ். ஓ. என்ற அடையாளம் புலப்படாத பறக்கும் மர்ம பொருட்கள் மற்றும் வேற்றுகிரகவாசிகள் முதல் செவ்வாய் கிரகத்தில் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் வரை, வேற்றுகிரகங்களில் எந்த வகையான உயிர்கள் இருக்கும், அவை எப்படி இருக்கும், வளரும் போன்ற ஊகங்களுக்கு முடிவே இல்லை. இந்த வேற்றுகிரகவாசிகள் பூமியில் உள்ள பண்டைய நாகரிகங்களைச் சந்தித்திருக்க வேண்டும் என்று இணையத்தில் பல காணொளிகள் உள்ளன. இல்லையெனில், “மாயன்கள்” இத்தகைய அற்புதமான கோயில்களை எப்படி கட்டியிருப்பார்கள் என்ற கேள்வி உள்ளது.*

*ஆனால், இதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஒருவர் கி. மு. 250ஆம் ஆண்டிலிருந்து மாயன் சமூகத்தில் இருந்திருந்தால், அது அவருக்கு மிகுந்த அவமானமாக இருக்கும்.*

*ஆனால், வேற்றுக்கிரகவாசிகள் குறித்த சுவாரசியமான கோட்பாடாகவும், அதிக நம்பகத்தன்மை கொண்ட ஒன்று உள்ளது. அது பன்ஸ்பெர்மியா என்ற கோட்பாடு.*

*அது என்ன கோட்பாடு?அதாவது, பிரபஞ்சம் முழுவதும் உயிர்கள் உள்ளன. அவை பிரபஞ்சத்தில் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு விண்வெளியில் பயணம் செய்ய முடியும் என்பதே அந்த கோட்பாடு.*

*இந்தக் கூற்று உறுதியாக நிரூபிக்கப்படவில்லை என்றாலும், எம்.ஐ.டி மற்றும் ஹார்வர்ட் பல்கலைகழகங்களில் முக்கிய ஆராய்ச்சியாளர்கள் குழு, சில வகையான உயிர்கள் உண்மையில் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பப்பட்டதா என்ற கூற்றை ஆராய்ந்து வருகின்றனர்.*

*உயிர்கள் நம்ப முடியாத அளவுக்கு சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றியமைக்கக் கூடியவை. நமது மனித இனமே உலகம் முழுவதும் வளர்ந்த விதத்தைப் பாருங்கள் . மேலும் ஆர்க்கியா மற்றும் பற்றீரியா போன்ற நுண்ணுயிரிகள் மில்லியன் கணக்கான ஆண்டுகால பரிணாம வளர்ச்சியில் தங்களை மாற்றியமைக்க முடிந்தது.*

*சல்பர், அமோனியா, உலோக மங்கனீசு ஆகியவை கொண்டும், பிராணவாயு இருக்கும் அல்லது இல்லாத சூழ்நிலையிலும், இன்று பல்வேறு வகையில் உயிர்வாழக்கூடிய நுண்ணுயிரிகள் உள்ளன என்பதே இது குறிக்கிறது. சில உயிர்கள் பூமியில் உள்ள மிக மோசமான சூழ்நிலையிலும் உயிர்வாழ்கின்றனர்.*

*இந்த மிகச்சிறிய நுண்ணுயிரிகள் பிரபஞ்சத்தின் மற்ற கிரகங்களுக்கு எப்படி பயணம் செய்யும்? நமது சூரிய குடும்பத்தையும் அதற்கு அப்பாலும் ஆராயும்போது நமக்கு இதற்கான விடை கிடைப்பது எளிது.*

*டெர்சிகோகஸ் பீனிசிஸ்* ( Tersicoccus phoenicis ) *என்பது விண்வெளி சென்று வந்த நாசா விண்கலத்தை சுத்தம் செய்யும்போது கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பற்றீரியா ஆகும். தற்செயலாக பூமியிலிருந்து சந்திரனுக்கும் செவ்வாய் கிரகத்திற்கும் பற்றீரியாவை ஏற்கனவே அறிமுகப்படுத்தியிருக்க முடியுமா?*

*இந்த நுண்ணுயிரிகள் சூரிய குடும்பத்தைச் சுற்றி வருவதற்கான மற்றொரு சாத்தியமான வழி விண்கற்களில் ஹிட்ச்ஹைக்கிங் செய்வதாகும். இவை ஒரு கிரகத்தில் மோதும்போது, பாறைகளும் சிதைபொருள்களும் விண்வெளியில் சிதறி, அதிக விண்கற்களை உருவாக்குகின்றன.*

*இதுவரை, செவ்வாய் கிரகத்தின் 313 விண்கற்கள் பூமியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் , பூமியில் இருந்த பாறை நிலவில் காணப்பட்டது. பாறைகள் கிரகங்களில் பயணித்திருக்கிறது என்பதை இதில் இருந்து அறிந்துகொள்ளலாம்.*

*விண்வெளியில், குளிர் மற்றும் பிராணவாயு பற்றாக்குறையை இத்தகைய நுண்ணுயிரிகள் எளிதில் சமாளிக்க முடியும். மேலும் வழக்கமான பற்றீரியாக்கள் கூட தீவிரமான சூழ்நிலைகளில் கீழ் செயலற்ற நிலைக்குச் செல்லலாம். அப்போது, நுண்ணுயிரி விதைகள் எனப்படும் அவற்றின் டி.என்.ஏ அதற்கு பாதுகாப்பான உட்புற அறைகளை உருவாக்குகின்றன.*

*வெப்பம், குளிர், அமிலம், வறட்சி மற்றும் புறஊதாக் கதிர் ஆகியவற்றை பற்றீரியாவின் டிஎன்ஏ விண்வெளியில் பயணிக்க சாத்தியமாக்குகின்றது. மற்றொரு பெரும் சிக்கல் என்னவென்றால், விண்வெளியில் கதிர்வீச்சு நிறைந்து, டிஎன்ஏவை துண்டாடுகிறது. டீனோகோகஸூக்கு* (Deinococcus) *என்பது ஒரு பிரச்சனை இல்லை. இதன் வகையைச் சார்ந்தவை விண்வெளியில் மூன்று வருடங்கள் இருந்துள்ளன. மற்றவை நுண்ணுயிரி விதைகள் வடிவில் ஆறு ஆண்டுகள் வரை உயிர் பிழைத்துள்ளன.*


*2020 ஆம் ஆண்டில், ஜப்பானிய விஞ்ஞானிகள் 100 மில்லியன் ஆண்டுகளாக கடலின் அடிப்பகுதியில் செயலற்ற நிலையில் இருந்த பற்றீரியாக்களை உயிர்ப்பித்தனர். இந்த சிறிய விண்வெளி பயணிகளுக்கு அசாதாரணமான தூரங்கள் ஒரு பிரச்னையாக இருக்காது.*

*இறுதியாக, பிரபஞ்சத்தின் புதிய இடங்களுக்கு பயணிக்கும் பற்றீரியாக்கள் அதன் தாக்கத்தை தாங்குவதாகும். பற்றீரியாக்கள் அதைச் செய்ய முடியும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அவை அண்டப் பாறையில் மோதும் போது, அந்த தாக்கத்தை தாங்கியுள்ளது.*

*நுண்ணுயிர்கள் செவ்வாய் கிரகம் போன்ற கிரகங்களில் எங்காவது பயணித்திருக்க சாத்தியம் உள்ளது. 3.8 பில்லியன் ஆண்டுகள் முன்பு, செவ்வாய் கிரகம் பூமியைப் போலவே இருந்தன என்ற அடிப்படையில் இது நிகழ்ந்திருக்கலாம்.*

*அவை சிறிய வேற்றுகிரகவாசிகளாகவோ அல்லது நாம் புரிந்துகொண்டபடி அறிவார்ந்த உயிரினங்களாகவோ இல்லாமல் இருக்கலாம். ஆனால், சூரிய குடும்பம் மற்றும் அதற்கு அப்பால் உயிர்கள் பயணம் செய்திருக்கக் சாத்தியக்கூறுகள் இருக்கலாம். இது மிகவும் புதிரானவை.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -36

# உடனடியானதொரு மாற்றம்

கணபதி சர்வானந்தா

எம்மில் பலர், வலிகளின் உச்சங்களை உணரும்போது வாழ்க்கையின் மீது அவநம்பிக்கை கொள்கின்றனர். வெறுப்பின் உச்சத்தை அடைகின்றனர். இவை சமூகத்தில் இயல்பாக நடப்பவை. அதனின்று விடுபட்டு, கால மாற்றத்துக்கேற்றவாறு சிந்திப்பதற்கு நாம் எம்மைத் தாயராக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு உதவுவதாகவே சிலவற்றைப் பகிர்ந்து கொள்கிறேன்.

பெருநோய்த்தொற்றொன்றினால் இடர்களை அனுபவித்துக் கடக்க முன்னர் ஒரு பாரிய பொருளாதாரச் சிக்கலை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குள் நாம் இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறோம். முன்னர் சிறிய விடயங்களாகக் கண்ட பலவற்றைத் தற்போது பெரிய வடிவில் பார்க்கவும், அதனை எதிர்கொள்ளவும் காலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாம் விரும்பியோ அல்லது விரும்பாமலோ அதனையும் கடந்தாக வேண்டும். இலகுவில், லேசாக, வலிகளை உணராது அதனைக் கடக்கவேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? மாற்றங்களைச் செய்தாக வேண்டும்.

அதுவும் உடனடியாக நாம் மாறியாக வேண்டும். எம்மிடம் நாம் காணும் பழக்க வழங்கங்கள் எம்மோடு ஒட்டிப் பிறந்தவை அல்ல. அனைத்தும் நாம் பழகிக் கொண்டவை. இங்கிருந்து எடுக்கப்பட்டவை. எமது வசதிக்கேற்றவாறு நாம் ஏற்படுத்திக் கொண்டவை. நோயின் உச்சக் கட்டத்தை அடையும்போது வைத்தியரின் ஆலோசனைக்கேற்றவாறு சிலவற்றை ஏற்றுக் கொள்கிறோம். சிவற்றை விட்டுவிடுகிறோம். ஏனெனில் நோயில் இருந்து விடுபட வேண்டும் என்ற சிந்தனை மட்டுமே அதற்குக் காரணம்.

அந்த வகையில்...! அனைத்திலும் அறம் வேண்டும். அறத்தினூடாகப் பெறும் அனுபவங்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களாக நாம் மாற வேண்டும். வலிகளை வலிமையாக்கித் தொடர்ந்து பயணிப்பதே காலத்தின் தேவை என நான் உணர்கிறேன்.

தன்னால் முடியவில்லை என்ற கைவிரிப்புடன் வளங்களை வழங்குவதை அரசு மட்டுப்படுத்தியிருக்கிறது. முக்கியமாக எரிபொருளை வழங்குவதில் அரசு பெரும் சிரமத்தை எதிர் நோக்குவது தெரிகிறது. அதற்கென உருவாக்கியிருக்கும் தற்காலிகப் பொறிமுறையானது எந்த அளவுக்கு வெற்றியளிக்கும் என்பது கூட அரசுக்குத் தெரியாது. ஆனால் அதற்கான பதிவுகளை அவர்கள் தொடர்கின்றனர்.

கடந்தவாரம் சுகாதாரத்துறைக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டது. அதிலும் அவர்கள் திருப்தியடைந்ததாக இல்லை. பல மணி நேரக் காத்திருப்பில் சிறு துளிகளை மட்டுமே அவர்கள் பெற்றுக் கொண்டவர்களாக வீடு திரும்பியதைப் பார்க்க முடிந்தது.

எனவே சுகாதாரத்துறையினரின் செயற்பாடுகள் எந்நேரத்திலும் ஸ்தம்பிக்கலாம். வசாயிகளின் நிலையும் அப்படியே. எரிபொருள் தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையற்றவர்களாகப் பலர் பயிரிடுவதை நிறுத்தியுள்ளனர். எனவே காய்கறிகளுக்கு எந்நேரத்திலும் தட்டுப்பாடு ஏற்படலாம். இது போன்று அனைத்துத் துறைகளும் தடைகளைக் கொண்டதாக...

எனவே உடனடியாக மாற்று ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். அந்த மாற்றங்கள் நிகழும் வரை இருப்பவற்றை வைத்துக் கொண்டு முன் செல்வது எப்படி? என்ற அடிப்படையில் துறைசார் நிபுணர்களிடமிருந்து சமூகம் பலவற்றை எதிர்பார்க்கிறது. அவர்களிடமிருந்து பெறுமதிமிக்க ஆலோசனைகள் வரும் என்ற நம்பிக்கையில் மக்கள் காத்திருக்கின்றனர். நிபுணர்கள் பலரைக் கொண்டு இயங்குகின்ற பல்கலைக் கழகங்களின் பங்களிப்பில் மக்கள் அதீத நம்பிக்கை கொண்டுள்ளனர். உடனடியான மாற்றங்களை உண்டாக்குவது என்ற அடிப்படையில் அவர்கள் பகிர்ந்தளிக்கக் கூடிய ஆலோசனைகள் தற்காலப் பொருளாதார முடக்கத்துக்குத் தகுந்த மாற்றீடாக அமையும் என்பது மக்கள் எதிர்பார்ப்பு.

இடர் காலத்தேதான் பல புதிய சிந்தனைகைள் பிறந்ததாகவும் புதிய உருவாக்கங்கள் பல நிகழ்ந்ததாகவும் வரலாறு. அவற்றினுடாகப் பல சமூக மாற்றங்கள் ஏற்பட்டதாகச் சரித்திரம் சொல்கிறது. அந்தவகையில் கடந்த 2009 க்கு முற்பட்ட காலத்தை நோக்கி எமது எண்ணங்களை நகர்த்திக் கொண்டால்... இவை ஒன்றும் எமக்குப் புதிதல்ல என்றே சொல்லத் தோன்றும்.

இருக்கின்ற வளத்துக் கேற்றவாறு சிந்திப்பது. அதனைக் கொண்டு செயற்படுத்துவது. அதற்கூடாக ஒரு ஆரோக்கியமான சமூக மாற்றத்தைக் கொண்டு வருவது. இவை இந்த மண்ணில் நடைபெற்ற விடயங்கள்.

அதன் பலாபலன்களை அனுபவித்தவர்கள். ஒரு கால எல்லைக்குள் அதனை நாம் கற்றுக் கொண்டோம். கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் நாம் பலவற்றைச் செயற்படுத்திக் காட்டியவர்கள். அந்த அனுபவங்கள் இன்னும் எம் மத்தியில் விதைகளாக உண்டு. அவற்றை விதைப்பதற்கு இதுவே நல்ல சந்தர்பம். அந்த அடிப்படையில் நாம் சிந்திக்கத் தொடங்கலாம்.

# இந்தவார ராசிபலன் 03.07.2022 - 09.07.2022

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சதுர்த்தி

ஜுலை 03 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 19

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

செயல்களில் வேகம் உண்டாகும். யோசித்து செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி பலிதமாகும். அரசு வகையிலான செயல்கள் ஆதாயத்தை உண்டாக்கும். தொழில் சுமாராக செல்லும். திட்டமிட்ட பணிகள் நிறைவேறும். செலவிற்கேற்ற வருமானம் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சி பலிதமாகும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். ஒரு சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். பணியிடத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். எதிர்பார்த்தவற்றில் நன்மையான பலன்களை காண்பீர்கள். மனம் குழப்பத்திலிருந்து விடுபடும். திடமான சிந்தனையுடன் தைரியமாக செயல்பட்டு நினைத்தவற்றில் நன்மைகள் அடைவீர்கள். எதிர்ப்புகள் விலகும். ஆதாயம் அதிகரிக்கும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செயல்களில் இழுபறி இருக்கும். டென்ஷன் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும். நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். வராமல் இருந்த பணம் வசூலாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். நண்பர்களின் உதவியுடன் தொழிலை விரிவு செய்வீர்கள். குடும்ப நலனில் கவனம் செல்லும். சேமிப்பில் இருந்து புதிய சொத்துகள் வாங்கும் முயற்சியை மேற்கொள்வீர்கள். வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு புதிய வேலை அமையும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

முயற்சிகள் வெற்றியாகும். செயல்களில் நிதானமும் கவனமும் தேவை. புதிய சொத்துகள் வாங்குவீர்கள். தொழிலில் வருமானம் அதிகரிக்கும் நிதி நிலை உயரும். ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நன்மையாகும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள் என்றாலும் அலைச்சல் அதிகரிக்கும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எதிர்பாராத செலவுகள் உண்டாகும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். தைரியத்துடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். குடும்ப வழியில் செலவுகள் அதிகரிக்கும். ஒருசிலர் புதிய வாகனம் வாங்குவீர்கள். ஒரு சில செயல்களை யோசிக்காமல் செய்து சங்கடம் அடைவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். திறமை வெளிப்படும். நீண்ட நாட்களாக மனதை வாட்டிக்கொண்டிருந்த பிரச்சினைகள் விலகும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். எதிர்பார்த்த வரவுகளால் சேமிப்பு உயரும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணமும் ஆடம்பர செலவுகளும் உண்டாகும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். வருவாய் அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். உறவினர் வீடுகளுக்கு செல்லுதல் என்று மகிழ்ச்சி அடைவீர்கள். விருப்பங்கள் நிறைவேறும் வாரம் இது. வரவுகள் அதிகரித்து நிதி நெருக்கடிகள் விலகும். திருமண வயதினருக்கு வரன் வரும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய வாரம். சட்டத்திற்கு புறம்பான செயல்களைத் தவிர்ப்பது நன்மையாகும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். தொழில் சம்பந்தப்பட்ட முயற்சி ஆதாயமாகும். எதிர்பார்த்த வருவாய் வரும். திட்டமிட்ட செயல்களை நிறைவேற்றி லாபம் காண்பீர்கள். பிற்பகுதியில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் நெருக்கடிகள் உண்டாகும். சிந்தித்து செயல்பட வேண்டிய வாரம்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நினைத்தவற்றை சாதித்து முடிப்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். நிதிநிலை சீராகும். புதிய முயற்சிகள் பலிதமாகும். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடங்கள் அகலும். குடும்பத்தில் நன்மையான நிலை உண்டாகும். முயற்சிகளில் இருந்த தடைகள் விலகும். உறவினர்களின் ஆதரவு அதிகரிக்கும். தொழிலை விருத்தி செய்து லாபம் காண்பீர்கள். துணிச்சலாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் செயல்களில் விழிப்புணர்வு தேவை. புதிய முயற்சிகள் வேண்டாம். உறவினர்கள் நண்பர்கள் என்று யாருடைய உதவியையும் எதிர்பார்க்க முடியாமல் போகும். சிந்தித்து செயல்பட வேண்டிய வாரம். உழைப்பு அதிகரிக்கும். போட்டிகளை சமாளிக்க வேண்டியதாக இருக்கும். முயற்சிகளில் இழுபறியான நிலையை சந்திப்பீர்கள். கடுமையான முயற்சிகளுக்குப் பின் சில நன்மைகளை அடைவீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

முயற்சிகளில் வெற்றி உண்டாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். நெருக்கடிகள் குறையும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். முயற்சிக்கேற்ப செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். முயற்சிகள் ஒவ்வொன்றாய் நிறைவேறும். செயல்களில் இருந்த சங்கடங்கள் விலகும். வாழ்க்கைத்துணையின் கருத்துடன் ஒத்துப் போவீர்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

புதிய சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நிதானமும் அமைதியும் அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்மையாகும். தைரியத்துடன் செயல்பட்டு உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள் . நெருக்கடிகளும் சங்கடங்களும் தோன்றும் என்பதால் செயல்களில் நிதானம் தேவை. முயற்சிகள் நிறைவேறி ஆதாயத்தை வழங்கும். உங்கள் செயல்களில் எதிர்பார்த்த நன்மையைக் காண முடியாமல் போகும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மனதில் இருந்த குழப்பங்கள் விலகி தெளிவுடன் செயல்படுவீர்கள். பணி நிமித்தம் ஒரு சிலர் வெளியூர் செல்ல வேண்டி வரும். தொழிலை அபிவிருத்தி செய்யும் முயற்சி வெற்றி பெறும். வரவு செலவுகளில் ஏற்பட்ட சிக்கல் தீரும். புதிய நட்புகள் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருங்கள். மனதில் தெளிவு உண்டாகும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். ஆரோக்கியத்தில் சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்சினைகள் விலகும்.

# விடாமுயற்சி, தன்னம்பிக்கையுடன் சாதித்துக்காட்டிய ஈழஅகதி மாணவன்!

## சென்னையில் ரிசிஎஸ் நிறுவனத்தில் இப்போது பணியில்!!

தமிழகத்தின் தற்போதைய பள்ளிக் கல்வி ஆணையர் கே. நந்தகுமார் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆட்சித் தலைவராக இருந்தபோது, அரசுப் பள்ளி மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்ட எலைட் ஸ்கூல் திட்டத்தின் கீழ் படித்து, அரசுப் பள்ளியில் முதல் ரேங்கில் தேர்ச்சி பெற்று, ஜி. விஸ்வநாதனின் விஐடி பல்கலைக்கழகத்தின் ஸ்டார்ஸ் திட்டத்தின் கீழ் அந்தப் பல்கலைக்கழகத்தில் பி.டெக். படிப்பை இலவசமாகப் படித்து, தற்போது ரிசிஎஸ் நிறுவனத்தில் வேலை செய்கிறார், ஈழப் போர் காரணமாக புலம் பெயர்ந்து, மண்டபம் அகதி முகாமில் இருந்து வந்த ஈழத் தமிழ் மாணவர் எஸ். சாயீசன்(25).

அவர், தனது வாழ்க்கைக் கதையை நம்மிடம் பகிர்ந்துகொண்டார்:

நான் பிறந்தது யாழ்ப்பாணம். எனது அம்மா புவனேஸ்வரி திரிகோணமலையில் அரசுப் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தார். அங்குள்ள அரசுப் பள்ளியில், அதாவது தேசியப் பாடசாலையில் எட்டாவது வகுப்பு வரைப் படித்தேன். 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ஈழப் போர் காரணமாக, அங்கு வாழ முடியாத சூழல் ஏற்பட்டது. உயிருக்குப் பயந்து, அங்குள்ள வீட்டையும் எங்களது நிலத்தையும் எங்களது உடைமைகளையும் அப்படியே விட்டு விட்டு ராமேஸ்வரம் வந்தோம். எங்களிடம் இருந்தது, அம்மாவின் தோடும், பத்தாயிரம் ரூபாய் பணம் மட்டுமே. புலம் பெயர்ந்து வந்த நாங்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டோம். நாங்கள் சாப்பிடுவதற்கு அரசு சார்பில் ரேஷன் பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் மாதம் 750 ரூபாயை உதவித் தொகையாக அரசு வழங்குகிறது. தற்போது ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள்.

அம்மா டீச்சர் வேலை பார்த்த அனுபவம் இருந்தாலும், எங்களது வாழ்வாதாரத்துக்காக ஏதாவது வேலையைச் செய்தாக வேண்டிய கட்டாயம் அம்மாவுக்கு இருந்தது. அப்போது கடல் பாசி கம்பெனியில் ஒரு நாளைக்கு 100 ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. அங்கு சுமார் ஓராண்டு வரை வேலை பார்த்த அம்மா, பின்னர் இறால் கம்பெனியில் வேலைக்குப் போனார். அப்புறம் கட்டட வேலைக்குப் போனார். பிறகு கருவாட்டு கம்பெனியில் வேலைக்குப் போனார். அங்கு கருவாட்டு மூட்டைகளைத் தூக்க வேண்டும். இப்படி கஷ்டமான வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து வந்தோம்.



இதற்கிடையே, மண்டபம் முகாமில் இருந்த அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ் வழியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்தேன். பள்ளியில் நான் நன்றாகப் படித்தேன். பள்ளியில் சேர்ந்த பிறகு, முதலில் இரண்டாம் பருவத்தேர்வில் இரண்டாவது ரேங்க் பெற்றேன். பின்னர் அரையாண்டுத் தேர்வில முதல் ரேங்க். 2012இல் பத்தாம் வகுப்புத் தேர்வை எழுதினேன். அந்தத் தேர்வில் 500க்கு 441 மதிப்பெண்கள் பெற்று பள்ளியிலேயே முதல் ரேங்க் பெற்றேன். அந்தப் பள்ளியில் படிக்கும் போது அந்தப் பள்ளி ஆசிரியர்கள் மலைப்பாண்டி சார், கோகிலா டீச்சர் ஆறுமுகம் சார், சுவாமிநாதன் சார், விமலராணி டீச்சர், ஹெலன் டீச்சர் ஆகியோர் எனக்கு ஆதரவாக இருந்து நான் படிப்பதற்கு ஊக்கமளித்தார்கள் என்பதை நன்றியுடன் சொல்ல வேண்டும்.

நான் படித்த அரசு மேல்நிலைப் பள்ளியில் கணிதம், உயிரியல், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடப்பிரிவுகளை எடுத்துப் படித்தேன். பதினோராம் வகுப்பு முடியும் தருவாயில், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த நந்தகுமார் சார், அரசுப் பள்ளி மாணவர்களை பிளஸ் டூ தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுக்க வைப்பதற்காக எலைட் ஸ்கூல் திட்டத்தைத் தொடங்கினார். அப்போது, ராமநாதபுரத்தில் உள்ள நகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகளில் அந்த மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெற்றன. அரசுப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் முதல் ரேங்க் என்பதால் எனக்கு அந்தப் பள்ளியில் சேர இடம் கிடைத்தது. இந்தப் பள்ளியில் சேர, அரசுப் பள்ளி மாணவர்கள் 22 பேர் தேர்வு செய்யப்பட்டனர். கணித ஆசிரியர் நவநீதகிருஷ்ணன், விலங்கியல் ஆசிரியர் ஆறுமுகம், இயற்பியல் ஆசிரியர் குமார், வேதியியல் ஆசிரியர் ஞானப்பிரகாசம், தமிழ் ஆசிரியை தமிழரசி, ஆங்கில ஆசிரியை ஜான்சி ராணி ஆகியோர் எங்களுக்கு பாடங்களை நன்றாகச் சொல்லித் தருவார்கள். தங்களது குழந்தைகளைப் போல நினைத்து எங்களது படிப்பில் தீவிர அக்கறை செலுத்தினார்கள். சில ஆசிரியர்கள் இரவு நேரம் என்று கூட பார்க்காமல் எங்களுக்குப் பாடம் நடத்துவார்கள். எங்களது சந்தேகங்களைப் போக்குவார்கள். வாரந்தோறும் நந்தகுமார் சார் எங்களது பள்ளிக்கு வந்து எங்களை நேரில் சந்தித்து தன்னம்பிக்கையூட்டுவார்.

பிளஸ் டூ தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காகத் தீவிரமாகப் படித்தேன். 2014இல் நடைபெற்ற பிளஸ் டூ தேர்வில் 1200க்கு 1088 மதிப்பெண்கள் கிடைத்தது. ஆர்க்காவனூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலேயே முதல் ரேங்க் நான்தான். இயற்பியல், வேதியியல் பாடங்களில் தலா 196 மதிப்பெண்களும் கணிதத்தில் 195 மதிப்பெண்களும் உயிரியலில் 185 மதிப்பெண்களும் பெற்றேன். பொறியியல் படிப்பில் சேருவதற்கான எனது கட் ஆஃப் மதிப்பெண்கள் 195.75.

ராமநாதபுரம் நகராட்சிப் பள்ளி ஆசிரியை திலகவதி டீச்சரும் என் மீது அக்கறை கொண்டு, எனது படிப்பு குறித்து கேட்டு எனக்கு ஊக்கமளிப்பார். அரசுப் பள்ளியில் முதல் மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களுக்கு விஐடி பல்கலைக்கழகத்தின் ஸ்டார்ஸ் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்து இலவசமாகப் பொறியியல் படிப்பை வழங்குகிறார்கள் என்ற தகவலையும் சொன்னார். அதையடுத்து அந்தப் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்தேன். எனக்கு பி.டெக். புரடக்ஷன் அண்ட் இன்டஸ்ட்ரியல் என்ஜினியரிங் படிப்பில் இடம் கிடைத்தது.

புலம் பெயர்ந்து அகதியாக தமிழ்நாடு வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் என்னைப் போன்ற ஏழை மாணவர்களுக்கு படிப்புதான் ஏணிப்படி. பிளஸ் டூ முடித்ததும் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர முடியாது. அரசு ஒதுக்கீட்டின் கீழ் பொறியியல் படிப்பில் ஈழத் தமிழர்களுக்கு இடஒதுக்கீடு உள்ளது. கலைக் கல்லூரியிலும் சேரலாம். ஆனால், படிப்பதற்கு பணம் என்பது முக்கியம். ஏழ்மைச் சூழ்நிலையில் இருந்த எனக்கு இலவசமாகப் பி.டெக். படிக்கும் வாய்ப்பை வழங்கியது விஐடி பல்கலைக்கழகம். அதற்கு வாய்ப்பளித்த பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும். அவரால்தான் பி.டெக் படிப்பை இலவசமாகப் படித்து முடிக்க முடிந்தது.

எலைட் ஸ்கூலில் படித்திருக்காவிட்டால் என்னால் இந்த அளவுக்கு மதிப்பெண் பெற்று, இலவசமாக பி.டெக். படிக்க வாய்ப்பு கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. நந்தகுமார் சாருக்கும் எனக்கு ஊக்கமாக இருந்த ஆசிரியர்கள், அலுவலர்கள் அனைவரையும் எப்போதும் நன்றியுடன் மனதில் நினைத்துக் கொள்வேன்.

2014ஆம் ஆண்டில் விஐடி பல்கலைக் கழகத்தில் சேர்ந்த நான் 2018ஆம் ஆண்டு பி.டெக். படிப்பை முடித்தேன். கேம்பஸ் பிளேஸ்மெண்ட் மூலம் டிசிஎஸ் நிறுவனத்தில் சாப்ட்வேர் என்ஜினியராக வேலை கிடைத்தது. 2018ஆம் ஆண்டு செப்டம்பரில் குஜராத்தில் பயிற்சி பெற்ற நான், அந்த ஆண்டு நவம்பரிலிருந்து சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். எனது அம்மா இன்னமும் மண்டபம் அகதிகள் முகாமில்தான் இருந்து வருகிறார்.

இதற்கிடையில், பள்ளிக் கல்வித் துறையின் மாதிரிப் பள்ளித் திட்டத்தில் தன்னார்வலராக இருந்து வருகிறேன். எங்களது வார விடுமுறை நாட்களில் இந்தப் பணியைச் செய்து வருகிறேன். இதற்கான வாய்ப்பை வழங்கியவர் நந்தகுமார் சார். எலைட் ஸ்கூல் போன்று அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உதவும் வகையில் தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களிடம் நேரடியாகக் கலந்துரையாடுவோம். சாமானியக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் படிப்பினால் உயர முடியும் என்றும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறி அவர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டுவோம். எங்களுக்குப் படிப்பை வழங்கி எங்களைக் கைதூக்கி விட்ட அரசுப் பள்ளிகளுக்கு நாங்கள் செய்யும் சிறிய நன்றிக்கடன் இது என்று கூறும் சாயீசன், அடுத்த ஆண்டில் கனடாவில் வேலை செய்வதற்காக முயற்சி செய்து வருகிறேன் என்கிறார். ●






♦ வீரகத்தி தனபாலசிங்கம்

# பிரகடனப்படுத்தப்படாத முடக்கநிலையில் நாடு





அடுத்துவரும் மாதங்களில் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடையும் என்று பதவியேற்ற நாள் முதல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிவந்தார் அல்லவா? அந்த மோசமான நிலைவரம் வந்துவிட்டது. கிட்டத்தட்ட இலங்கை பிரகடனப்படுத்தப்படாத ஒரு முடக்க நிலையை அடைகிறது. தான் கூறியதன் பிரகாரம் நிலைவரம் மோசமடைவது குறித்து பிரதமர் கவலைப்பட முடியுமே தவிர, தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று திருப்திப்பட முடியாது. இனிமேல் அவர் எதிர்கால நிலைவரம் குறித்து அபாய அறிவிப்புக்களை விடுக்கத் தேவையில்லை. மக்களே வரப்போகின்ற ஆபத்துக்களை முன்னுணரக் கூடிய அளவுக்கு அண்மைய மாதங்களாக போதிய அனுபவத்தைப் பெற்றுவிட்டார்கள்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே தற்போதைக்கு எரிபொருட்கள் விநியோகிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்ததையடுத்து இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எரிபொருட்களுக்காக மக்கள் நிரப்பு நிலையங்களின் முன்பாக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்துக்கிடக்கும் நிலைமையை உண்மையில் அரசாங்கம் இல்லாமல்தான் செய்துவிட்டது.

ஜுலை 10 வரை பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அரசாங்க ஊழியர்களும் தனியார்துறை ஊழியர்களும் வீடுகளில் இருந்து பணியாற்றுமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள். போக்குவரத்துத்துறை ஒரு ஸ்தம்பித நிலைக்கு வருகிறது. வாழ்க்கைச் செலவு கற்பனைசெய்து பார்க்கமுடியாத அளவுக்கு உயர்ந்துகொண்டுசெல்கிறது. எதிர்காலம் அவலங்கள் நிறைந்ததாக இருக்கப்போகிறதே என்று கலங்குவதைத் தவிர மக்கள் நம்பிக்கையுடன் நோக்குவதற்கு எதுவுமில்லை.

ஜுலை 10 எரிபொருட்கள் ஓரளவுக்கேனும் கிடைக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மேலும் இரு வாரங்கள் அரசாங்கம் அவகாசம் கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. இந்தியா வழங்கிய தொடர் கடனுதவியின் கீழான இறுதி எரிபொருள் கப்பல் ஜுன் நடுப்பகுதியில் வந்தது. அதற்கு முன்னரே எரி பொருட்களை பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்கூட்டியே முன்னெடுக்காமல் அரசாங்கம் இப்போது அவசர அவசரமாக தடுமாற்றத்துடன் செயற்படுகிறது. மீண்டும் எரிபொருட்களுக்காக இந்தியாவிடம் கடனுதவி கோரப்படுகிறது.

எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொறுத்தவரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் பிரதமர் விக்கிரமசிங்கவும் ஒருங்கிணைந்து செயற்படுவதாக இல்லை. இரு தரப்புகளும் தனித்தனியாகவே பிரச்சினையை அணுகுகின்றன. எரிபொருட்கள் இறக்குமதி விவகாரத்தை அரசாங்கம் உகந்தமுறையில் கையாளவில்லை.

எரிபொருள் கப்பல்களின் வருகை தொடர்பில் அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்புக்களை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நிரல் ஒழுங்கின்படி சுட்டிக்காட்டி மக்களை அரசாங்கம் ஏமாற்றியிருக்கிறது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறது.

17 ஜுன் 2022 -- 300,000 பீப்பாய்கள் ஒக்ரேன் 92 பெட்ரோலை இறக்குமதி செய்வதற்கு 4 கோடி 26 இலட்சம் டொலர்களுக்கான கடன் பத்திரம் திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

19 ஜுன் - ஜுன் 23, 24 திகதிகளில் முறையே பெட்ரோலையும் டீசலையும் இறக்குமதி செய்வதற்கான 9 கோடி டொலர்கள் கடன் பத்திரம் திறக்கப்பட்டதாக அறிவிப்பு.

ஜுன் 23 - 40,000 மெட்ரிக் தொன் எரிபொருளை ஏற்றிவரும் கப்பல் ஒரு நாள் தாமதமாகும் என்று அறிவிப்பு.

24 ஜுன் - கப்பல் வருவது மேலும் தாமதமாகும் என்று விநியோகஸ்தர்களினால் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டதாகவும் புதிய திகதி அன்றைய தினம் மாலை உறுதிப்படுத்தப்படும் என்றும் அறிவிப்பு.

25 ஜுன் - வங்கி மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் காரணமாக எரிபொருட்களை இலங்கைக்கு கொண்டுவருவதில் தங்களுக்கு இருக்கும் இயலாமையை விநியோகஸ்தர்கள் தெரியப்படுத்தியிருப்பதாக சக்தி, வலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவிப்பு.

இறுதியாக விஜேசேகர எதிர்பார்க்கப்பட்ட கப்பல்கள் வருவது காலவரையறையின்றி தாமதமாகும் என்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் கையிருப்பில் உள்ள எரிபொருட்கள் விநியோகிக்கப்படும் என்று அறிவித்துவிட்டு உதவி கேட்க ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு பறந்துசென்றுவிட்டார். ஜனாதிபதியும் கூட விரைவில் அங்கு விஜயம் செய்யவிருப்பதாக முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வியாழக்கிழமை அறிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைவரம் தொடர்பான ஜனாதிபதி தரப்பு அறிவிப்புக்களை சிறிலங்கா பொதுஜன பெரமுன எம்.பி.க்களும் பிரதமர் தரப்பு அறிவிப்புக்களை அவரின் அலுவலகத்தில் இருக்கும் ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர்களும் அறிவிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இரு தரப்புகளுக்கும் இடையில் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் இல்லை.

30,000 மெட்ரிக் தொன் டீசலுடன் கப்பல் ஜுலை 11 - 15 திகதிகளுக்கிடையில் வரவிருப்பதாகவும் ஜுலை 10 அளவில் பெட்ரோலை பெறுவதற்கு வேறு வட்டாரங்களை நாடியிருக்கின்ற போதிலும் ஜுலை 22 இந்தியாவில் இருந்து பெட்ரோல் கப்பல் வரவிருப்பதாகவும் கடந்த புதன்கிழமை பிரதமரின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஊடக சந்திப்பொன்றில் கூறியதைக் கண்டோம்.

புதிய எரிபொருள் கப்பல்கள் வந்து சேரும் வரை தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருட்கள் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே விநியோகிக்கப்படும் என்றும் லிட்ரோ காஸ் நிறுவனம் அடுத்த நான்கு மாதங்களுக்கு தேவையான 100,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை கொள்வனவு செய்ய விருப்பதால் ஜுலையில் சமையல் எரிவாயுவை மக்கள் பெறுவதில் பிரச்சினை இருக்காது என்றும் அவர் மேலும் கூறினார்.

அதேவேளை, ரஷ்யாவிடமிருந்து எரிபொருட்களை பெறுவதற்காக ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் ஜனாதிபதி ராஜபக்ச தொலைபேசியில் பேசுவதற்கான ஏற்பாடுகள் குறித்து கொழும்பில் உள்ள ரஷ்ய தூதுவருடன் கலந்துரையாடப்பட்டிருப்பதாகவும் ஜுலை 10 க்கு பிறகு தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கான விரிவான பொறிமுறையொன்று வகுக்கப்பட்டிருப்பதாகவும் மகிந்தானந்த கூறினார். இந்திய பிரதமர், பெட்ரோலியம் வளங்கள் அமைச்சர் மற்றும் வெளியுறவு அமைச்சருடன் ஜனாதிபதி அடிக்கடி தொடர்புவைத்துக் கொண்டிருக்கிறார் என்றும் அவர் சொன்னார்.

இதில் இருந்து எரிபொருள் தட்டுப்பாட்டை தணிப்பதற்கான முயற்சிகளைப் பொறுத்தவரை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் இல்லையென்பது தெளிவாகிறது.

இதனிடையே பிரதமர் விக்கிரமசிங்க அபாய அறிவிப்புக்களைச் செய்யும் தனது வழக்கத்தின் பிரகாரம் எரிபொருள் தட்டுப்பாட்டு விவகாரத்திலும் கருத்து வெளியிட்டிருக்கிறார். கடந்த புதன்கிழமை பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்களை சந்தித்த அவர் உக்ரெய்ன் போரையடுத்து ஐரோப்பாவுக்கான ரஷ்ய எண்ணெய் விநியோகம் தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக ஐரோப்பிய நாடுகளும் மத்திய கிழக்கின் பெட்ரோலியம் சந்தையில் இருந்தே பெரும்பாலும் எண்ணெயை வாங்குவதால் உலகில் எரிபொருள் நெருக்கடியொன்று மூண்டிருக்கிறது என்றும் டொலர்கள் இருந்தாலும் கூட நாங்கள் வாங்குவதற்கு எரிபொருட்கள் இருக்காது என்று இந்தியர்கள் தன்னிடம் கூறியதாவும் தெரிவித்தார்.

எரிபொருள் கப்பல்களின் வருகை பற்றி என்னதான் அறிவிப்புகளை அரசாங்கம் செய்தாலும் எரிபொருட்களை பெறுவதில் பெரும் சிக்கல்களை அது நோக்குகிறது என்பதே உண்மை. கடன்களை மீளச்செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்ததையடுத்து சர்வதேச நிதிச்சந்தைகளின் நம்பிக்கையை இலங்கை இழந்துவிட்டது. இலங்கையின் வங்கிகளின் கடன் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கு எரிபொருள் விநியோகஸ்தர்கள் தயங்குகிறார்கள் என்று அமைச்சர் விஜேசேகர வெளிப்படையாகவே ஒத்துக்கொள்கிறார். விநியோகஸ்தர்களுக்கு ஏற்கெனவே 70 கோடி டொலர்கள் கொடுப்பனவு நிலுவையில் இருக்கிறது. அதனால் அவர்கள் இப்போது முன்கூட்டியே கொடுப்பனவுகளை கோருகிறார்கள் என்றும் அவர் சொன்னார்.



கடனுதவி வழங்கும் பல நாடுகள் இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலையில் புதிய கடனுதவிகளை வழங்க தயங்குகின்றன. சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் நடத்துகின்ற பேச்சுவார்த்தைகளின் விளைவுகளைப் பொறுத்தே வரும் நாட்களில் தங்களது உதவிகள் அமையும் என்று கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதுவர் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்தவேளையில் கூறியிருக்கிறார்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கையில் முஸ்லிம்கள் அரசுக்கு கண்டனம்:

## ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் பரிந்துரைகள் சர்ச்சையானது ஏன்?




இலங்கையில் “ஒரே நாடு ஒரே சட்டம்” செயலணியின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அதிலுள்ள பரிந்துரைகளில் கணிசமானவை முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் அமைந்துள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

“ஒரே நாடு ஒரே சட்டம்”செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர், கடந்த 29ம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், தமது செயலணியின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையினை கையளித்தார்.

எட்டு அத்தியாயங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் 43 பரிந்துரைகள் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பரிந்துரைகளில் கணிசமானவை முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், முஸ்லிம் சமூகத்தைக் குறிவைத்தே “ஒரே நாடு ஒரே சட்டம்” செயலணி உருவாக்கப்பட்டதாகவும் குறித்த அறிக்கை தொடர்பாக பேசியோர் குறிப்பிடுகின்றனர்.

“பொது இடங்களில் முழுமையாக முகத்தை மூடும் வகையில் ஆடை அணிவதற்கு தடை விதிக்க வேண்டும்” என, ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி பரிந்துரைத்துள்ளமையின் மூலம், முஸ்லிம் பெண்கள் - “புர்கா” அணிவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேபோன்று, “அரசப் பணியில் ஈடுபடும் முஸ்லிம் பெண்களுக்கு, அவர்களின் கணவரை இழந்தால் வழங்கப்படும் “இத்தா“ காலத்துக்குரிய 4 மாதங்கள் 10 நாட்களைக் கொண்ட விடுமுறை இல்லாமலாக்கப்பட வேண்டும்” எனவும் - ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தமது கணவர் மரணித்தால் அல்லது விவாகரத்துச் செய்தால் - முஸ்லிம் பெண்கள் 4 மாதம் 10 நாட்கள் அந்நிய ஆண்களுடனான தொடர்புகளைத் தவிர்த்து வீட்டில் இருப்பர். அரசுப் பணியில் ஈடுபடும் முஸ்லிம் பெண்களுக்கு இதற்கான விடுமுறை தற்போது வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், “ஒரே நாடு, ஒரே சட்டம்” ஜனாதிபதி செயலணியின் பரிந்துரைகள் குறித்து பேசிய, அந்த செயலணியின் முன்னாள் உறுப்பினர் அஸீஸ் நிஸாருத்தீன், “இந்த நாட்டில் அரை நிர்வாணமாக ஆடை அணிவதற்கு இருக்கும் உரிமை, தமது உடலை முழுமையாக மறைப்பவர்களுக்கும் உள்ளது” என்கிறார்.

“அரை நிர்வாணமாக ஆடை அணிபவர்களை சட்டம் எதுவும் கேட்காதபோது, புர்கா அணிவதை மட்டும் ஏன் தடைசெய்ய வேண்டும்” என அவர் கேள்வியெழுப்பியதோடு, “புர்கா என்பது தனி மனித உரிமை” எனவும் குறிப்பிடுகின்றார்.

“ஒரே நாடு ஒரே சட்டம்” ஜனாதிபதி செயலணியிலிருந்து கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி அஸீஸ் நிஸாருத்தீன் ராஜிநாமா செய்தார்.

“அரசுப் பணியில் இருக்கும் முஸ்லிம் பெண்களுக்கான “இத்தா” கால விடுமுறையை இல்லாமல் செய்வதற்கான பரிந்துரையானது, இனவாத ரீதியில் எடுக்கப்பட்ட முடிவாகும். முஸ்லிம்களை குறிவைத்து பாதக முடிவுகள் இந்த செயலணியில் எடுக்கப்பட்டபோது, அதனை எதிர்த்து, செயலணிக்குள்ளேயே நான் பேசியிருந்தேன். சிறுபான்மை சமூகமொன்றை இலக்கு வைத்து, இவ்வாறு நடப்பது, இந்த நாட்டில் மேலும் இனமுறுகலை ஏற்படுத்தும் எனவும் கூறியிருந்தேன்” எனவும் நிஸாருத்தீன் குறிப்பிட்டார்.

“தேசவழமைச் சட்டம், முஸ்லிம் தனியார் சட்டம் மற்றும் கண்டியச் சட்டம் ஆகியவற்றை இல்லாமலாக்க வேண்டுமென “ஒரே நாடு ஒரே சட்டம்” செயலணி பரிந்துரைத்துள்ள போதும், கண்டிய சட்டத்துக்குரிய மக்களிடம் எந்தவித கருத்துக்களும் கேட்கப்படவில்லை. இதனை நான் சுட்டிக்காட்டியதோடு, அந்த மக்களிடம் கருத்துக்களைப் பெறும் பணியை எம்மிடம் ஒப்படைக்குமாறும் கேட்டிருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை”.



“பௌத்தர்களின் மிக பிரதான ஆலயமான - கண்டி தலதா மாளிகையின் “தியவதன நிலமே” (பரிபாலகர்) பதவிக்குரிய நபர் வாக்கெடுப்பின் மூலமாகவே தெரிவு செய்யப்படுவார். குறிப்பிட்ட சில அதிகாரிகள் மற்றும் நபர்களுக்கு அதற்கான வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக கண்டி பிரதேச செயலாளர் பதவியை (இது அரச பதவி) வகிக்கும் நபர், “தியவதன நிலமே” பதவிக்குரியவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியும்.

அதேவேளை, அந்த வாக்களிப்பில் பெண்கள் கலந்து கொள்ள முடியாது என, அவர்களின் பாரம்பரியம் கூறுகிறது. அந்த உரிமை பெண்களுக்கு வழங்கப்படவில்லை. இதற்காகவே, கண்டி பிரதேச செயலாளர் பதவிக்கு இதுவரை எந்தவொரு பெண்ணையும் அரசு இதுவரை நியமித்ததில்லை. இதனை “ஒரே நாடு ஒரே சட்டம்“ செயலணி கவனத்தில் எடுத்திருக்க வேண்டும், ஆனால் அதனைச் செய்யவில்லை” என்கிறார் அஸீஸ் நிஸாருத்தீன்.

“ஒரே நாடு ஒரே சட்டம் எனும் எண்ணக்கருவானது, “நாட்டில் சட்டத்தை எல்லோருக்கும் சமமாக நடைமுறைப்படுத்துவதை” நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, சமூகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறித்தெடுக்கும் வகையில் அமையக் கூடாது. ஏழைக்கும் - பணக்காரனுக்கும் இடையில் ஏற்படும் பிரச்னையின் போது, சட்டத்தைச் சாதகமாக்கி பணக்காரன் வெற்றி பெற்று விடுகிறான். அண்மையில் நடந்த ஆர்ப்பாட்டமொன்றின் போது, வீதியை கறுப்பு நிறம் பூசி சேதப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி, அதனைச் செய்த ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்தார்கள்.

ஒரு தடவை நாடாளுமன்றத்தில் நடந்த கைகலப்பின் போது, அங்கிருந்த பெறுமதியான ஒலிவாங்கி (மைக்) ஒன்றை எம்.பி ஒருவர் வேண்டுமேன்றே உடைத்தார். ஆனால், அவரை சட்டம் கண்டு கொள்ளவில்லை. இந்தப் பாகுபாட்டை இல்லாமல் செய்வதே “ஒரே நாடு ஒரே சட்டம்” செயலணியின் நோக்கமாக இருக்க வேண்டும்.”

“முஸ்லிம் நாடான கத்தாரிடம், இலங்கையின் எரிபொருள் துறை அமைச்சர் உதவி கோரி சென்றுள்ள சூழ்நிலையில், முஸ்லிம்களுக்கு எதிரான பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையானது புத்திசாலித்தனமற்ற செயற்பாடு” எனவும் நிஸாருத்தீன் குறிப்பிட்டார்.

“ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி“ என்பது என்ன?

“ஒரே நாடு, ஒரே சட்டம்” என்கிற எண்ணக்கருவை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக, 2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷவினால், “ஒரே நாடு ஒரே சட்டம்” செயலணி உருவாக்கப்பட்டது.

இந்த செயலணியின் தலைவராக சர்ச்சைக்குரிய பௌத்த மதகுரு கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டார்.

“ஒரே நாடு ஒரே சட்டம்“ ஜனாதிபதி செயலணிக்கு 6 சிங்களவர்கள், 4 முஸ்லிம்கள், 3 தமிழர்கள் என, 13 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

பின்னர் இந்த செயலணி மீதும், ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் மீதும் அதிருப்தி கொண்டு, “ஒரே நாடு ஒரே சட்டம” செயலணியிலிருந்து மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள் ராஜிநாமா செய்தனர்.

1,200க்கும் அதிகமான சாட்சியங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையானது, 8 அத்தியாயங்களையும், 43 பரிந்துரைகளையும் கொண்டுள்ளது.

**(பிபிசி)**

# பிரகடனப்படுத்தப்படாத முடக்கநிலையில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இது கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகத்தின் முன்னணி நாடுகள் நம்பிக்கை இழந்துவிட்டதை வெளிக்காட்டுகிறது.

அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்கும் நிலையில் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டாலும் கூட சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறுவது கஷ்டமான காரியமே. 69 இலட்சம் மக்களின் ஆணையைப் பற்றி ஜனாதிபதி இன்னமும் கூட பேசுகிறார். அவர் மீது மக்கள் இன்று வைத்திருக்கும் “மதிப்பின்” இலட்சணத்தை வீதிகளில் இறங்கிநிற்கும் மக்கள் போடுகின்ற சாபங்களில் இருந்து தெளிவாக உணரமுடியும்.

தற்போதைய அரசாங்கத்துக்கு பதிலாக வேறு ஒரு அரசாங்கம் பதவிக்கு வந்தால் கூட பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேச சமூகத்திடம் கையேந்துவதைத் தவிர வேறு எதையும் செய்வதற்கில்லை.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை இன்னமும் கூட சில தரப்பினர் முன்வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அத்தகைய ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்றும் மக்களின் புதிய ஆணையுடன் தனது தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைத்து பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவரும் என்று கூறுகிறார்.

மார்ச் 15 ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக திரண்ட மக்கள் மத்தியில் உரையாற்றியபோது பிரேமதாச, தனது கட்சி தலைமையிலான அரசாங்கத்துக்கு சலுகை அடிப்படையில் எரிபொருட்களை வழங்க மூன்று மத்திய கிழக்கு நாடுகளின் ஆட்சியாளர்கள் உறுதியளித்திருப்பதாக கூறினார். தற்போது நாடு எரிபொருள் இன்மையால் பெரும் அவலத்துக்குள்ளாகியிருக்கும் நிலையில் எரிபொருட்களை வழங்கி உதவுமாறு அதே ஆட்சியாளர்களிடம் பிரேமதாச ஏன் கேட்கக்கூடாது? தனது ஆட்சி வரும்வரை எரிபொருட்களுக்காக மக்கள் தவம் கிடக்கவேண்டுமென்று அவர் நினைக்கிறாரோ?

இலங்கையில் எரிபொருட்களுக்கும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கும் மாத்திரம்தான் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது என்றில்லை. நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிறுத்தி அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செயற்படக்கூடிய விவேகமும் தொலைநோக்கும் கொண்ட அரசியல் தலைவர்களுக்கும் பாரதூரமான தட்டுப்பாடு நீண்டகாலமாகவே நிலவுகிறது.

# முடங்குவது இயற்கையின் தொழிற்பாடு! முடக்குவது இயலாமையின் வெளிப்பாடு!

**பனங்காட்டான்**

**தே**ர்தல்கள் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படுவது ஜனநாயக நாடுகளின் நடைமுறை. தேர்தல் விஞ்ஞாபனத்திலும், தேர்தல்கால பரப்புரைகளிலும் நம்பிக்கை வைத்து மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவார்கள்.

ஓர் அரசாங்கம் ஆட்சி நடத்துவது என்பது மக்களின் தேவைகளை அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் அறிந்து அவற்றை உரிய முறையில் செயற்படுத்தவே தவிர, மக்களை அடக்கி ஆட்சிபுரிவதற்கல்ல. அதற்குப் பெயர் ஜனநாயகமும் அல்ல.

இந்தப் பின்னணியில் நின்று பார்த்தால் இலங்கையில் எத்தகைய ஆட்சி நடைபெறுகிறது என்பதை ஒரு சாமானியனே இலகுவாகக் கூறி விடுவார். ஜனநாயகம் என்ற பெயரில் மமதை பிடித்த ராணுவச் சிந்தனையும் ஊழலுமே இன்றைய அத்தனை சீரழிவுகளுக்கும் காரணம்.

இயற்கை உரத்தை உற்பத்தி செய்து அதனைக் கையிருப்பில் வைப்பதற்கு முன்னரே இறக்குமதி உரத்தைத் தடை செய்ததால் வந்த வினையே இன்றைய அத்தனை நெருக்கடிகளுக்கும் மூல காரணம். நவீன உலகில் எரிவாயு அத்தனை செயற்பாடுகளுக்கும் அத்தியாவசியமானது. விவசாயமும் மீன்பிடியுமே இலங்கை மக்களின் பிரதான தொழில்கள் என்ற அடிப்படையில், எரிவாயு இன்மை என்பது இவை இரண்டையும் முழுமையாகப் பாதித்துவிட்டது.

இலங்கையின் வருவாய் ஆங்கிலத்தில் ரி என்ற முதல் எழுத்தில் தங்கியிருப்பது சர்வதேசமும் அறிந்தது. Tea, Tourism, Textile (தேயிலை உற்பத்தி, உல்லாசப் பயணிகள் சுற்றுலா, உடுபுடவை தயாரிப்பு) என்பவையே இந்த மூன்றும்.

தேயிலை மலைநாட்டுடன் தொடர்புபட்டது. உல்லாசப் பயணம் தீவின் இயற்கை வளத்துடன் சம்பந்தப்பட்டது. உடுபுடவை தயாரிப்பு ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்தில் உருவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத்துடன் பங்குகொண்டது.

இலங்கைக்கான வெளிநாட்டுச் செலாவணியை இந்த மூன்று துறைகளுமே பெற்றுக் கொடுத்தன. இதனால் டாலர் தட்டுப்பாடு இருக்கவில்லை.

நான் வெளிநாடொன்றில் இலங்கை விவகாரம் தொடர்பான கருத்தரங்கில் 1990களில் பங்குபற்றியபோது இலங்கையின் பிரதான ஏற்றுமதி என்ன என்ற கேள்வி என்னிடம் முன்வைக்கப்பட்டது. முன்னர் சிலோன் ரீ (இலங்கைத் தேயிலை), இப்போது இலங்கைத் தமிழ் அகதிகள் (Tamil Refugees) என்று நான் பதிலளித்தபோது அங்கிருந்தவர்கள் அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தனர்.

இப்போது ஒரு கோடி வரையான தமிழர்கள் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்றனர். இலங்கைக்கு உதவுங்கள் என்று இவர்களைப் பார்த்து இலங்கையின் அரசியல் தலைவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இது, அகதிகள் ஏற்றுமதி என்று நான் அன்று கூறியதை ஏற்க வைத்துள்ளது.

பிச்சா பாத்திரத்துடன் கோதபாய குழுவினர் ஒவ்வொருவரும் உலா வருகின்றனர். இரண்டு அமைச்சர்கள் இப்போது இரண்டு நாடுகளுக்கு பிச்சைக்குச் சென்றுள்ளனர். சர்வதேச அரங்குகளில் இலங்கையின் நீள்கரங்கள் பிச்சைக்காக நீட்டப்படுகின்றன. இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் மேற்குலக ராஜதந்திரிகளிடம் ஒரு பட்டியலை நீட்டி - பார்த்துப் போடுங்கள் என்று மண்டாடப்படுகிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் ராஜபக்சக்கள் ஆட்சிக் கதிரைகளை தமதாக்கி, கைகளையும் கால்களையும் அகல விரித்து, உலகின் அத்தனை நாடுகளிலும் கொள்ளைச் சொத்துகளை குவித்தபோது, இதனை அறிந்திராத 69 லட்சம் சிங்கள மக்கள், இந்த அரசு தங்கள் அரசு என்று நெஞ்சை நிமிர்த்தி தலையை உயர்த்தினார்கள். இன்று அவர்களே சந்திகளிலும் சந்தைகளிலும் ராஜபக்சக்களை வெளியேறுமாறு கூவி பதவிகளைப் பறித்து துரத்திக் கொண்டிருக்கின்றனர்.



இப்போது எஞ்சியிருப்பவர் கோதபாய ராஜபக்ச மட்டுமே. தனது இருப்பை நிலைநிறுத்துவதற்காக, கடந்த தேர்தலில் நிர்மூலமான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தமக்கு முன்னால் நிறுத்தி அவரின் நிழலுக்குள் மறைந்திருக்கிறார். ஆனால் பதவி பறிபோன ராஜபக்சக்கள் சும்மா இருப்பதாகவில்லை.

மகிந்த - பசில் சகோதரர்கள் கோட்டாவையும் ரணிலையும் பிரித்து விடும் சூழ்ச்சிகளில் இரவு பகலாக தொழிற்படுகின்றனர். கோதாவுக்கும் ரணிலுக்குமிடையேயான பனிப்போரை பகிரங்கப் போராக்கி அதில் குளிர்காய மகிந்தவும் பசிலும் முனைகின்றனர்.

கோட்டா கோ ஹோம் பேரெழுச்சி மார்ச் மாதம் 31ம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னர், இலங்கை கோரிய நிதி மனுக்களை நிராகரித்து வந்த முக்கிய நாடுகள் இன்று இலங்கையின் தேவைகளை நிறைவேற்ற முன்வந்துள்ளன.

சர்வதேச நாணய வங்கி நிச்சயம் உதவுமென அமெரிக்கா சொல்கிறது. அதன் வழியில் சர்வதேச நாணய வங்கி அதிகாரிகள் கொழும்பு சென்று ஆட்சி பீட உச்சங்களை சந்திக்கின்றனர். ஜி-7 மாநாட்டில் பங்குபற்றிய அமெரிக்க அதிபர் பைடன் இருபது லட்சம் டாலர் (2 கோடி) இலங்கைக்கு வழங்கப்படுமென அறிவித்துள்ளார். யூன் முற்பகுதியில் அமெரிக்கா வழங்கிய பன்னிரண்டு மில்லியனுக்கு மேலதிகமாக இந்த 2 கோடி டாலர்.



எம்.சி.சி. உடன்படிக்கை மூலம் இலங்கைக்கு அமெரிக்கா 400 மில்லியனை கடந்த வருடம் இனாமாக (நன்கொடை) வழங்க முன்வந்தபோது அதனை ராஜபக்சக்கள் மறுத்தனர். இன்று ரணிலின் முகத்துக்காக அமெரிக்க உதவி இலங்கைக்குப் போகிறது.

இந்தியப் பிரதமர் மோடியும் விடுவதாக இல்லை. ஏற்கனவே இப்பந்தியில் குறிப்பிட்டவாறு சீனா இலங்கையுடன் சம்பந்தம் வைத்திருக்கும்வரை இந்தியாவின் உதவிக்கு பஞ்சம் இருக்காது. ஆனால், யார் எவ்வளவு கொடுத்தாலும் தலைநிமிரும் நிலையில் இலங்கை இல்லை. அதல பாதாளத்தில் இருப்பவர்களை எத்தனை ஏணிகள் கொண்டும் தூக்க முடியாது.

இப்பொழுது இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் அத்தனையும் ரணிலை தொடர்ந்து பிரதமர் கதிரையில் நிலைத்திருக்கச்செய்யவே என்பது மூடுமந்திரமன்று. இது கோட்டாவுக்குத் தெரியாததல்ல.

பசி வந்தால் பத்தும் பறந்திடும் என்பர். இன்று அதற்கும் அப்பால் பஞ்சமும் பட்டினியும் ஒட்டி வந்து வாட்டுகின்றன. எவர் எவ்வளவு தந்தாலும் கை நீட்டும் தயார் நிலையில் இலங்கை உள்ளது. பிச்சை எடுக்கும்போது அதனைப் போடும் கையைப் பார்க்க முடியாது. போடப்படுவதை எண்ணுவதே முதல் வேலையாகவுள்ளது.

இவ்வாறு பிச்சை எடுக்கும் பணத்தில் கூட ஊழலும் மோசடியும் இடம்பெறாதென்பதற்கு உத்தரவாதம் இல்லை. பத்து, இருபது வீத கமிசன்கள் முழுமையாக அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்படவில்லை. அந்தக் குரக்கன் சால்வைகள் தொங்கிக் கொண்டேயிருக்கின்றன.

குரக்கன் சால்வைகளை அணிபவர்கள் தங்கள் அரசியல் தேவைகளுக்காக அதனைக் கழுத்தில் போடுகிறார்களே தவிர, அதன் உண்மையான அர்த்தத்தைப் புரிந்திருக்கவில்லை. இவர்களின் தந்தை அமரர் டி.ஏ.ராஜபக்ச ஒரு பரம்பரை விவசாயி. விருப்பமில்லாது அரசியலுக்கு இழுத்து வரப்பட்ட இவர் 1947 முதல் 1965 வரை அம்பாந்தோட்டையின் பெலியத்த தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் காணி விவசாய அமைச்சராக பதவி வகித்தவர். இவரின் பிரதான விவசாய உற்பத்தி குரக்கன். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மட்டுமன்றி அயற்பிரதேசங்களிலும் குரக்கன் விவசாயத்தை ஊக்குவித்து உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணச் செய்தவர். அதன் அடையாளமாகவே குரக்கன் நிறத்தினாலான சால்வையை அணியத் தொடங்கினார்.

உள்ளூர் மக்களுக்கு உணவளித்த குரக்கனுக்கு மதிப்பளித்த உன்னதமான அடையாளமே குரக்கன் நிற சால்வை. இவரது பிள்ளைகள் (கோட்டாபய தவிர), பேரப்பிள்ளைகள் தங்கள் அரசியல் பிழைப்புக்காக குரக்கன் சால்வையை அணிகின்றார்களே தவிர தங்கள் தந்தை வழியில் அதன் மகத்துவத்துக்கு மதிப்பளித்தவர்கள் அல்ல. மாறாக நாட்டின் வருமானத்தை கொள்ளையடித்து வெளிநாடுளில் பதுக்கியவர்கள். நாடு பாழாகிப் போனால், எங்கு சென்றும் குசியாக வாழலாம் என்பதற்காக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள்.

இதன் பலாபலனை இன்று மக்கள் அனுபவிக்கின்றனர். பேருந்துகள் ஓடவில்லை. தொடருந்துகள் தண்டவாளத்தில் நிற்கின்றன. உணவகங்கள் மூடப்படுகின்றன. விவசாய நிலங்கள் கருகிக் காய்கின்றன. மீன்பிடித் தொழில் அறவே கைவிடப்படுகிறது. குழந்தைகளுக்குப் பால் மா இல்லை. சாதாரணமான மரக்கறிகள்கூட இல்லை - இருந்தால் ஆனை விலை, குதிரை விலை. அரசாங்க அலுவலகங்களில் வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றது. நீதிமன்றங்களும் மூடப்படுகின்றன. பாடசாலைகள் மூடப்படுகின்றன. கல்வி இல்லாச் சமூகமொன்று கனகச்சிதமாக உருவக்கப்படுகிறது.

இதற்குள் அடுத்த வருடம் தேர்தல் என்று ஒரு அறிவிப்பு. பெப்ரவரி மாதத்துக்குள் உள்ளூராட்சித் தேர்தல்களை வைக்க வேண்டுமென்று குரல் கொடுக்கும் இருபது வீதம் புகழ் பசில் ராஜபக்ச, இத்தேர்தலில் தங்கள் கட்சியே வெற்றி பெறுமென்று சவால் விடுகிறார்.

கடந்த பொதுத்தேர்தலின்போது யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் முடிவுகளில் செய்ய முடிந்ததை வரப்போகும் தேர்தலிலும் செய்ய முடியுமென நம்புகிறார் போலும். அனுபவஸ்தர் அல்லவா?

அன்றாட வாழ்வுக்கே காசில்லை. அடுத்த வருடம் தேர்தலா? அப்படி எதுவும் நடைபெறாது என்று அடித்துச் சொல்கிறார் பிரதமர் ரணில். யார் சொல்வதை நம்புவது? அரசாட்சியின் தலைவர் யார்? ஒற்றைத் திருக்கல் வண்டியை இரண்டு மாடுகள் இழுத்தால் இதுதான் நிலைமை.

இவற்றுக்கு அப்பால், நாடு சில நாட்களுக்கு முடக்கப்படுகிறது. சிலவேளை யூலை இறுதிவரை இது தொடர்ந்து முடங்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.

முடங்குவது என்பது இயற்கையின் தொழிற்பாடு. முடக்குவது என்பது இயலாமையின் வெளிப்பாடு. இலங்கை முடங்குகிறதா? முடக்கப்படுகிறதா? பஞ்சத்துக்கும் பட்டினிக்கும் இடையில் செத்து மடியப் போகும் மக்களே இதன் அறுவடை.

**ஒரு நாடு, ஒரு சட்டம் என்று கூறபபடும் காலத்தில் இரண்டு முரண்பட்ட தலைமைகளுக்கிடையில் மக்கள் ததிங்கிணத்தோம் போடுகிறார்கள். எல்லாமே இல்லையென்று ஆகிவிட்ட வாழ்வில் பஞ்சமும் பட்டினியும் போட்டிபோட மக்கள் பசியால் மடியும் நாட்கள் கண்முன்னே தெரிகிறது. இதற்காகவே சில நாட்களுக்கு நாடு முடக்கப்படுகிறது. இதனை நாடு முடங்குகிறது என்று கூறி தப்பப் பார்க்கிறது ஆட்சி பீடம்.**

# டோக்கன் முறையும் மக்களின் குழப்பமும்



பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை மக்களை நேரடியாக உணர வைத்திருப்பது எரி பொருள் - குறிப்பாக பெற்றோல். பொருளாதார நெருக்கடி உருவாக்கிய வரிசைகளில் எரிபொருளுக்கான டோக்கன் வரிசை என்ற ஒரு வரிசையையும் உருவாக்கியதுதான் எரிபொருள் தீர்வுக்காக அரசாங்கம் தற்போது செய்துள்ள ஒரே தீர்வு.

எரிபொருள் தட்டுப்பாடு உருவாக்கிய வரிசை - அந்த வரிசை உருவாக்கிய டோக்கன் வரிசை இவற் றால் மக்கள் தாம் படும் கஷ்டங்கள் குறித்து மக்கள் மனம் திறக்கின்றனர்.



**கேதீஸ்**
அல்லைப்பிட்டி

நாங்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் எரிபொருள் நிலையத்தகு வந்து நீண்ட வரிசையில் காத்திருந்து உணவு உண்ணாமல் நீர் பருகாமல் எரிபொருள் பெறுவதற்காக காத்திருக்கின்றோம்.

அன்றாடம் வாகனங்களை ஓடினாலே எமக்கான வருமானத்தை ஈட்ட முடியுமநநந அவ்வாறான நிலையில் தற்போது இந்த டோக்கன் முறை குடும்ப பங்கிட்டு அட்டைக்கு எரிபொருள் என ஒரு நடைமுறை பின்பற்றப்படுகின்றதாக கூறுகின்றார்கள். ஆனால், நடைமுறைக்கு சாத்தியமான விடயம் அல்ல. நாங்கள் முன்னர் எப்படி எரிபொருளை பெற்றோமோ அதே போலத்தான் தற்போதும் எரிபொருளை பெறுகின்றோம். தற்போதைய நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை. அவ்வாறு இருக்கும்போது ஏன் இந்த பங்கு அட்டை முறை மற்றும் டோக்கன் முறையை அறிமுகப்படுத்துகின்றார்கள்.

குறிப்பாக, இராணுவத்தினர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக நமக்கு டோக்கன் முறையில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்றார்கள். அவ்வாறு டோக்கன் வழங்கப்பட்ட போதிலும் அது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனினும், நாங்கள் இரண்டு, மூன்று நாட்கள் இந்த வரிசையில் காத்திருந்து எரிபொருளை பெற்று எமது அன்றாட உழைப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் சிறப்பானது.

அறிக்கையிடல்
REPORTING
**என். குகராஜ்**







**ராகுலன்**
கொக்குவில்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் யாழ்ப்பாணத்தில் பெற்றோல் தட்டுப்பாடு என்பது மிகப்பெரிய பிரச்னையாக காணப்படுகின்றது.

மாவட்ட செயலகம் பிரதேச செயலகம் ஊடாக குடும்ப பங்கீட்டு அட்டை முறை மற்றும் டோக்கன் முறை என அறிமுகப்படுத்துகிறார்கள். அது எந்த அளவுக்கு சாத்தியமான விடயம் எனத் தெரியவில்லை. இவ் வாறு டோக்கன் முறை, குடும்ப பங்கீட்டு எரிபொருள் விநியோக முறைகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கிறார்கள். பெற்றோல் வராது என்கிறார்கள் பிறகு டோக்கன் முறை என்கிறார்கள். நீண்ட காலமாக வரிசையில் நின்று பெற்றோலை பெறுவதற்கு கடும் பிரயத்தனம் செய்ய வேண்டியதாக உள்ளது.

கோட்டாபய, மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் பொருளாதார பிரச்னை நெருக்கடி பெரும் பின்னடைவை ஏற்படுத்திய போதிலும் தற்போது ரணில் பதவியேற்ற பின்னர் பொருளாதாரம் நிமிர்த்தப்படும் என சொல்லப்பட்டது. ஆனால், தற்போதும் அந்தப் பிரச்னை தீர்ந்ததாக இல்லை. கையிருப்பில் எரிபொருள் இல்லை. டொலர் இல்லை. சம்பளம் கொடுக்க பணம் இல்லை. தற்சமயம் கோதுமை மாவின் விலையும் அதிகரித்துள்ளது.

அதைவிட பாண் மற்றும் ஏனைய பொருட்கள் உற்பத்திகளும் விலை அதிகரித்துள்ளன. அத்தோடு பேருந்து கட்டணம் அதிகரித்துள்ளது. எனவே, இங்கே நாங்கள் வாழ முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, தற்போதுள்ள கோட்டாபய, ரணில் அரசாங்கமானது நமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யக்கூட தவறிவிட்டது.

ரணில் விக்ரமசிங்க ஆட்சிக்கு வரும்போது உலக நாடுகளிடமிருந்து பணத்தை கொண்டு வருவார் - எரிபொருளை கொண்டு வருவார் எனக் கூறி, ஆட்சிக்கு வந்தார். ஆனால், அவ்வாறு ஒன்றும் இடம் பெற்றதாக இல்லை. இந்நிலையில், எல்லாம் தலைகீழாக மாறி மீண்டும் பணவீக்கம் அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. அதனை விட தற்போது யாழ்ப்பாணத்தில் ஒரு டோக்கன் முறை, பங்கீட்டு அட்டை முறை ஒன்றை உருவாக்கியுள்ளார்கள்.

அது எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்று தெரியவில்லை. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வரவில்லை. எவ்வாறு டோக்கனுக்கு எரிபொருள் வழங்கப்போகிறார்கள் என்பதுதான் எங்களுடைய கேள்வி.

முதலில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வருமாக இருந்தால் அதன் பின்னர் எவ்வாறு அதனை மக்களுக்கு பிரித்து கொடுப்பது என்பது பற்றி ஆராயலாம்.

யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக எரிபொருள் தேவையானவர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதிலும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மாத்திரமே அந்த பெற்றோல் பங்கீட்டு அட்டை வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அது எந்த அளவுக்கு சாத்தியம் என்பது தெரியவில்லை. நாங்கள் முன்னர் எவ்வாறு வரிசையில் இருந்து எரிபொருளை பெற்றோமோ அதே போலத் தான் தற்போதும் பெற வேண்டியதாக உள்ளது.

இந்த குடும்ப பங்கீடு அட்டை, டோக்கன் முறை எல்லாம் எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க தவறின் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து சேவைகளும் பாதிக்கப்படும்.

பகவான் சிங்

# மனம் திறக்கிறார் டக்ளஸ் தேவானந்தா!

## ஆயுதப்போராட்டத்தில் தொடங்கி அரசியல் போராட்டம் வரை....

**நீங்கள் ஆயுதமேந்திய ஒரு ஈழப் போராளியாக உங்கள் பயணத்தைத் தொடங்கி, ஈ பி ஆர் எல் எஃப் படைகளின் தளபதியாக உயர்ந்தீர்கள். 1987 ஜூலையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதையடுத்து, முதன்முதலில், ஆயுதங்களை ஒப்படைத்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியத் தொடங்கினீர்கள். ஆயுதப் போராட்டத்திலிருந்து அரசியலுக்கு வந்த மாற்றம் எளிதாக இருந்ததா?**

அன்று எமது மூத்த மிதவாதத் தலைமைகள் தமது தேர்தல் வெற்றிகளுக்காக தந்திரமாக தனிநாடு, ஆயுதப் போராட்டம் என்ற சிந்தனையை மக்கள் மத்தி யில் தூண்டிய நிலையில், காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டு வந்த இனக்கலவரங்கள் மற்றும் தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் இன ரீதியிலான வன்முறை, அடக்குமுறைகள் மற்றும் மாற்றந் தாய் மனப்பான்மை போன்றவை ஏற்படுத்திய பாதிப்புக்களும் - எமது மக்களை பாதுகாப்பதற்கும், உரிமைகளை வென்றெடுப்பதற்கும் ஆயுதப் போராட்டமே சிறந்த வழிமுறை என்ற சிந்தனையை தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

அன்றைய மிதவாதத் தலைமைகள் மீது நம்பிக்கையிழந்த தமிழ் இளைஞர்கள், தாமே முன்வந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காகவும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் தமது கரங்களிலேயே தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொண்டனர்.

அந்தவகையில், அரசியல் இராணுவ இயக்கங்களாகவும், இராணுவ அரசியல் இயக்கங்களாகவும் தோற்றம் பெற்றனர். இந்நிலையில், அரசியல் இராணுவ இயக்கங்களாக தோற்றம் பெற்றவர்கள் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளை இணைத்துச் செயற்படத் தொடங்கினர்.

நான் பிறந்து வளர்ந்த இடதுசாரி குடும்ப சூழலும் என்னுடைய சிந்தனைகளில் தாக்கத்தினை செலுத்தியிருந்தது.

இந்நிலையில், 70 களின் ஆரம்பத்தில் தமிழ் மாணவர் பேரவை மற்றும் ஈழ விடுதலை இயக்கம் போன்றவற்றுடன் இணைந்தும் தனியாகவும் என்னுடைய செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அந்தச் கால கட்டத்தில் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட ஈரோஸ் என்ற அமைப்பின் செயற்பாடுகளை இலங்கையில் ஆரம்பித்த ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவனாக என்னுடைய பயணம் தொடர்ந்திருந்தது.

பின்னர் ஈரோஸில் இருந்து வெளியேறி ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற அரசியல் இராணுவ இயக்கத்தினை உருவாக்கியவர்களில் ஒருவன் என்ற அடிப்படையில், அந்த இயக்கத்தின் மத்திய குழு - அரசியல்பீட உறுப்பினராகவும் அதன் இராணுவப் பிரிவின் பிரதம தளபதியாக செயற்பட்டிருந்தேன். இராணுவப் பிரிவின் தளபதியாக இருந்த போதிலும், எமது இயக்கத்தின் தலைவராக இருந்த தோழர் பத்மநாபா பெரும்பாலும் இந்தியாவில் தங்கியிருந்து இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தமையினால் நாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எப்.அரசியல் இராணுவ இயக்கத்தின் செயற்பாடுகளை தீர்மானிப்பவனாக 86 ஆம் ஆண்டு நடுப் பகுதி வரையில் நான் செயற்பட்டிருந்தேன்.

அக்காலப் பகுயில் இயக்கத்தின் உள்முரண்பாடுகளை ஈ.பி.ஆர்.எல்.எப். சக தலைவர்ளுடன் பேசித் தீர்த்துக் கொள்வதற்காவும், போராட்டம் தொடர்பான பொது வேலைத் திட்டம் தொடர்பாக பிரபாகரன் உட்பட்ட சக இயக்கங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்காவும் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்திற்கான ஆதரவினை வலுப்படுத்துவதற்காகவும் 86 ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா சென்றிருந்தேன். பின்னர், இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து வெளியேறிய இறுதித் தருவாயிலேயே, - அதாவது 1990 ஆம் ஆண்டு மே மாதமளவிலேயே மீண்டும் இலங்கைக்கு வந்திருந்தேன்.

இந்தியாவில் தங்கியிருந்த காலப் பகுதியில், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய நாங்கள், ஈ.என்.டி.எல்.எப். என்ற இயக்கத்தினை உருவாக்கி குறுகிய காலம் செயற்பட்டிருந்த போதிலும், எம்மோடு இணைந்து அந்த இயக்கத்தினை ஆரம்பித்த புளொட் அமைப்பின் ஒரு பிரிவினரின் செயற்பாடுகளில் கூட்டுப் பொறுப்பும் இருக்கவில்லை வெளிப்படைத் தன்மையும் இருக்கவில்லை. அவர்களின் தவறான தீர்மானங்களும், செயற்பாடுகளும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்தன. இதனால் ஈ.பி.டி.பி. என்ற அரசியல் அமைப்பை உருவாக்கினோம்.

அந்தக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொண்டதுடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகவே அதனைக் கருதியதுடன், ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழல் மாற்றங்களை கிரகித்துக் கொண்டோம்.

அதன் அடிப்படையில், இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இணைந்து - நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக - தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதன் மூலம் இலங்கை - இந்திய ஒப்பந்ததின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை முழுமையாக செயற்படுத்துவனை ஆரம்பமாகக் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நோக்கி முன்னேறுவற்கான வேலைத் திட்டத்தினை ஈ.பி.டி.பி. ஆரம்பித்திருந்தது.

**தமிழ் மக்களின் ஒற்றுமையின் அடையாளமாக என்றைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு விளங்கியதில்லை. 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலகட்டத்தில் தனித்து நின்று தேர்தலில் வெல்ல முடியாதவர்களை வளைத்துப் பிடித்து பிரபாகரனால் உருவாக்கப்பட்டது தான் கூட்டமைப்பு.**

இருந்த போதிலும், புலிகளின் சகோதர இயக்கங்களை இலக்கு வைத்த படுகொலைகள் தொடர்ந்த நிலையில், எம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதங்களை கைகளில் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தோம்.

அதனால் இந்தியாவில் தங்கியிருந்த காலகட்டத்தில் எமது பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட ஆயுதங்களை, 90 ஆண்டு நாட்டுக்கு திரும்பிய போது, இந்தியாவில் அதனை வழங்கியவர்களிடமே திருப்பி கொடுத்துவிட்டு வந்திருந்தோம். பின்னர், இலங்கை அரசாங்கம் எமது பாதுகாப்பிற்கு தேவையான ஆயுதங்ளை வழங்கியிருந்தது.

2001 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் நோர்வேயின் அனுசரணையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது, பேச்சுவார்த்தையை தொடருவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக எமது ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதை புலிகள் முன்வைத்தனர்.

எமது மக்களை அழிக்கின்ற அழிவு யுத்தத்தினை மீண்டும் தொடருவதற்கான காரணியாக எமது கைகளில் ஆயுதங்கள் இருப்பதை புலிகள் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காக - எமது உயிர் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது ஆயுதங்களை கையளித்திருந்தோம்.

அதன் பின்னர் அரசாங்கப் பாதுகாப்பு தரப்பினர் எமக்கான பாதுகாப்பினை வழங்கிய போதிலும், நிராயுதாபாணிகளாக்கப்பட்ட பின்னரே எமது தோழர்கள் பலர் புலிகளினால் கொலை செய்யப்பட்டிருந்தனர். எமது இன்னும் பல தோழர்கள் வெளிநாடுகளுக்கு துரத்தப்பட்டனர்.

இந்தப் பயணத்தில் எதிர்கொண்ட சவால்கள் அனைத்தையும் தாண்டி எனது பயணம் தொடர்கின்றது என்றால், எனது அரசியல் வேலைத்திட்டமும் அதில் இருக்கின்ற நியாயமும்தான் காரணம் என்று நம்புகின்றேன்.

**ஆனால், ஈழத் தமிழர் என்ற அரசியல் மேடையில் முக்கிய அங்கமாக உருமாறாமல், தனியாகவே செயல்பட்டு வந்தீர்கள். இந்தத் தனிமையை விளக்க முடியுமா?**

எமது மக்களின் அபிலாசைகளுக்காக எம்மால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் ஆயுதப் போராட்டம், திசை மாற்றப்பட்டதன் விளைவு, இருந்ததையும் அழித்து எமது மக்களை அவலத்திற்குள் தள்ளிவிட்டிருக்கின்றது.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பப் போராளி என்ற வகையில் எமது மக்கள் எதிர்கொண்ட அவலங்களுக்கும் அழிவுகளுக்கும் தார்மீகப் பொறுப்பேற்று, அவலத்தில் இருந்து மக்களை மீட்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காவே இந்தியாவில் இருந்து திரும்பி வந்து தேசிய ஜனநாயக நீரோட்ட அரசியலில் ஈடுபட்டுள்ளதுடன், என்னால் முடிந்தளவு செய்து கொண்டிருக்கின்றேன்.

எனவே, எவ்வாறான நிலையிலும் - எவ்வாறான நலன்களுக்காகவும் எமது மக்களை மீண்டும் மீண்டும் அவலங்களுக்குள் தள்ளுகின்ற அரசியலை செய்வதற்கு நான் தயாராக இல்லை.

நடைமுறை யதார்த்தங்களை மக்களிடம் எடுத்துச் சொல்வதோடு, நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளில் என்னுடைய வேலைத்திட்டங்களும் அமைந்துள்ளது. ஆகவே, யதார்த்தினை புரிந்து கொண்டு, அதனை வெளிப்படைய மக்களிடம் சொல்லி நேர்மையான அரசியல் செய்ய தயாராக இருக்கின்ற தரப்புக்களுடன் கொள்கை ரீதியாக இணைந்து செயற்படவும் தயாராகவே இருக்கின்றேன். ஆனால் எனது எதிர்பார்ப்புக்களை திருப்திப்படுத்தும் வரையில் யாரும் தம்மை இதுவரை வெளிப்படுத்தவில்லை.

என்னைப் பொறுத்தவரையில், குறுகிய அரசியல் நலன்களுக்காக என்னை உருமாற்றிக் கொள்ளாமல் வெளிப்படையாக தனித்தே செயற்பட்டு வருகின்றேன்.

-

**போருக்குப் பிந்தைய காலத்தில், சிங்கள ஆட்சியாளர்களுக்கு இணையாக, இலங்கையின் தமிழர் தலைமையும் தம்மக்களுக்கு நன்மை சேர்க்கும் வகையில் செயல்படவில்லை என்று நான் குற்றம் கூறினால், அதற்கு உங்களின் பதில் என்னவாக இருக்கும்?**

உண்மைதான். நாங்கள் அதிலிருந்து வேறுபட்டவர்கள். ஆடத் தெரியாதவன் மேடை கோணல் என்பது போன்று, தமது இயலாமைகளையும் பலவீனங்களையும் மறைப்பதற்கு ஏனையவர்களை நோக்கி விரலை நீட்டுகின்ற போக்கை நான் ஏற்றுக்கொள்வதில்லை.

எல்லாத் தரப்பிலும் - சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் அனைவர் மத்தியிலும் பல்வேறு சிந்தனைகளை கொண்டவர்கள் இருகின்றார்கள். சுயலாப அரசியலுக்காக இனவாதம் பேசுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அதனைப் புரிந்து கொண்டு நாங்கள் சரியாக அணுக வேண்டும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு.

எம்மைப் பொறுத்தவரையில், இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர் தென்னிலங்கையில் ஏற்பட்ட குணாம்ச மாற்றங்களையும், போருக்கு பின்னர் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழலையும் நாம் புரிந்து கொண்டு மிகவும் நிதானமாக கையாளுகின்றோம். எமக்கு எமது மக்கள் வழங்குகின்ற அதிகார பலத்திற்கு ஏற்ப, தேர் பின்னோக்கி நகருவதை தடுத்து நிறுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற சறுக்குக் கட்டை போன்று, எமது மக்களின் வாழ்வியல் மேலும் மோசமடையாமல் தடுப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம்.

சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் அந்தத் தேரை முன்நோக்கி நகர்த்துகின்ற வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றோம்.

**சம்பந்தருக்கு வயதாகி, நோய்வாய்ப்பட்டுள்ள நிலையில், தன்னிச்சையாகச் செயல்படுவதாக சுமந்திரன் மீது குற்றம் சாட்டப்படுவதும் ‘கூட்டுத் தலைமை’ தேவை என்று செல்வம் அடைக்கலநாதன் பேசி வருவதும் என தமிழ்த் தேசியக்கூட்டணியில் பல்வேறு எதிர்ப்புக் குரல்கள் உருவாகி வரும் நிலையில், தமிழர்களுக்கிடையேயான ஒற்றுமைக்கு மீண்டும் பாதிப்பு இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

எமது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், தமிழ் மக்களின் பெயரால் சொல்லப்பட்ட ஐக்கியம் என்பது, தமிழ் மக்களை பின்னோக்கி கொண்டு சென்றதே தவிர, தமிழ் மக்களை முன்னோக்கி கொண்டு சென்றதில்லை.

தமிழ் மக்களின் ஒற்றுமையின் அடையாளமாக என்றைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு விளங்கியதில்லை. 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலகட்டத்தில் தனித்து நின்று தேர்தலில் வெல்ல முடியாதவர்களை வளைத்துப் பிடித்து பிரபாகரனால் உருவாக்கப்பட்டதுதான் கூட்டமைப்பு.

ஈ.பி.டி.பி. கட்சியின் நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டங்களில் நம்பிக்கை வைத்து மக்கள் திரள்



வதை தடுத்து நிறுத்த வேண்டிய தேவை பிரபாகர னுக்கு ஏற்பட்டது. இன்று பிரபாகரன் இல்லாத நிலையில், அந்தக் கூட்டுக்கான கட்டு இல்லாமல் போய் இருக்கின்றது. அதுதான் உண்மை. எனவே கூட்டமைப் பினர் பிரிந்து நிற்பதனால் தமிழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதெல்லாம் வெறும் கற்பனை.

இப்போதும், நீங்கள் குறிப்பிட்டுக் கூறியவர்கள் ஒவ்வொருவம் தங்களுடைய சுயலாப அரசியல் நலன் சார்ந்த நகர்வுகளில் ஈடுபடுகின்றார்களே தவிர மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகள் எவையும் அங்கே இல்லை. இப்போது ஏட்டிக்குப் போட்டியாக கதையளந்து கொண்டு இருக்கின்றவர்கள் எல்லோரும், தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுமானால் கொஞ்சிக் குழாவ ஆரம் பித்து விடுவார்கள். இதுதான் நீண்ட காலமாக அவர்கள் தொடர்ந்து செய்து வருகின்ற சுயலாப அரசியல்.

உண்மையில் அவர்கள் மக்கள் நலன் சார்ந்த வேலைத் திட்டம் உள்ளவர்களானால், தமது வேலைத் திட்டங்களை முன்வைத்து தனித்தனியாக தேர்தலை எதிர் கொண்டு வெற்றி பெற்ற பின்னர், பொது வேலைத்திட்டத்துடன் இணைந்து செயற்படுவார்களாயின் வரவேற்கத்தக்கது.

**இலங்கைக்குள்ளும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களின் ஒரு பெரிய கூட்டணியை உருவாக்க நீங்கள் முயல்வதற்கு வாய்ப்புகள் உண்டா? அப்படி ஒரு ஒருங்கிணைந்த கூட்டணியை உருவாக்குவது, கொழும்புவுடன் மட்டுமல்லாமல், இந்தியா, தமிழ்நாடு மற்றும் பிற சர்வதேச மன்றங்களைக் கையாளுவதில் தமிழர்களின் கரத்தை வலுப்படுத்தும் என்று தோன்றவில்லையா?**

*நீங்கள் சொல்லது உண்மை - உங்களின் ஆதங்கத் தினை நான் மதிக்கின்றேன். தமிழர் தரப்புக்கள் குறு கிய அரசியல் நலன்களை கைவிட்டு விட்டு, வெளிப் படைத் தன்மையுடன் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் கொள்கை ரீதியில் ஒன்றுபட்டால், அது நிச்சயமாக தமிழ் மக்களின் கரத்தை பலப்படுத்தும்.*

*ஆனால் தளத்தில் இருக்கின்ற சுயலாக அரசியல் தரப்புக்களின் வரலாற்றுத் தவறுகளினால் புலத்தில் வாழுகின்ற எமது உறவுகளும் பலவீனமான நிலையி லேயே இருக்கின்றார்கள். அதனால் தளத்தில் இருக்கின் றவர்களையும் புலத்தில் இருக்கின்றவர்களையும் ஆக்கத் தினை நோக்கி முன்னகர்த்தும் வகையிலான வேலைத் திட்டம் ஆரம்பித்து முன்கொண்டு செல்ல இருக்கின் றேன் என்ற தகவலை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

**துல்லியமாகத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்குப் பெயர் போன விடுதலைப் புலிகளின் கொலை முயற்சிகளை நீங்கள் பலமுறை முறியடித்து ஒரு சாதனையே படைத்துள்ளீர்கள். இதை வெறும் உங்களின் அதிர்ஷ்டமாகவோ புலிகளின் துரதிர்ஷ்ட மாகவோ பார்க்கிறீர்களா? அல்லது சில இலக்குகளை எட்ட காலம் உங்களுக்கு அளித்திருக்கும் வாய்ப்பாக நினைக்கிறீர்களா?**

*பாம்பின் கால் பாம்றியும் என்று சொல்வார்கள். அதேபோன்று பிரபாகரனின் சிந்தனையையும் செயலை யும் என்னால் சரியாக கணிப்பிட முடிந்தது. அதையே வரலாறு நிரூபித்திருக்கின்றது. அடுத்தது என்னுடைய தற்துணிவு. மற்றது எனது தோழர்களின் அர்ப்பணிப்பு. இவைதான் பிரபாகரனினால் என்னை கொல்ல முடியா ததற்கு காரணம் என்று நினைக்கின்றேன்.*

*ஒருவேளை நீங்கள் சொல்வது போன்று, என்னிடம் இருந்து தமிழ் மக்களுக்கு மேலும் பல விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது காலத்தின் எதிர்பார்ப்பாகக்கூட இருக்கலாம். எவ்வாறெனினும், நீங்கள் நம்புகின்ற எண்ணெய் மாந்திரீகம் எந்த வகை யிலும் சம்மந்தப்பட்டிருக்கவில்லை.*

**விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மீண்டும் ஒன்றிணைவதற்கு முயற்சிப்பதைப் பற்றி கேள்விப்படுகிறோம், மேலும் பல புலிகள் சார்பு அரசியல்வாதிகள் தனி ஈழம் இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக் கான ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை உருவாக் குவதை இலக்காகக்கொண்டு தீவிரமாகச் செயல்படுவதைக் காண்கிறோம். இது குறித்து இரண்டு கேள்விகளை உங்கள் முன் வைக்க விரும்பு கிறேன். முதலில், உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நீங்கள் இன்னும் கருதுகிறீர்களா? இரண்டாவதாக, இலங்கையின் ஈழ அரசியலில் புலிகளும் அவர்களின் புலம்பெயர் ஆதரவாளர்களும் என்ன பங்கு வகிக்கலாம்?**

*முதலாவது, ஆயிரம் பூக்கள் மலர வேண் டும் என் பதை நீண்ட நாட்களாகவே வலியுறுத்தி வருகின் றேன். எமது மக்களை அழிக்கின்ற அழிவு யுத்தத்தை கைவிட்டு நடைமுறைச் சாத்திய மான வழிமுறையை பின்பற்றுமாறு பிரபாக னையும் நான் பகிரங்கமாக அழைத்திருக்கின்றேன்.*

*எனவே, தற்போதும் அவர்கள் யதார்த்தத்தினைப் புரிந்து கொண்டு, ஆக்கபூர்வமான - சரியான வழி முறையில் ஒன்றிணைவார்களாயின் வரவேற்கத்தக்க தாகும். தேவைப்படின் ஒத்துழைப்புக்களை வழங்க வும் தயாராகவே இருக்கின்றேன்.*

*அடுத்தது, புலிகள் சார்பு அரசியல்வாதிகளாக தம்மை அடையாளப்படுத்துகின்ற அனைவரையும் நான் நன்கறிவேன். யாரிடமும் ஆழமான அரசியல் பார்வையோ வேலைத் திட்டமோ இருப்பதாக எனக் குத் தெரியவில்லை. அனைவரும் தங்களை சுயலாப அரசியலில் தக்கவைத்துக் கொள்வதற்காகவே ஊடகங்களில் முழங்குகின்றார்கள்.*

*இனி உங்களின் கேள்விகளுக்கு வருவோமானால்,*

**எதிர்க்கட்சியிடம் நாட்டின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான சிறந்த வேலைத்திட்டம் இருக்கின்றது. அரசாங்கத்தை கைப்பற்றி அந்த திட்டத்தினை முன்கொண்டு செல்வதற்கு தேர்தலை வலியுறுத்துகினறார்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையில் அதுதான் நோக்கமாக இருக்குமாயின், அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி அண்மையில் அழைப்பு விடுத்த போது ஓடி ஒளிந்திருக்க மாட்டார்கள்.**

*மக்கள் தொடர்பான தார்மீகப் பொறுப்புக் காரணமா கவும் அர்ப்பண உணர்வு காரணமாகவும் நான் எனது பாதுகாப்பு தொடர்பாக அலட்டிக் கொள்வதில்லை.*

*மற்றைய கேள்விக்கான பதில் என்னவெனில், புலி களாக இருந்தாலென்ன அவர்கள் சார்ந்தவர்களாக இருந்தாலென்ன, தங்களை சுயவிமர்சனம் செய்து கொண்டு வெளிப்படையாக செயற்பாட்டால் இலங்கை அரசியலில் ஈடுபட்டு எமது மக்களுக்கு தங்களினால் முடியுமானவற்றை செய்ய முடியும். இதற்கு உதாரண மாக ஏற்கனவே இங்கு பலர் இருக்கின்றனரே.*

**கொழும்பில் உள்ள பல்வேறு அமைச்சரவை களில் இடம்பெற்றுள்ள தமிழ் அரசியல் தலைவர் என்ற வகையில், இலங்கையில் உள்ள பல்வேறு அரசாங்கங்களின் செயல்பாடுகளை நீங்கள் மிக உன்னிப்பாகக் கவனித்திருக்கிறீர்கள். அப்படி நீங்கள் கண்டதை எங்கள் வாசகர்களுக்குச் சுருக்கமாக விளக்க முடியுமா? அவற்றில், நல்ல விடயங்கள் மற்றும் அல்லாதவை, எதில் அரசாங்கம் சிறப்பாகச் செய்திருக்க முடியும்? ஏன் அரசாங்கத் தால் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியவில்லை?**

*நீங்கள் சொல்வதைப்போல, நீண்ட அனுபவம் இருக்கின்றது. நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்து வது போன்று, வேதனை புண்ணுக்கே தவிர மருந்துக்கு அல்ல என்பதை சக தமிழ் தரப்புக்கள் புரிந்து கொண்டு செயற்படுவார்களாயின், எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பல்வேறு பிரச்சினை களுக்கு தீர்வினைக் காணமுடியும்.*

*தென்னிலங்கையில் இருக்கின்ற எந்தக் கட்சியாக இருந்தாலென்ன, அவற்றுக்கு அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது. தேர்தல் அரசியலில் தங்கள் வாக்கு வங்கிக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தீர்மானங் களை மேற்கொள்ளும். இந்த யதார்த்தத்தினை புரிந்து கொண்டு தேசிய நல்லிணக்கத்தோடு எமது செயற்பாடு களும் கருத்துக்களும் அமையுமாயின் நிலமைகளை கையாள்வது இலகுவாக இருக்கும்.*

**தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வ தற்கும், சிங்களவர்களின் ஆதிக்கத்தில் மாத்திரம் இருக்காமல், அனைத்து சமூகங்களையும் உள்ள டக்கியதாக இலங்கை அரசை உருவாக்குவதற்கும் சிறந்த வழி என்று நீங்கள் கருதுவது எது? பல்வேறு இனங்கள், பிரதேசங்கள், மதங்கள், மொழிகள் உள்ள மக்களிடையே நல்லிணக்கம் மற்றும் நிலையான அமைதிக்கான உங்கள் தீர்வு என்ன?**

*தேசிய நல்லிணக்கம். இதனை வலுப்படுத்துவதன் ஊடாக மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.*

*இதைத்தான் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நான் வலியுறுத்துவதுடன் பின்பற்றியும் வருகின்றேன். கடந்த காலங்களில் அரசியல் ரீதியில் எமது மக்களுக்கு பெற்றுக்கொடுத்த அனைத்து விடயங்களுக்கும் தேசிய நல்லிணக்கமே அடிப்படையாக அமைந்திருந்தது. மேலும் தேவையானளவு அரசியல் பலத்தை எமது மக் கள் எமக்கு தருவார்களாயின், எமது செயற்பாடுகளை எமது மக்களின் அபிலாசைகளை நோக்கியதாக மேலும் விஸ்தரிக்க முடியும்.*

**இந்திய இலங்கை ஒப்பந்தம் குறித்தும் 13 ஆவது அரசியல் சாசன மாற்றம் குறித்தும் உங்கள் நிலைப்பாடு என்ன?**

*தமிழ் மக்களுக்கு கிடைத்த பொன்னான வாய்ப் புக்களில் அதுவும் ஒன்று. அதனை சரிவரப் பயன்படுத் தாமல் தவறவிட்டதன் விளைவுதான் எமது மக்கள் எதிர்கொண்ட பேரிழப்புக்களும் அழிவுகளும். அதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் பல தமிழ் தரப்புக்கள் தற்போது 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதை வலியுறுத்தி வருகின்றன. அவ்வாறு வலியுறுத்துகின்ற தரப்பினரும் இதய சுத்தியுடன் அன்றி, அரசியல் நோக்கங்களுக்காக குறித்த விட யத்தினை அண்மைக்காலமாக பேசி வருகின்ற போதி லும், நாம் 30 வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சி யாக கூறுகின்ற கருத்தினை ஏற்றுக்கொண்டு அவர் களும் கருத்து தெரிவிப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.*

**‘கோட்டா, கோ ஹோம்’ என்ற கால் ஃபேஸ் புரட்சியின் காரணங்களை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?**

*கடந்த காலங்களில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட தவறான பொருளாதார தீர்மானங்கள், நாட்டில் இடம்பெற்ற யுத்தம், சர்வதேச நிலவரங்கள், கொரோன பெருந்தொற்று போன்ற பல்வேறு காரணங்களினால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.*

*மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி களின் வெளிப்பாடாக காலிமுகத் திடல் போராட் டங்கள் அமைந்து இருக்கின்ற போதிலும், சில சக்திகள் பின்னணியில் இருந்து செயற்படுகின்றன என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

**அவரது மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து விலகியதும், ரணில் விக்ரமசிங்க புதிய பிரதமரானதும் கால் ஃபேஸ் புரட்சியை வலு விழக்கச் செய்து, போராளிகளை வீடு திரும்பச் செய்யுமா?**

*காலிமுகத் திடலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போராட்டம் அண்மைய நாட்களாக வலுக்குன்றி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.*

*குறிப்பாக குறித்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் விடுமுறை நாட்கள் அதிகளவில் காணப்பட் டன. அதேபோன்று இஸ்லாமிய மக்களின் புனித நோன் புப் பெருநாள் நோன்பும் நடைபெற்றுக் கொண்டிருந் தது. பொதுவாகவே விடுமுறை நாட்களிலும் நோன்புக் காலங்களிலும் காலிமுகத் திடல் பிரதேசம் மக்களினால் நிறைந்து காணப்படுவது வழக்கம். அவ்வாறு காலிமுகத் திடலில் கூடிய மக்கள் கூட்டமும் போராட்டத்திற்காக கூடிய கூட்டமாக ஊதிப் பெருப் பித்து சில ஊடகங்க ளிலும் சமூக ஊடகங்களிலும் காண்பிக்கப்பட்டது.*

*அதைவிட, காலிமுகத் திடல் போரட்ட முறைமை இலங்கையைப் பொறுத்தவரையில் கொஞ்சம் வித்தி யாமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றது என்ற செய்தி பரவியிருந்த நிலையில், புதினம் பார்ப்பதற் காகவும் கணிசமானளவு மக்கள் ஆரம்பத்தில் வந்ததாக சுயாதீன புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.*

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# மனம் திறக்கிறார்...

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

*அதைவிட, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவது அல்லது குறித்த தரப்புக்களுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவது, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதற்கான வழிமுறை அல்ல என்பதை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.*

*இந்நிலையில் போராட்டம் நடைபெறுவதாக சொல்லப்படுகின்ற பகுதிக்கு மக்கள் செல்வது அண்மைக் காலமாக கணிசமானளவு குறைந்திருக்கின்றது. எனினும், சில சக்திகள் குறித்த போராட்டத்தின் பின்னணியில் இருப்பதாக சொல்லப்படுகின்ற நிலையில், சிறிய குழுவினர் இன்னும் காலிமுகத் திடல் பகுதியில் கூடாரங்களை அமைத்து அரசாங்கத்திற்கு எதிரான கோசங்களை எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். அவர்களும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளதார பிரச்சினைகளில் இருந்து மீட்பதற்கு சரியான வழிமுறை அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவது அல்ல. இவ்வாறான போராட்டங்கள் நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை தீரா பிரச்சினையாக வைத்திருப்பதற்கே வலுச்சேர்க்கும் என்ற யதார்த்தத்தினை விரைவில் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.*

**அடுத்த ஆறு மாதங்களுக்கு தேசத்தை நடத்த 6 பில்லியன் டாலர்கள் தேவை என பிரதமர் ரணில் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மக்கள் தங்கள் வாழ்வில் மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர்கொள்ள ஆயத்தமாகும்படி கேட்டுக்கொண்டார். ஒரு அனுபவமிக்க அரசியல்வாதி மற்றும் நீண்டகால அமைச்சராக, இந்த நீண்ட இருண்ட சுரங்கப்பாதையின் முடிவில் ஏதேனும் ஒளி உங்களுக்குத் தெரிகிறதா?**

*ஒளி தெரிய வேண்டும் என்ற நம்பிக்கையோடுதான் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டவாறு பயணத்தினை தொடர்ந்து வருகின்றோம். கடந்த காலங்களில் புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது என்று பலரும் ஆரூடம் கூறிக்கொண்டிருக்கையில், புலிகளின் தவறான தீர்மானங்கள் எமது மக்களையும் அழித்து அவர்களையும் அழிக்கப் போகின்றது என்ற யதார்த்தத்தினை நாங்கள உரக்க கூறினோம். அதேபோன்று தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளில் இருந்தும் நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணிக்கின்றோம்.*

*இந்தியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் ஒத்துழைப்புக்களும் உதவிகளும் எமக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.*

*குறித்த கடனை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் சில நியமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. எமது நாட்டின் இறைமையப் பாதிக்காத வகையில் குறித்த நியமங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதுடன், நாணய நிதியத்தின் கடனுதவி விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது.*

*அதேவேளை, நிரந்தரமாக பொருளதாரத்தில் ஸ்திரமான நிலையை அடைவதற்கு சுயபொருளாதார முறைமையைக் கட்டியெழுப்ப வேண்டும். எமது வளங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையை உருவாக்குவதற்கான வேலைத் திட்டங்களும் மக்கள் மத்தியிலான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.*

*கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில், தேசிய ரீதியில் கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை செய்கையினை தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் விருத்தி செய்தவதற்கான அனைத்து முற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*குறிப்பாக கடலட்டை பண்ணைகள் அமைப்பது உட்பட்ட நீர்வேளாண்மை தொடர்பாக மக்கள் மத்தியில் நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டு - வரவேற்பு ஏற்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் நாட்டிற்கு தற்போதைய பிரதான தேவையாகக் காணப்படுகின்ற அந்நியச் செலாவணியை ஈட்டுவதுடன், ஆரோக்கியத்திற்கு தேவையான தரமான உணவுகள் தாராளமாக நியாயமான விலையில் நாட்டு மக்களுக்கு கிடைப்பதையும் உறுதிப்படுத்துவதே எனது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.*

*அதேபோன்று வடக்கு மக்களின் பிரதிநிதி என்ற அடிப்படையில் கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக விவசாயம், சுய உற்பத்திப் பொருளாதாரத்திலும் மக்களை ஊக்குவிக்கும் வகையிலான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன். குறிப்பாக எமது மக்களுக்கு எரிபொருள், உரம், மருந்துப் பொருட்கள், பால்மா உட்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் தேவையானளவு நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவற்றை இந்தியாவில் இருந்து நேரடியாக காங்கேசன்துறைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் இறுதிக் கட்டத்தினை அடைந்துள்ளமையையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.*



**சர்வதேச நிதி வழங்கும் அமைப்புகள் நம்பிக்கையுடன் இலங்கைக்கு உதவிக் கரம் நீட்ட, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதே முன்னுரிமை தரப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறிவருகிறார். அந்த அரசியல் ஸ்திரத்தன்மை பெற, சஜித் பரிந்துரைப்பது புதிய தேர்தல் என்ற வழியைத் தான். இது குறித்து உங்கள் கருத்து?**

*சாத்தான்கள் வேதம் ஓதுகின்றன என்று சொல்வார்கள் அல்லவா.. அப்படித்தான் இந்தக் கருத்தை நான் பார்க்கின்றேன்.*

*முதலாவது, நாடாளுமன்றத்தினை தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியினால் உடனடியாகக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை அறிவிக்க முடியாது. நாடாளுமன்ற உறுபினர்களுள் அதிக பெரும்பான்மையானவர்கள், அதாவது 150 இற்கு மேற்பட்டவர்கள் நாடாளுமன்றத்தை கலைக்குமாறு எழுத்து மூலம் கோரிக்கை முன்வைத்தால் நாடாளுமன்றத்தினை கலைக்க முடியும். ஆனால் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு தயாராக இல்லை என்பது எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்றாக தெரியும். - அது சாத்தியம் என்றால் அவரே முன்னின்று அந்த முயற்சியை மேற்கொண்டிருப்பார். ஆக நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கி பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பது அல்லது அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவது என்பது தற்போதைக்கு சாத்தியமில்லை.*

*அடுத்ததாக, இவர்களிடம் தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான சிறந்த வேலைத்திட்டம் இருக்கின்றது. அரசாங்கத்தை கைப்பற்றி அந்த திட்டத்தினை முன்கொண்டு செல்வதற்கு தேர்தலை வலியுறுத்துகினறார்கள் என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையில் அதுதான் நோக்கமாக இருக்குமாயின், அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி அண்மையில் அழைப்பு விடுத்த போது ஓடி ஒளிந்திருக்க மாட்டார்கள்.*

*ஆகவே, நீங்கள் சுட்டிக்காட்டுகின்ற எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கள் அனைத்தும் வெறும் அரசியல் நோக்கம் கொண்டவையே தவிர, நாட்டை பாதுகாப்பதற்கான அக்கறையோ மக்கள் நலன்சார்ந்தவையோ இல்லை.*

**உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதி மூலம் டாலர் வருவாய் என அதிக வருமானம் ஈட்டக்கூடிய இலங்கையின் மீன் வளத்துறை அமைச்சராக உங்களுக்கு நீண்ட அனுபவம் உண்டு. இந்தத் துறையில் இதுவரை உங்கள் சாதனைகள் மற்றும் உங்கள் எதிர்காலத் திட்டங்களை சுருக்கமாகக் கூற முடியுமா? தென்னிந்திய மீனவர்களுடனான ஒத்துழைப்பு ஆழ்கடல் மீன்பிடிப்பை வளர்ப்பதில் பயனளிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

*கடற்றொழில் அமைச்சர் என்ற அடிப்படையில் எனது திட்டம் என்ன என்பதை ஏற்கனவே சுருக்கமாக தெரிவித்து விட்டேன் என்று நம்புகின்றேன். நீங்கள் கூறுவது போன்று தென்னிந்திய மீனவர்களுடன் ஒத்துழைத்துச் செயற்படுவது நன்மையானது என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தில்லை.*

*இந்தியா போன்ற அண்மையில் இருக்கின்ற பாரிய சந்தைகளுக்கு எமது கடற்றொழிலாளர்களினால் பிடிக்கப்படுகின்ற மீன்களையும் கொண்டு செல்லும் சூழல் உருவாகுமானால், அது எமது கடற்றொழிலாளர்களுக்கு பாரிய நன்மை பயப்பனவாக அமையும். அதேபோன்று இந்திய போன்ற பெரிய நாட்டின் தொழில்நுட்ப அனுசரணையும் அனுபவமும் எமது கடற்றொழிலாளர்களை மேலும் வலுப்படுத்தும்.*

*அவ்வாறான மகிழ்ச்சிகரமான சூழல் உருவாக்கப்பட வேண்டுமானால், எமது கடல் வளத்தை அழிக்கும் வகையில் இந்தியக் கடறொழிலாளர்கள் எல்லை தாண்டி வந்து மேற்கொள்ளுகின்ற சட்டவிரோத தொழிலான றோலர் தொழிலை (Bottom Trawling) இந்தியக் கடற்றொழிலாளர்கள் முற்றாகக் கைவிட வேண்டும்.*

*தடைசெய்யப்பட்ட தொழில் முறையான றோலர் தொழிலை மேற்கொண்டு வருகின்ற இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில் முறையாக ஆழ்கடல் மீன்பிடியை பழக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கடந்த பல ஆண்டுகளாக இந்திய அரசாங்கத்தினால் எமக்கு சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால் நாங்கள் திருப்தியடையும் வகையில் கணிசமான றோலர் தொழிலாளர்கள் தங்களை ஆழ்கடல் மீன்பிடிக்கு மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.*

*ஆனால், பாரிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தரக் கூடிய ஆழ்கடல் மீன்பிடியில் எமது கடற்றொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளில் நான் ஈடுபட்டு வருகின்றேன். அதன் பிரதான கட்டமாக பருத்தித்துறை, குருநகர், பேசாலை போன்ற பிரதேசங்களில் நவீன துறைமுகங்களை உருவாக்குவதற்கான முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளேன்.*

*ஏற்கனவே பாரிய துறைமுகத் திட்டத்தினை மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்திருந்த போதிலும் கடந்த கால ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்றிறன் இன்மை காரணமாக அந்த வாய்ப்பு கைநழுவிப் போய்விட்டது. எனினும், குறித்த துறைமுகங்களை அமைத்து தருவதற்கு இந்தியா முன்வந்திருக்கின்ற நிலையில், தற்போது பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகி இருக்கின்றன.*

*அதேபோன்று ஆழ்கடல் மீன்பிடிக்கு எமது கடற்றொழிலாளர்களை தயார்ப்படுத்துகின்ற வேலைத் திட்டத்தினையும் எற்கனவே ஆரம்பித்திருக்கின்றேன். அண்மையில்கூட, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற பலநாள் கலன்களில் பணிபுரிவதற்கான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மன்னார் மாவட்டத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கியிருக்கின்றேன். மேலதிகமாக அவர்களுக்கு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருக்கின்றேன்.*

*ஏற்கனவே நாட்டில் 21 துறைமுகங்கள் இருந்த நிலையில் சில வாரங்களுக்கு முன்னர் வெல்லமன்கர, கலமிட்டிய ஆகிய இரண்டு துறைமுகங்களின் கட்டுமான வேலைகளை நிறைவு செய்து கட்றறொழிலாளர்களின் பாவனைக்கு கையளித்திருக்கின்றோம். விரைவில் ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளையும் ஆரம்பிப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றேன்.*

*அதேபோன்று ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான பலநாள் கலன்களை கொள்வனவு செய்ய முன்வருகின்ற கடற்றொழிலாளர்களுக்கு முடிந்தளவு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்ற செய்தியையும் தெரிவித்திருக்கின்றேன்*

*இவ்வாறான நிலையில், எதிர்காலத்தில் இந்தியக் கடற்றொழிலாளர்கள், றோலர் தொழிலைக் கைவிட்டு முற்றாக ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுவார்களாயின், அவர்களுடன் இணைந்து செயற்படுவது எமது கடற்றொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும்.*

**தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள மட்டுமல்லாமல், நீண்ட கால மறு சீரமைப்புக்கும் இலங்கைக்குச் சிறந்த துணையாக இந்தியா, சீனா இரண்டில் எதை நீங்கள் கருதுகிறீர்கள்?**


*தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை என்பது நடுநிலையானது என்பதை எமது ஜனாதிபதி ஏற்கனவே வெளிப்படையாக தெரிவித்திருக்கின்றார். எமது பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கும், எமது நாட்டை நிலையான அபிவிருத்தி நோக்கி முன்கொண்டு செல்வதற்கும் தேவையான உதவிகளை வழங்குவதற்கு யார் முன்வந்தாலும், எமது இறைமையை பாதிக்காத வகையில் அவற்றை ஏற்று பயனடைய வேண்டும் என்பதே கடந்த காலங்களில் எமது நிலைப்பாடாக இருந்திருக்கின்றது.*

*எவ்வாறாயினும், தனிப்பட்ட முறையில் என்னுடைய முதல் தெரிவு இந்தியாவாகவே இருக்கும் என்பதை கடந்த காலங்களில் நான் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்றேன்.(என்னுடைய ஆயுதப் போராட்ட காலத்திலிருந்து நீங்கள் என்னை அறிந்தவர் என்ற வகையில், எனது வெளிப்படையான இந்தக் கருத்து உங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தாது என்று நம்புகின்றேன்.)* *(17.06.2022)*

# பகலில் படம் போடாதீர்கள்...!

ரஜினியின் பேட்ட படம் மூலம் அறி முகமானவர் மாளவிகா மோகனன். தற்போது, பிரபாஷுடன் புதிய படத்தில் நடிக்கவுள்ளார்.

சமூகவலைத்தளங்களில் கவர்ச்சிப் படங்களை பகிர்ந்து வரும் அவர்,



அண்மையில் பகிர்ந்த படங்களுக்கு பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்த நிலையில் ரசிகர் ஒருவர், மக்கள் அதிகம் உள்ள பகல் நேரங்களில் புகைப்படங்களை பதிவிடாதீர்கள். சென்னையின் சாலைகள் பள்ளமாக இருக்கின்றன. நான் ஒரு பெரிய பள்ளத் தில் விழப் பார்த்தேன் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு பதிலளித்த மாளவிகா நான் இதனை பாராட்டாக எடுத் துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# வசூல் சாதனை



கமல் நடிப்பில் வெளியான விக்ரம் படம் 25 நாட்களில் 400 கோடி இந்திய ரூபாயை வசூலித்துள்ளது. 150 கோடி ரூபாய் செலவில் உருவான இந்தப் படம் ஏறக்குறைய 250 கோடி வரையில் இலாபத்தை கொடுத்துள்ளது.

இதற்கு முன்பு ரஜினிகாந்த் நடித்து வெளிவந்த “2.0” படம் 600 கோடி ரூபாய் செலவில் தயாராகி 800 கோடி ரூபாய் வசூலித்ததே சாதனையாக இருந்தது.

ஆனால், இலாபம் என்ற வகையில் “2.0” படத்தை விடவும் “விக்ரம்” படம்தான் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஏற்கனவே தமிழகத்தில் அதிக இலாபம் கொடுத்த படமாக விக்ரம் ஏற்கனவே பதிவாகி விட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

# புதிய சாதனை!

தமிழ் இயக்குநராக லிங்குசாமி தெலுங்கில் அறிமுகமாகும், தெலுங்கு நடிகரான ராம் பொத்தினேனி தமிழில் அறிமுகமாகும் படம் “தி வாரியர்”. தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் தயாராகியுள்ள இந்தப் படம் வரும் 14ஆம் திகதி வெளியாகிறது.

இப்படத்தில் இடம் பெற்ற “புல்லட்” பாடல் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. தேவி ஸ்ரீ பிரசாத் இசையில் சிலம்பரசன், ஹரிப்ரியா பாடியுள்ள இந்தப் பாடல் யூ-ரியூபில் தமிழில் 57 மில்லியன் தெலுங்கில் 73 மில்லியன் பார்வைகளையும் கடந்துள்ளது. அதுமட்டுமின்றி செயலிகளிலும் சேர்த்து 11 பில்லியன் முறை இந்தப் பாடல் கேட்கப்பட்டுள்ளதாம். தென்னிந்திய மொழிப் படம் ஒன்றின் பாடல் 10 பில்லியன் சாதனையை படைத்துள்ளது இதுவே முதல் முறையாம்.




# மீளவும் ஆர். ஆர். ஆர். கூட்டணி!

இயக்குநர் ராஜமவுலி, ஜூனியர் என்.டி.ஆர்., ராம்சரண் கூட்டணி இணைந்த “ஆர்.ஆர்.ஆர்.“ படம் பெரும் வெற்றி பெற்று 1000 கோடி வசூலை பெற்றது. தற்போது, இந்தக் கூட்டணி மீண்டும் இணைந்து ஒரு படத்தை உருவாக்க பேச்சு ஆரம்பித்திருக்கிறது.

திரையரங்குகள், ஒடிடி தளம் என இப்படத்திற்குக் கிடைத்த வரவேற்பு இந்தக் கூட்டணியை மீண்டும் இணைத்து ஒரு படத்தை உருவாக்க பேச்சு ஆரம்பமாகியுள்ளது.

பேச்சு சுமுகமாக முடிந்தால், ராஜமவுலி - மகேஷ்பாபு கூட்டணி இணையவுள்ள படத்தின் படப்பிடிப்பு முடிந்ததும், இந்தக் கூட்டணி இணையும்.

# விஜயை இயக்கப்போகும் சிபி



‘டான்’ திரைப்படம் பெரும் வெற்றி பெற்றும், படத்தின் இயக்குநர் சிபி சக்கரவர்த்திக்கு அடுத்தகட்ட வாய்ப்புகள் அமையவில்லை எனப் பேச்சு திரையுலகில் உள்ளது.

ஆனால், சத்தம் சந்தடியின்றி விஜய்க்கு கதை சொல்லியிருக்கிறார் சிபி. ஒரு வரிக் கதைக்கு விஜய் சம்மதம் சொல்லியிருக்கிறார். இதனால், அவர் கதையை விரிவாக்கம் செய்து வருகின்றார்.

# கமலுடன் இணையும் மம்முட்டி!

சமீபத்தில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல் நடிப்பில் வெளியான விக் ரம் திரைப்படம் மிகப் பெரும் வெற்றியை பெற் றது.


இந்த படத்தைத் தொடர்ந்து, அடுத்ததாக இயக்குநர் மகேஷ் நாராயணன் இயக்கத்தில் கமல் ஒரு படத்தில் நடிக்கவுள் ளார். மகேஷ் நாராயணன் கமல் நடித்த விஸ்வரூபம் படத்துக்கு எடிட்டராக பணியாற்றியவர்.

விக்ரம் படம் போல இந்தப் படத்திலும் கமலுக்கு இணையான இன்னொரு முக்கிய கதாபாத்திரம் இருப்பதாகவும் அந்த கதாபாத்திரத்தில் மம்முட்டியை நடிக்க வைக்க தற்போது பேச்சு நடக்கிறது.



## திரைப்படம் - ராக்கெட்ரி - நம்பி விளைவு

**இயக்கம் - மாதவன்**
**இசை - சாம் சி. எஸ்.**
**நடிப்பு - மாதவன், சிம்ரன்**




இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ இன்று விண்வெளித் துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறது. அந்த சாதனைக ளுக்கு விண்வெளி விஞ்ஞானியான நம்பி நாராயணன் உழைப்பும் ஒரு காரணம்.

விண்வெளித் துறையின் எதிர்காலம் திரவ எரிபொருள் தொழில்நுட்பத்தை நோக்கித்தான் போகும் என்பதை 1970களில் உணர்ந்து அதற்கான முயற்சியில் இறங்கி திரவ எரிபொருள் விண்வெளி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் நம்பி நாராயணன்.


1994ஆம் ஆண்டு அவர் அயல் நாட்டுக்கான ஏவுகணை தொழில்நுட்ப இரகசியங்களை விற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு கேரள பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

50 நாட்களுக்குப் பிறகு சிறையில் இருந்து வெளியில் வந்தாலும் நான்கு வருட சட்டப் போராட்டத்துக்குப் பிறகு 1998ஆம் ஆண்டுதான் நம்பி நாராயணன் குற்றமற்றவர் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இப்படி பல சாதனைகளையும், சோதனைகளையும் சந்தித்த நம்பி நாராயணனின் வாழ்க்கை வரலாற்றுப் படம் தான் இந்த “ராக்கெட்ரி – நம்பி விளைவு”.

நடிகர் மாதவன் இயக்குநரான முதல் படம் இது. ஒரு சிறந்த படத்தைக் கொடுத்திருக்கிறார். முதல் படத்திலேயே ஒரு சவாலான கதையை எடுத்துக் கொண்டு படமாக்குவது சாதாரண விஷயமல்ல. இந்தியாவில் ஆரம்பமாகும் கதை பின்னர் அமெரிக்கா பயணித்து, மீண்டும் இந்தியா திரும்பி, பின்னர் ரஷ்யா சென்று, திரும்பவும் இந்தியா திரும்புகிறது. 1970கள், 1990கள் என அந்தக் காலத்து வெளிநாடுகளையும் திரையில் கொண்டு வந்து காட்டி கடுமையாக உழைத்திருக்கிறார் இயக்குநர் மாதவன். தமிழ் வசனங்களையும் அவரே எழுதியுள்ளார். பல வசனங்கள் திரையரங்குகளில் கைத்தட்டல் பெறும் அளவுகு உள்ளன. நடிகராக பலரின் மனம் கவர்ந்த மாதவன், இயக்குநராகவும் மனம் கவர்ந்துவிட்டார்.



இயக்கத்திலுள்ள பொறுப்புடன் நம்பி நாராயணன் கதாபாத்திரத்தையும் ஏற்று சிறப்பாக நடித்திருக்கிறார் மாதவன். அதிலும் வயதான தோற்றத்தில் பார்க்கும்போது இருவருக்கும் வித்தியாசமே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அப்படியே மாறியிருக்கிறார் மாதவன். தேசத்துக்காக ஈடுபாட்டுடன் உழைக்கும் ஒரு விஞ்ஞானி. அமெரிக்காவின் நாசா விண்வெளித் துறை அவரின் திறமையைப் பார்த்து வேலைக்கு அமைத்தும், அதை உதறிவிட்டு நாட்டுக்காக உழைக்க வேண்டும் என இந்தியாவுக்குத் திரும்பியவர். திரவ எரிபொருள் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்து எந்திரத்தை உருவாக்கியவர். இப்படி பல புதிய சாதனைகளைப் படைத்தவரை திடீரென கேரள பொலிஸ் நாட்டுக்கு துரோகம் செய்ததாகக் கூறி கைது செய்கிறது. அதன்பின் அவரும், அவரின் குடும்பத்தினர் அனுபவிகக்கும் துயரங்களும் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது. இந்த ஆண்டின் தேசிய விருதுகளில் பல விருதுகள் இந்தப் படத்துக்கு கிடைக்க வாய்ப்புள்ளது.




மாதவனின் மனைவியாக சில காட்சிகளில் சிம்ரன். இவர்கள் இருவர் மட்டுமே நமக்கு அதிகம் தெரிந்த முகங்கள். மற்ற கதாபாத்திரங்களில் நடித்தவர்களில் ராகவேந்தர், ஜெகன், மிஷா மட்டுமே நமக்குத் தெரிந்தவர். மற்றவர்கள் புதுமுகங்களாக இருக்கிறார்கள். இருப்பினும் ஒவ்வொருவரும் அவரவர் கதாபாத்திரங்களில் நிறைவாக நடித்திருக்கிறார்கள்.

நம்பி நாராயணன் கதாபாத்திரத்தை பேட்டி எடுப்பவராக சூர்யா நடிகராகவே நடித்திருக்கிறார். அந்தப் பேட்டியிலிருந்துதான் காட்சிகள் பின்னகர்கின்றன. சாம் சிஎஸ் பின்னணி இசை படத்துக்கு மிகவும் பக்கபலமாக அமைந்துள்ளது. உணர்வுபூர்வமான பல காட்சிகளுக்கு உயிரோட்டமான இசையைத் தந்திருக்கிறார். சிரிஷா ராய் ஒளிப்பதிவு அந்தக் காலகட்டங்களை இயல்பு மாறாமல் பதிவு செய்திருக்கிறது.

றொக்கெட் தொழில் நுட்பம் சார்ந்த பல தொழில்நுட்ப விடயங்கள் படத்தில் இடம்பெற்றுள்ளது. அவை பலருக்கும் புரியாத ஒன்று. படம் முழுவதும் மாதவனை சுற்றி மட்டுமே நகர்கிறது. படத்தில் நம்பி நாராயணன் கதாபாத்திரம் செல்லும் இடங்களுக்கெல்லாம் ஓர் அமெரிக்கர் பின் தொடர்கிறார். அவர்தான் ஏதோ செய்து நம்பியை கைது செய்யவும் காரணமாக இருப்பாரோ என நம்மை யூகிக்க வைக்கிறார்கள்.

நம்பி நாராயணன் எதற்காக, யாரால், எந்தப் பின்னணியில் கைது செய்யப்பட்டார் என்பதை படத்தில் சொல்லவில்லை. அதை படத்தின் இரண்டாம் பாகமாக ஒரு முழுநீள வர்த்தகப் படமாகவும் எடுக்கலாம்.

# இயன் மோர்கன்

## இங்கிலாந்து வெள்ளைப்பந்து அணிகளுக்கு புதுப்பாய்ச்சல் தந்த தலைவன்!

'தூதன் வருவன்! வதைக்கப்படுவன்! மதலை விழிநீர் துடைப்பன்! மாரி பெய்யும்!' இவ்வரிகளுக்கு முழுவதுமாக பொருந்தக்கூடிய கிரிக்கெட் தலைவர்கள் மிகச் சிலரே.

அதில், முக்கியமானவர் இங்கிலாந்து அணியின் இயன் மோர்கன். சோர்ந்து கிடந்த இங்கிலாந்து அணிக்கு புது பாய்ச்சலிட்டு முதல் உலகக்கிண்ணத்தை வெல்ல வைத்தது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த அணியின் கலாசாரத்தையும் வேறொரு தளத்துக்கு எடுத்துச் சென்ற அவர் தற்போது சர்வதேச போட்டிகளில் இருந்து தன் ஓய்வை அறிவித்துள்ளார்.

இயன் மோர்கன் சர்வதேச அரங்கில் அயர்லாந்து அணிக்காகவே முதன் முறையாக களம் கண்டார். ஸ்கொட்லாந்துக்கு எதிராக தான் விளையாடிய முதல் ஒருநாள் போட்டியில் 99 ஓட்டங்களைக் குவித்தார். 2006 - 2009 வரையிலான ஆண்டுகளில் 23 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 744 ஓட்டங்கள் எடுத்திருந்த அவர் இங்கிலாந்தின் உள்ளூர் போட்டிகளில் மிடில்செக்ஸ், இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்காகத் தொடர்ந்து விளையாடி வந்தார். இதன்மூலம் 2009ஆம் ஆண்டு இருபது -20 உலகக் கிண்ண அணியில் இடம் பிடித்து இங்கிலாந்து அணியுடனான தன் கிரிக்கெட் பயணத்தைத் தொடங்கினார்.

அன்று முதல் கடைசியாக நடந்து முடிந்த இருபது -20 உலகக்கிண்ணம் வரை அத்தனை ஐ. சி. சி. கிண்ணத் தொடர்களிலும் மோர்கனுக்கு தவறாமல் இடம் கிடைத்தது. 2012ஆம் ஆண்டில் அணியின் உப அணித்தலைவராக உயர்த்தப்பட்ட அவர் 2014ஆம் ஆண்டு டிசெம்பரில் அலஸ்ரெயர் குக்கின் ஓய்வுக்குப் பிறகு இங்கிலாந்து அணியின் வெள்ளைப்பந்து அணிகளுக்கான தலைவரானார். இங்கிலாந்து அணிக்காக ஒருநாள் மற்றும் இருபது -20 போட்டிகளுக்கு அதிகமுறை தலைமை தாங்கி, அதிக ஓட்டங்கள், சிக்ஸர்கள், வீரராக அதிக போட்டிகள் எனப் பல்வேறு சாதனைகளும் மோர்கன் வசமே உள்ளன.

2015ஆம் ஆண்டு 50 ஓவர் உலகக் கிண்ணம் தொடர் இங்கிலாந்து கிரிக்கெட் இரசிகர்களுக்கு மட்டுமின்றி வீரர்களுக்கும் மறக்க வேண்டிய ஒரு தொடர். மோர்கன் அணித் தலைவராகப் பதவியேற்ற சில மாதங்களிலேயே நடந்த உலகக் கிண்ணத் தொடர் அது. வங்கதேசத்திடம் தோல்வி அடைந்து காலிறுதிக்குகூட தகுதிப்பெறாமல் வெளியேறியது இங்கிலாந்து.

ஆனால், அதன்பின் நடந்த மாற்றங்கள் அனைத்தும் இங்கிலாந்து வெள்ளைப்பந்து அணியை வரலாற்றுப் பக்கங்களில் இடம்பெறச் செய்ய வல்லவை என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை. அண்ட்ரூ ஸ்ரோஸ் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் இயக்குநரான பிறகு சிவப்பு பந்து மற்றும் வெள்ளைப்பந்து ஆகிய இரண்டுக்கும் இரு புதிய ஒப்பந்தங்கள் வகுக்கப்பட்டன. இதன் மூலம் இங்கிலாந்தின் வெள்ளைப்பந்து கிரிக்கெட்க்கு ஹேல்ஸ், ஜசன் றோய், ஆர்ச்சர் எனப் புது ரத்தம் பாய்ச்சப்பட்டது.

இதேபோல மறக்கவேண்டிய அந்த உலகக் கிண்ணத்துக்குப் பின்னர் அணியின் தலைமை பயிற்றுநராக ட்ரெவர் பெய்லிஸ் (Trevor Bayliss) நியமிக்கப்பட்டார். இவரின் ஆகச்சிறந்த மந்திரமாக 'Change the attitude' களத்தில் அப்படியே வெளிப்படத் தொடங்கியது. இந்த இரண்டும் சேர்ந்து வெற்றி என்னும் முடிவைத் தர Catalyst-ஆக செயல்பட்டார் மோர்கன்.



2015 முதல் 2019 காலகட்டத்தை இங்கிலாந்து வெள்ளைப்பந்து கிரிக்கெட்டின் பொற்காலம் என எந்த முன்யோசனையும் இல்லாமல் கூறிவிடலாம். மோர்கனின் தலைமையில் சொந்த மண்ணில் கணிசமான வெற்றிகளைப் பெற்று வந்த இங்கிலாந்து 2016ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக 444 ஓட்டங்கள் குவித்து உலக சாதனை படைத்தது.

அதே ஆண்டில் பிராத்வெயிட்டின் அதிரடியால் இருபது -20 உலகக் கிண்ணத்தை இழந்த அந்த அணி பெரும் எதிர்பார்ப்புடன் சொந்த மண்ணில் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத்தை (2017) எதிர்கொண்டது. ஆனால் அதிலும் பாகிஸ்தானுடனான அரையிறுதி போட்டியில் தோற்று வெளியேறியது.

அவ்வப்போது ஏற்படும் தோல்விகளால் தன் அணுகுமுறையில் இருந்து கொஞ்சமும் பின் வாங்கவில்லை இங்கிலாந்து. அதுவரை அடித்து ஆடியவர்கள் அதன்பின் இன்னும் உக்கிரமாக அடிக்கத் தொடங்கினர். 2018ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 481 ஓட்டங்கள் குவித்து தன் சாதனையை தானே மீண்டும் முறியடித்தது இங்கிலாந்து. ஆனால், அதே வருடத்தில் ஸ்காட்லாந்திடம் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்று அதிர்ச்சியை ஏற்படுத்தியது முதல்நிலை அணியாகத் திகழ்ந்த இங்கிலாந்து.

முன்பு தவறிய சம்பியன்ஸ் கிண்ணத்தைப் போலல்லாமல் "இந்தத் தடவை தவறாது" என 2019 உலகக்கிண்ணத்தில் களம் கண்டது மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து படை. ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒரே போட்டியில் 17 சிக்ஸர்களை அடித்து உலக சாதனை படைத்தார் மோர்கன். எப்போதும் சராசரி ஓட்டங்களையே கொடுக்கும் ரஷித் கானையே அன்று பதம் பார்த்தார் மோர்கன்.



பரபரப்பான இறுதிப்போட்டி சுப்பர் ஓவர் வரை சென்ற போதும்கூட, கூலாக ஆர்ச்சரை பந்துவீச வைத்து இங்கிலாந்துக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்தார். இதேபோல அடுத்து நடந்த இருபது -20 உலகக் கிண்ணத்தில் அணியை அரையிறுதி வரை அழைத்துச் சென்றார் மோர்கன்.

உலகக் கிண்ண வெற்றி, ஐ. சி. சி. தொடர்களில் நிலையான செயல்பாடு என இங்கிலாந்து அணியின் இந்த மாற்றங்களுக்கு முக்கிய காரணம் மோர்கன் காட்டிய பாதை. அடித்தளமின்றி தடுமாறிய அணிக்கு அதிரடி ஆட்டம்தான் இனி உங்கள் பாதை என வழிகாட்டினார் அவர். இந்தியா போன்ற நாடுகளுடனான வெளிநாட்டு தொடர்களில் தோல்வியடைந்த போதும் இந்தப் போக்கை மட்டும் மாற்றவில்லை. 2015-2019 காலகட்டத்தில் மட்டும் இங்கிலாந்து அணி 37 முறை 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்தது. மோர்கனின் தலைமைப் பண்பால் விளைந்தவை இவை.


டெஸ்ட் போட்டிகளுக்கு தன்னை மீண்டும் அணித் தலைவராக வருமாறு அழைத்த போது, "நான் அதற்குத் தயாராக இல்லை. ஸ்ரோக்ஸ் நல்ல தலைவர். அவரையே நான் உங்களுக்கு முன்மொழிகிறேன்" என எதிர்காலத்துக்கு வழி சொன்னார். சில்வர்வூட் பயிற்றுநர் பதவியிலிருந்து விலகியவுடன், டெஸ்ட் மற்றும் வெள்ளைப்பந்து போட்டிகளுக்கு தனித்தனி பயிற்றுனர் வேண்டும் என முன்மொழிந்தவரும் அவரே.

2019 உலகக் கிண்ணத் தொடரில் இடம்பெறவிருந்த அலெக்ஸ் ஹேல்ஸ் கடைசி நேரத்தில் Recreational Drug பரிசோதனையில் தோல்வியடைந்து அணியில் தன் இடத்தையும் இழந்தார். வாகன், நசீர் ஹுசைன், வோக்ஸ் போன்றோர் ஹேல்ஸுக்கு இரண்டாம் வாய்ப்பு வழங்குமாறு குரல் கொடுக்க, மோர்கனோ இவ்வாறு கூறினார். "2021 இருபது -20 உலகக் கிண்ண அணியில் ஹேல்ஸுக்கு கண்டிப்பாக இடம் இல்லை. எங்கள் முன்வரிசையை எக்காரணத்திற்காவும் இன்னலுக்கு ஆளாக்க மாட்டேன். இப்போது உள்ள இணைப்பை இழக்க நான் தயா ராக இல்லை" எனத் திட்ட வட் டமாகக் கூறிவிட்டார். கடந்த 18 மாதங்களாகக் காயத்தால் நிலையின்றி தவித்த மோர்கன் நடந்து முடிந்த நெதர்லாந்துக்கு எதிரான தொடரில் விளையா டிய 2 போட்டிகளிலும் டக் அவுட் ஆனார். தன் ஓய்வு முடிவை அறிவிக்கும் வரை யிலும் தன் அணிக்குத் தேவையானவற்றை தருவதில் மிக உறுதியாக இருந்தார் மோர்கன்.

இங்கிலாந்து அணி வருங்காலத்தில் 500 ஓட்டங்களைக்கூட அடிக்கலாம். ஆனால், அவை அனைத்துக்கும் விதை போட்டது அணித் தலைவர் மோர்கனே! "இங்கிலாந்து வெள்ளைப்பந்து கிரிக்கெட்டின் எதிர்காலம் எப்போதை யும்விட பிரகாசமாக உள்ளது!" என்று தன் ஓய்வு குறிப்பில் குறிப்பிட்டிருந்தார் மோர்கன்.

# “அவள் ஒரு பூங்கொத்து”
# தேவகி கருணாகரன் கதைகள்

**கே.எஸ்.சுதாகர்**




**தே**வகி கருணாகரனின் சிறுகதைகளை முன்பு வாசித்திருந்தாலும், “அவள் ஒரு பூங்கொத்து” என்ற தொகுப்பாக வந்தபோது மீண்டும் ஒரு தடவை வாசித்தேன். இங்கே இவர் பெண்களைப் பூவுக்கு ஒப்பிடாமல், பூங்கொத்திற்கு உயர்த்தி வைக்கின்றார். கதைகள் முழுவதும் பெண்மையைப் போற்றுகின்றார். அதற்காக இவர் ஆண்களைக் குறைத்து மதிப்பிடுகின்றார் என்று அர்த்தமல்ல. “என்றும் என்னவள்” கதையைப் படித்துப் பார்த்தால் அதுவும் புரிந்துவிடும். தன்னிடம் விவாகரத்து எடுத்த மனைவிக்காக, இருபத்தைந்து வருடங்கள் காத்திருந்து திரும்பவும் ஒன்றுசேரும் ஒரு ஆணின் கதை “என்றும் என்னவள்”. இந்தக் கதையில் சோமசுந்தரம் என்ற பாத்திரத்தை எட்டாத உயரத்தில் வைத்து அழகு பார்க்கின்றார் கதாசிரியர்.

ஆண் பெண் உறவுகள் மகத்தானவை எனக் கூறும் இவர் கதைகள், வாழ்வின் படிநிலைகளுக்கு மிகவும் அணுக்கமாகவே இருப்பதைக் காணலாம்.

இவரது கதைகளில் வரும் சில வார்த்தைப் பிரயோகங்கள் முழுக்கதையின் வீச்சையும் ஒருங்கே சுட்டி நிற்பதைக் காணலாம். “மன்னிப்பு’ என்ற சிறுகதையில் வரும் - எமிலி தன் பொன்னிறமான முடித்தலையை, நேத்தனின் கறுத்த முடித் தலையோடு சாய்த்து அவனை அணைத்தபடி...” போன்றவை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாகும். தொகுப்பின் முதல் கதையும் இதுவே!. அவுஸ்திரேலிய வெள்ளையினத் தம்பதிகளால் எடுத்து வளர்க்கப்படும் நேத்தன் என்பவன் தனது பூர்வீகத்தைத் தேடும் கதை இது. “தோலின் நிறத்தில் அவன் சிறீலங்கன், ஆனால் சிந்தனை பண்பாடு எல்லாமே அவுஸ்திரேலியன்’ - ஒரு இனத்தைச் சேர்ந்த ஒருவர் இன்னொரு இனத்தவரால் வளர்க்கப்படும்போது எல்லாமே மாறிவிடும்போதும், மனிதம் இங்கே மாறவில்லை என்பதைக் கதை சிறப்பாகச் சொல்கின்றது. கதையில் சிறீலங்கா இராணுவத்தினரின் அட்டூழியங்கள், வன்




முறைகள், பாலியல் வல்லுறவுகள் தொட்டுக் காட்டப்பட்டுள்ளமை சிறப்பு. பாத்திர வார்ப்பு, களம் என்பவை சிறப்புற வந்திருக்கும் இந்தக்கதையின் இறுதிப் பகுதி மிகவும் விறுவிறுப்பாகச் செல்கின்றது. வாசித்து முடித்த பின்னரும் மனதில் ஒரு நெகிழ்ச்சியைத் தருகின்றது.

சிட்னியில் தன்னுடன் ஒன்றாகப் படிக்கும் மெடிக்கா என்ற பெண்ணை, இலங்கையைச் சேர்ந்த மாதவன் விரும்புகின்றான். “மெடிக்கா” என்றால் அவளது மொழியில் பூங்கொத்து. அந்தப் பூங்கொத்தின் பெற்றோரைச் சந்தித்து, சம்மதம் பெற பேர்த் என்ற நகரம் நோக்கி இருவரும் செல்கின்றார்கள். போகும் வழியில் மெடிக்கா கலப்பின ஆதிவாசிப்பெண் என்று தெரிந்து கொள்கின்றான் மாதவன். மெடிக்காவின் பெற்றோரிடம் சம்மதத்தைப் பெற்றுக்கொண்ட மாதவன், தன்னுடைய பெற்றோரிடம் சம்மதம் பெற முடியாமல் தவிக்கின்றான். சம்மதம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் “அவள் ஒரு பூங்கொத்து’ என்ற கதை முடிகின்றது. கதையில் வரும் இன்னொரு முக்கிய பாத்திரம் மெடிக்காவின் கிரான்பா. பேர்த்தில் சந்திக்கும் கிரான்பாவின் மூலம் ஆதிவாசிகளுக்கு நேர்ந்த கொடுமைகள் கதையில் சொல்லப்படுகின்றது.

ஒரே இனம் மொழியைக் கொண்டவர்கள் கூட, வெவ்வேறு இடம் சூழ்நிலைகளில் வளரும்போது ஒவ்வாதவர்களாக ஆகிவிடுகின்றார்கள். அதே நேரம் வெவ்வேறு இனம் மொழியைக் கொண்டவர்கள் சந்தர்ப்பவசத்தால் இணைந்துவிடுவதும் உண்டு. “காலத்தால் கரையாத நினைவுகள்’ சிறுகதையில் வரும் நிவேதாவுக்கும் கார்த்திக்குக்கும் இடையே நடப்பதும் நிவேதாவுக்கும் கிரனுக்கும் இடையே நடப்பதும் இதுதான்.

“திண்டாடும் பண்பாடு” சிறுகதையில் முதியோர் பிரச்சினை அலசப்படுகின்றது. வேலை, பிள்ளைகளின் படிப்பு என்பவற்றுடன் முதியவர்களான பெற்றோரை வீட்டில் வைத்து பராமரிக்க முடியாத சூழ்நிலை. முதியோர் இல்லத்திற்கு பெற்றோரை அனுப்புவது பற்றி - புலம்பெயர் நாடுகளில் சாதக பாதகமான கருத்துகள் நிலவுகின்றன. எந்தவொரு பெற்றோரும் விருப்பப்பட்டு முதியோர் இல்லம் செல்வதில்லை என்ற கருத்துத்தான் பரவலாக இருந்து வருகின்றது. இந்தக் கதையில் பூரணம் என்பவர் தனது சுய விருப்பின் பேரில் முதியோர் இல்லம் வந்திருக்கின்றார். அவருக்கும் பலவந்தமாக முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்பட்ட வினோதினி என்பவருக்குமிடையேயான உரையாடல் தான் கதையின் பெரும்பகுதியாகச் சொல்லப்படுகின்றது.

“இருதலைக் கொள்ளி எறும்பு”, “நாடோடிகள்” கதைகள் நைஜீரிய நாட்டின் அரசியல், அங்குள்ள மக்களின் கலாசாரம் பண்பாடு, வாழ்வு அனுபவங்கள் பிரதிபலிக்கின்றன. “சிந்தாமணியின் நினைவுகள்” என்ற கதை, சிறுகதை வடிவத்தைத் தாண்டி விவரணப்பாங்கில் சென்றாலும் எம்மை பழைய நினைவுகளுக்கு இட்டுச் செல்கின்றது. அறிவியல் புனைகதைப் பிரியர்களுக்கு “வானமே எல்லை’ காத்துக் கிடக்கின்றது.

பல அறிவியல் விடயங்கள் பொதிந்து கிடக்கும் இவரின் கதைகளை வெறுமனே வாசித்துவிட்டுக் கடந்து போய் விட முடியாது. செயற்கைத் தன்மையற்ற, என்றும் மனதில் நிழலாடும் பாத்திரங்களைக் கொண்ட படைப்புகள் அவை. வலிந்து புரட்சிகரக் கருத்துக்களைத் திணிக்காமல், ஆற்றொழுக்கு நடையில் வாழ்க்கையின் இயல்பு நிலையைப் படம் பிடிப்பவை.

“சிந்தன் புக்ஸ்” பதிப்பகமாக வந்திருக்கும் இந்தப் புத்தகத்தின் அட்டைப்படம், வழமையான தமிழ்ப்புத்தகங்களின் அட்டைப்படங்களிலிருந்தும் விலகி, ஆங்கிலப்புத்தகத்திற்கு நிகராக இருப்பதைக் காணலாம்.

தாயகத்தில் நீண்டகாலப் போரினால் ஏற்பட்ட பாதிப்புகள், முதியோர் பிரச்சினை, அவுஸ்திரேலிய ஆதிவாசிகளின் வரலாறு, போதைப்பொருள் பாவனை, அறிவியல் எனப் பல விடயங்களை இவரது சிறுகதைகள் பேசுகின்றன. ஒரு பூங்கொத்தில் பலவிதமான மலர்கள் அழகழகாக இருந்துகொண்டு வாசனை பரப்புவது போல, தேவகி கருணாகரனின் “இந்தப் பூங்கொத்து’ம் வாசகர் உள்ளங்களில் மணம் பரப்பும், மனங்களைக் குணப்படுத்தும். மென்மேலும் படைப்புகள் தந்திட தேவகி கருணாகரனுக்கு எமது வாழ்த்துகள்.

---




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**கே. தயாகரன், ஏழாலை தெற்கு, ஏழாலை**

### கேள்வி:

கோட்டா கோ கம இப்போது எப்படி இருக்கின்றது? முன்னர் தினசரி அதுபற்றியே ஊடகங்களில் செய்திகள் வந்துகொண்டிருந்தன. இப்போது அதுபற்றி யாரும் கதைப்பதில்லையே ஏன்?

### வியுக்தியார்:

அது ஆரம்பிக்கப்பட்டபோதே மற்றுமொரு காணாமல் போனோர் போராட்டம் போலத்தான் தொடரும் என்று ஈழநாடு கோடிகாட்டியிருந்தது. அதற்காக நமது காணாமல்போனவர்களின் போராட்டத்தை கொச்சைப் படுத்துவதாக எண்ணிவிடவேண்டாம். வவுனியா நீதி மன்றின் முன்னால் அவர்கள் வருடக்கணக்காக காத்திருக்கிறார்கள். இவர்களும் அப்படித்தான் காத்திருக்க வேண்டி யிருக்கும் என்று குறிப்பிட்டிருந்தது. இனி அவர்கள் அண்மையில் எழுபத்தைந்தாவது நாளை நினைவுகூர்ந்தார் கள். அடுத்தது நூறாவது நாள். ஆனால் அந்தப் போராட்டத்தின் பின்னால் நின்ற பிரதான பங்குதாரர்களான ஜேவிபியினர் கூட இப்போது இருபத்தியோராவது திருத்தத்தை கொண்டுவந்து ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைத்தால், சர்வகட்சி அரசிற்கு ஆதரவு தரலாம் என்று விட்டார்களே? அதிலிருந்து தெரியவில்லையா இவர்களே கோட்டா வீட்டுக்குப் போகாவிட்டாலும் பரவாயில்லை என்றுவிட்டார்கள் என்று?

---

**ஆர். தங்கேஸ்வரன், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு**

### கேள்வி:

முற்றிலும் சரிந்த பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டை மீட்டெடுப்பது எளிதான காரியமல்ல. ஆரம்பத்தில் பொருளாதாரத்தின் வீழ்ச்சியை மெதுவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால், இன்று நாம் இந்த கடினமான சூழ்நிலையை எதிர் கொண்டிருக்க வேண்டி வந்திருக்காது. ஆனால், இந்த வாய்ப்பை இழந்தோம். மிகக் கீழே விழுந்துவிடக்கூடும் என்பதற்கான அறிகுறிகளை இப்போது காண்கிறோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதன் அர்தத்ம் என்ன என்று உங்களுக்காவது புரிகின்றதா?

### வியுக்தியார்:

இதில் என்ன இருக்கிறது புரிந்துகொள்வதற்கு? விழுந்துகொண்டிருக்கும் நாட்டை அது விழுந்து கொண்டிருந்தபோது, அதனை மெதுவாக்க நடவடிக்கை எடுத்திருந்தால், இவ்வளவு கெதியாக விழுந்திருக்காது என்றுதான் சொல்கிறாரே தவிர, விழுந்துவிடாமல் தடுத்திருக்கலாம் என்று சொல்லவில்லையே. ராஜபக்சக்கள் நடவடிக்கை எடுத்திருந்தாலும் அது விழுவதை தடுத்திருக்க முடியாது என்று அவர்களுக்கு அவர் “சேட்டிபிக்கெற்” கொடுக்கிறார் அவ்வளவுதான். வந்த வேலையை செய்தால் தானே தொடர்ந்து பதவியிலிருக்கலாம்.

---

**சாமிநாதன் பிரதீபன், தேற்றாத்தீவு, மட்டக்களப்பு**

### கேள்வி:

இலங்கை பொறுக்கிகள், கயவர்கள், கள்வர்கள், அயோக்கியர்கள், அதிகார வெறிபிடித்தோர், மூடர்களின் தேசம் என்று ஒரு பிரபல அரசியல் ஆய்வாளர் கூறுகின்றாரே அது சரியாகத்தான் இருக்குமோ?

### வியுக்தியார்:

முதலில் அவர் கயவரை, கள்ளரா, அயோக்கியரா, அதிகார வெறிபிடித்தவரா, மூடரா என்று கேட்டுச் சொல்லுங்கள். அவரும் இதில் ஒருவராகத்தானே இருக்கவேண்டும். அப்போது தெரியும் அவர் சொல்வது சரியா அல்லது தவறா என்று. ஏனெனில் அவரும் இலங்கையில் தானே இருக்கிறார்?

---

**ராஜா ரகுநாதன், வெள்ளவத்தை, கொழும்பு 6**

### கேள்வி:

நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு எதிராக பெண்கள் போராட்டங்களை நடாத்துகின்றபோது, ஒரு பெண்ணின் போராட்டத்தை கேலிசெய்வதற்காக அவரின் அங்கங்களை சித்திரித்து முகநூலில் பதிவிட்டு அவரை விமர்சிப்பதை என்னவென்று சொல்வது?

### வியுக்தியார்:

நீங்கள் எந்தப் போராட்டத்தை- யாரைப்பற்றி சொல்கின்றீர்கள் என்பது இரகசியமானதல்லவே. ஹிருணிக்கா, தான் தனது மார்பகங்களை எண்ணி பெருமைப்படுகின்றேன் என்று அறிக்கை வெளியிட்டு அதுபோல படங்களை பதிவெற்றியவர்களுக்கு பதிலளித்திருக்கின்றாரே. அவர் தனது முன் அழகு பின் அழகு பற்றியெல்லாம் ஏற்கனவே பாராளுமன்றத்திலும் கூறிப் பெருமைப்பட்டதை தெரியாதவர்கள் தான் இப்படியெல்லாம் படங்களை பதிவேற்றுகின்றார்கள். அது கூட அவருக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியதுதான். அவர் அரசியல்வாதியாயிற்றே.



# தொழிலாளி

மு. தயாளன்

டேவிட்டும் கமலனும் ஒன்றாகவே வேலை செய்தார்கள். அந்தப் பட்டினத்தில் பெயர்போன உணவகம்தான் இவர்களின் வேலைத்தலம். புலம்பெயர் நாடுகளில் ஜெர்மனியில்தான் கூடுதலான தமிழர்கள் உணவகங்களில் வேலை செய்வார்கள். இவர்கள் வேலை செய்த உணவகம் ஒரு தேவாலயத்திற்கு அருகில் இருந்தது. ஞாயிற்றுக்கிழமைகளில்தான் தேவாலயத்திற்கு வருபவர்கள் கூடுதலாக அங்கு வருவார்கள்.

கமலனுக்குப் பின்தான் டேவிட் அங்கு சேர்ந்திருந்தான். கமலனுக்கு முதலாளியிடம் நல்ல பெயர் இருந்தது. டேவிட் வருமட்டும் கமலன் கோப்பை கழுவும் வேலையே செய்தான். டேவிட் வந்தபின் சமையல் செய்பவருக்கு உதவியாளராக மாறிவிட்டான். வெங்காயம் வெட்டிக் கொடுப்பது, உருளைக் கிழங்கின் தோலுரித்துக் கொடுப்பது, இறைச்சியை சிறு துண்டுகளாக்கிக் கொடுப்பது ஆகிய வேலைகளையே செய்தான். அவனுக்கு இந்தப் பதவி உயர்வையிட்டு மிகுந்த சந்தோசம்.

கோப்பைகளைக் கழுவி அடுக்குவது, சுவரிலுள்ள ஊத்தைகளைத் துடைப்பது, சமைக்கும் மேசைகளைத் துப்பரவு செய்வது ஆகியவை டேவிட்டின் பணிகள். டேவிட்டுக்கு இவைகளைச் செய்வதில் அவ்வளவாக விருப்பமில்லை. அதுவும் கமலன் தன்னைவிட கூடுதலான இடத்தில் வேலை பார்ப்பது அவனுக்கு அறவே பிடிக்கவில்லை.

இவர்களோடு உள்ளே மேலும் இரண்டு பெண்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் ஹெலனாவை கமலனுக்கு நிரம்பப் பிடிக்கும். கமலன் கோப்பை கழுவும் காலத்தில் ஹெலனாவும் வந்து உதவி செய்வாள். ஹெலனா ஆங்கிலேயப் பெண்ணல்ல. உக்ரேயின் நாட்டைச் சேர்ந்தவள். படிப்பதற்காக லண்டன் வந்தவள் பகுதிநேர வேலையாக இங்கு வேலை செய்கிறாள். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பாள். அவள் இங்கு வந்தபின்தான் உக்ரேயினில் சண்டை தொடங்கி இருந்தது. அதனால் எப்பொழுதும் பதட்டமாகவே இருப்பாள்.

ஹெலனாவின் பெற்றார் உக்ரெயினில்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் கவலையோடுதான் இருப்பாள். ஹெலனாவுக்கும் கமலனுக்கும் நன்றாக ஒத்துப்போகும். அவள் கவலைப்படும்போது கமலன் தனது நாட்டில் பிரச்சினை உச்சக் கட்டத்திலிருந்தபோது பட்ட துன்பங்களையும் கவலைகளையும் கூறுவான். ஒரு துன்பப்படுபவருக்கு இன்னொரு துன்பப்படுபவரின் அனுபவங்கள்தான் ஆறுதலைக் கொடுக்கும் என்பதுபோல் அவளும் அவனைக் கவலையோடு பார்ப்பாள்.

ஹெலனா எப்பொழுதும் செய்திகளைப் பார்த்துக் கொண்டே வேலை செய்வாள். இதனைக் கவனிக்கின்ற முதலாளி அவள்மீது சத்தம்போடுவதுண்டு. அடிக்கடி குசினிக்குள்வரும் ஹெலனா இப்போது கொஞ்ச நாட்களாக வருவதில்லை. அதுவும் கமலன் சமையல் உதவியானராக மாறிய பின்பு வராமலே விட்டுவிட்டாள்.

டேவிட் வந்தபின் அவள் குசினிப் பக்கம் வருவதில்லை. கமலன் ஒரு தடவை “ நீ ஏன் இப்போ சமையலறைக்கு வருவதில்லை” என்று கேட்டான்.

“ எனக்கு டேவிட்டின் பார்வை பிடிக்கவில்லை அதுதான் வருவதில்லை” என்று கூறினாள்.

கமலனுக்கும் டேவிட்டை அவ்வளவாகப் பிடிப்பதில்லை. டேவிட் ஒரு சோம்பேறியாக இருந்தான். அவனுக்குக் கதைக்கவே தெரியாது. தான் கதைப்பது மற்றவர்கள் மனதைத் துன்புறுத்தும் என்பதை உணர்வதேயில்லை.

முதலாளி சமையலறைப் பக்கம் வரும்போது மட்டும் வேலை செய்வதுபோல் நடிப்பான். மற்றும்படி கமலனைச் சீண்டிக் கொண்டே இருப்பான். சமையல்காரராகவுள்ள ஜோன்சன் பல தடவை அவனைக் கண்டித்திருக்கிறார். அவன் கேட்பதாக இல்லை.

ஜோன்சன் ஒல்லாந்து தேசத்தைச் சேர்ந்தவன். நல்லவன். நடுத்தர வயதுடையவன். தன் வேலையில் மிகுந்த கவனமுடையவன். கமலனுக்கு சமைக்கும் விதங்களைக் கற்றுக் கொடுப்பான். கமலனுக்கும் அவனை நன்கு பிடிக்கும். சமையல் கற்றுக் கொடுக்கும்போது ஒரு நாள் டேவிட் ஜோன்சனைப் பார்த்து “ உந்த அகதிக்குக் கற்றுக் கொடுக்காதே. இவர்கள் எங்கள் நாட்டை சுரண்ட வந்துள்ளார்கள்.” என்று கூறினான்.

ஜோன்சன் அவனைப் பேசினான். டேவிட் எதையும் சட்டை செய்வதாக இல்லை. தொடர்ச்சியாக கமலனை நோக்கி இனரீதியான வார்த்தைகளை அள்ளி வீசிக் கொண்டிருப்பான்.

கமலனுக்குக் கோபம் வரும் ஆனால் அமைதியாக இருந்துவிடுவான். தானுண்டு தன் வேலையுண்டு என்பதில் கமலன் கவனமாகவே இருப்பான்.

ஒரு நாள்

“ நீ ஏன் எங்கடை நாட்டுக்கு வந்தனீ..உங்கடை நாட்டிலை இருக்கலாம்தானே..” என்று டேவிட் சொன்னபோது கோபம் தாங்காமல் “ நாங்கள் சுரண்டவில்லை. நீங்கள்தான் எங்கள் நாட்டுச் செல்வங்களைச் சுரண்டிக் கொண்டு வந்தனீங்கள்” என்று தட்டுத் தடுமா றிக் கூறிவிட்டான். டேவிட்டுக்கு அது புரிந்திருக்க வேண் டும். கழுவிக் கொண்டிருந்த பாத்திரம் ஒன்றை கமலனை நோக்கி வீசிவிட்டான்.

கமலன் குனிந்ததும் அது சுவரில்பட்டு பெரிய சத்தத்தை உருவாக்கிவிட்டது. சத்தம் கேட்டு உள்ளிருந்து முதலாளியும் வந்துவிட்டார். முதலாளி வந்ததும் எதுவும் நடவாததுபோல் நின்றான். முதலாளி என்ன சத்தம் என்று கேட்டார்.

யாரும் எதுவும் கூறமுன் பாத்திரம் கீழே விழுந்ததாகக் கூறி டேவிட் சமாளித்துவிட்டான். டேவிட் ஒரு ஆங்கிலேயன் என்பதால் முதலாளிக்கு அவன் மேல் விருப்பம் கூட.

முதலாளி போனதும் “ உங்களைப் போன்ற ஆக்களாலை எங்களுக்கு வேலை கிடைப்பதில்லை. கெதியாய் உங்கடை நாட்டுக்குப் போங்கோ. ” என்று கத்திச் சொன்னான்.

அவனது துவேசத்தனமான வார்த்தைகள் கமலனைக் கோபப்பட வைத்தன. ஜோன்சன் அவனைச் சமாதானப்படுத்தாவிட்டால் கமலன் டேவிட்டுக்கு அடித்திருப்பான். கமலன் அன்று நிரம்பக் குழம்பியிருந்தான். வீட்டுக்குச் சென்று அந்தக் கோபத்தை மனைவி மீது காட்டினான்.

கமலன் நல்ல மூட்டில் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட அவன் மனைவி அவனோடு வாய் கொடுக்காமல் பேசாமல் இருந்தாள்.

கொஞ்ச நேரம் கழிச்சு “ ஏனப்பா வேலைத் தலத்திலை ஏதும் பிரச்சினையே?” மெதுவாகக் கேட்டாள்.

“உவன் டேவிட் வந்தாப்போலை நெடுகப் பிரச்சினைதான்”

“ ஏன் அவன் என்னவாம்?”

“ நாளைக்கேதும் கதைக்கட்டும் நான் ஆரெண்டு காட்டிறன்” கமலன் கொதிச்சுக் கொண்டிருந்தான்.

“ அவன் என்னத்தையும் கதைக்கட்டும் நீங்கள் உங்கடை வேலையைப் பார்த்திட்டு வாங்கோ. பிரச்சினைக்குப் போகவேண்டாம்”

கமலன் மனைவி இப்படிச் சொன்னாள்.

“ நான் என்ன சுயமரியாதை இல்லாதவனே விசர்க்கதை கதைக்காதே”

“ அது சரி ..நீங்கள் சொல்லிற சுயமரியாதை இருந்திருந்தால் இஞ்சை வந்திருக்கமாட்டம். அங்கை சிங்களவனுக்குப் பயந்து இங்கை வந்திட்டு இஞ்சை வெள்ளைக்காரனுக்குப் பயந்துதானை வாழிறம். இந்தச் சீத்துவக் கேட்டுக்கை சுயமரியாதையாம் சுயமரியாதை”

கமலனுக்குத் திருப்பிக் கதைக்கமுடியவில்லை.

அமைதியாய்ச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போய்விட்டான். கமலனது மனதில் அவன் மனைவியின் கிண்டல் உறுத்திக் கொண்டிருந்தது.

அடுத்தநாள் வேலைக்குப் போனதும் ஜோன்சனிடம் “ நான் இண்டைக்கு முதலாளியோடை டேவிட்டைப் பற்றிக் கதைக்கப்போறன்”

இவன் இப்படிச் சொன்னதும் ஜோன்சன் சிரித்தான். “ முதலாளி என்ன உன் பக்கமா கதைக்கப்போறான்.. பேசாமல் உன் வேலையைப் பார்.”

அவன் இப்படிச் சொன்னதும் கமலன் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டான்.

அன்று டேவிட் எதுவும் கதைக்கவில்லை. மௌனமாகக் கவலையாக இருந்தான். கமலனுக்கும் ஜோன்சனுக்கும் ஒன்றும் புரியவில்லை. தங்களுக்குள் சைகை மூலம் கதைத்துக் கொண்டனர்.

டேவிட்டின் குடும்ப நிலைமை ஜோன்சனுக்கும் தெரியும். சில விடயங்கள் கமலனுக்கும் தெரியும். அதனால் அவனின் மௌனம் அவர்களுக்குக் கவலையை அளித்தது. அவனின் குடும்பம் இந்த வேலையில்தான் தங்கியுள்ளது. டேவிட்டுக்கு இரு பிள்ளைகள். பிள்ளைகளிற்கு ஏதும் சுகயீனமோ என்று கபிலன் நினைத்தான். டேவிட்டைக் கேட்டால் சத்தம் போடுவான்.

நேற்று வேலை முடிந்தபின் டேவிட் முதலாளியின் அறைக்குள் செல்வதை யும் கமலன் அவதானித்திருந்தான். டேவிட்டை முதலாளிதான் அழைத்தி ருந்தார். முதலாளி டேவிட்டை பேசுவது போன்ற சத்தமும் கேட்டது. அவர் என்ன பேசினார் என்பது கேட்கவில்லை.

ஹெலனா அந்த அறைக்கு அடுத்த அறையில் இருந்து கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் காதுகளுக்கு முதலாளி பேசிய யாவும் கேட்டது. மறுநாள் மதிய இடையில் அவள் ஜோன்சனுக்கும் கமலனுக்கும் வந்து நடந்ததைக் கூறினாள்.

முதலாளி கூறியது இதுதான்.

“கமலன் ஒரு சிறந்த தொழிலாளி . அண்ணளவாக 10 வருடங்களுக்கு மேல் வேலை செய்கிறான். அவனை எந்தக் காரணங்களுக்கா கவும் இழக்க நான் தயாராக இல்லை. நீ அவனை அகதி என்று திட்டுவதும் இனவாதச் சொற்களை அள்ளி வீசுவதும் சரியில்லை. இந்த நாட்டில் இனவாதம் பேசக் கூடாது. நீ என்னினத்தவனாக இருந்தாலும் என் தொழில் பாதிக் கப்படும் என்றால் உன்னைவிட எனக்கு கமலன்தான் முக்கியம். அடுத்த கிழமையிலிருந்து நீ வேலைக்கு வரவேண்டாம்.” என்று முதலாளி கூறிவிட்டார்.

இது முதலாளிகளின் குணாம்சம்.

டேவிட்டின் இப்படியான நடவடிக்கைகளால் தான் கமலனை இழந்துவிடுவேனோ என்கின்ற பயத்தால் டேவிட்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராகியுள்ளார் என்பது தெளிவாக கமலனுக்குப் புரிந்தது. முதலாளியின் இந்த நடவடிக்கை மேல் கமலனுக்குச் சம்மதமில்லை. இப்படி அவன் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதுதான் ஜோன்சன் அந்தச் செய்தியைச் சொன்னான். ஹெலனா அழுது கொண்டிருப்பதாகவும் அவளின் பெற்றாரும் தங்கையும் ரஸ்சியரின் குண்டினில் பலியாகிவிட்டதாகவும் ஜோன்சன் கூறியபோது கமலன் இடிந்து போய்விட்டான்.

ஒரு பக்கத்தில் ஹெலனாவின் சோகமும் டேவிட்டின் வேலை இழப்பும் அவனை வருத்தியது. உக்ரேனிய பிரச்சினைக்கு அமெரிக்க முதலாளித்துவ சிந்தனை காரணம். டேவிட்டின் பிரச்சினைக்கு உணவக முதலாளியின் சுயநலச் சிந்தனை காரணம். கமலன் கொதித்துப் போயிருந்தான். எதற்கும் முதலில் கண்முன் நடக்கும் டேவிட்டின் பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

இந்த வேலைபோனால் டேவிட் மிகவும் கஸ்டப்படுவான் என்பது கமலனுக்குத் தெரியும். என்னதான் அவன் இனவாதம் கதைத்தாலும் அவன் என்னோடு வேலை செய்யும் தொழிலாளி. நாங்கள் இருவரும் வேறுவேறு மொழிபேசும் இனத்தவர்களாக இருந்தாலும் இறுதியில் நாங்கள் தொழிலாளிகளே என்ற உணர்வு கமலனுக்குள் ஆழமாகப் பதிந்தது. ஒரு தொழிலாளி துன்பப்படுவதற்குத் தான் காரணமாகக் கூடாது என்பதில் கமலன் மிகத் தெளிவாக இருந்தான். இதற்கு அவசரமாக ஏதாவது செய்தாக வேண்டுமென அவன் மனம் துடித்தது. திடீரென்று ஏதோ முடிவெடுத்து எதையும் யோசிக்காமல் விறுவிறுவென்று முதலாளியின் அறைக்குள் நுழைந்தான்.

அவனின் வருகையால் திகைப்படைந்த முதலாளி

“ என்ன கமலன்..” என்று கேட்டார்.

“ முதலாளி ஏன் டேவிட்டை வேலையால நிப்பாட்டிறியள்.” என்று கேட்டான்.

“ அவன் ஒரு பிரச்சினைக்குரிய ஆள். இனரீதியாகச் சிந்திச்சு பிரச்சினையள உருவாக்கிறான். உன்னையும் அப்பிடித்தானே கதைக்கிறான்”

உனக்காகத்தான் செய்தேனென்பதைக் கூறாமல் பொதுவாகக் கூறினார்.

“ முதலாளி அது அவனுக்கும் எனக்கும் உள்ள பிரச்சினை. நான் எப்பவாவது உங்களிட்டை வந்து சொன்னனானே. இதற்காக ஒரு தொழிலாளியின்ரை வயித்திலை அடிக்கிறது சரியில்லை”

முதலாளி வியப்போடு அவனைப் பார்த்தார். கமலனோடு பகைக்கக்கூடாதென்பதில் உஷாரானார்.

“ சரி நீ போ நான் யோசிக்கிறன்.”

“ இல்லை முதலாளி சரியான முடிவு எடுக்குமட்டும் நாங்கள் வேலை செய்யமாட்டம்”

முதலாளி திடுக்கிட்டுவிட்டார்.

தொழிலாளர் ஐக்கியம்கூட ஆபத்து என்பது அவருக்குப் புரியும்.

“ எல்லாம் நான் பார்க்கிறன். நீ போ” என்று கூறக் கமலன் வந்துவிட்டான்.

கமலன் போனதும் ஜோன்சன் கமலன் முதலாளியிடம் சென்றிருக்கும் விடயத்தை டேவிட்டுக்குக் கூறிவிட்டான்.

சமையலறைக்குள் வந்த கமலன் “ ஒருவரும் வேலை செய்யவேண்டாம். முதலாளி வருவார்” என்று கூறிவிட்டு பேசாமல் நின்றான்.

முதலாளிக்கு இந்தச் செய்தி போய்விட்டது. சங்கடமான சூழ்நிலையாகப் போய்விட்டது.

சிறிது நேரத்தில் டேவிட்டை முதலாளி கூப்பிடுவதாக ஹெலனா வந்து சொன்னாள்.

டேவிட் முதலாளி அறைக்குச் சென்று திரும்பி வந்ததும் கமலனைப் பார்த்து நன்றியோடு சிரித்தான்.

அவனுடைய அந்தச் சிரிப்பில் அங்கு நடந்தவிடயங்களை கமலன் ஊகித்துக் கொண்டான்.

இப்போதெல்லாம் டேவிட்டும் கபிலனும் வேலை முடிந்து ஒன்றாகவே வேலை செல்கிறார்கள்.

# பிரான்ஸ் அரசின் ஆட்சி தொடருமா?

## தன்னாட்சி உரிமையை மறுக்கும் நியூ கலிடோனியா தேச மக்கள் !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பிரான்சிடம் இருந்து சுதந்திர தனிநாடாக வேண்டும் எனக்கோரும் நியூ கலிடோனியாவின் "கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி" கடந்த மாத இறுதியில் மற்றொரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த நியூ கலிடோனியா மக்களவையில் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் கடந்தகால சர்வஜன வாக்கெடுப்பு முடிவை அங்கீகரிக்க வேண்டாம் என்றும், அதை ரத்து செய்ய ஐக்கிய நாடுகள் சபையிடம் கனாக்ஸ் அமைப்பு முறையிட்டுள்ளது.

நியூ கலிடோனியா பிரான்சிடம் இருந்து சுதந்திர தனிநாடு வேண்டாம் என கடந்த வருட இறுதியில் நடந்த பொது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் மீண்டும் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவிற்கு கிழக்கே 2,000 கிலோமீட்டர்கள் (1,250 மைல்கள்) தொலைவில் உள்ள சுமார் 290,864 மக்களை கொண்ட தீவுக்கூட்டம், சட்டப்படி, பரந்துபட்ட அளவிலான சுயாட்சியை கொண்டிருந்தாலும், பாதுகாப்பு மற்றும் கல்வி போன்ற விடயங்களுக்கு பிரான்சையே இந்த பிராந்தியம் பெரிதும் சார்ந்துள்ளது.

**நியூகலிடோனிய பொது வாக்கெடுப்பு:**

பிரெஞ்சு நிலப்பகுதியிலிருந்து தனித்து, பசுபிக் தீவுகளை உள்ளடக்கிய பிராந்தியமான நியூ கலிடோனியாவில் உள்ள மக்கள் பிரான்சிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாவதற்கு இரு தடவைகள் ஏற்கனவே எதிராக வாக்களித்துள்ளனர்.

இதுதொடர்பாக நடந்த பொது மக்கள் கருத்தறியும் முதலாவது வாக்கெடுப்பில், 53.26 சதவீத நியூ கலிடோனியா மக்கள் தொடர்ந்து பிரான்சுடன் இணைந்திருப்பதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இந்த பொது வாக்கெடுப்பில் அந்த பிராந்தியத்தை சேர்ந்த 85.6 சதவீத மக்கள் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இதே போன்ற இரண்டாவது பொது வாக்கெடுப்பில், இதைவிட அதிகமாக மக்கள், அதாவது 56.7 சதவீத மக்கள் பிரான்சின் அங்கமாக தொடர ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

ஆயினும் மற்றொரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த நியூ கலிடோனியா மக்களவையில் "கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி" கடந்த மாத இறுதியில் கோரிக்கை விட்டுள்ளது.

**பிரெஞ்சு ஆதிக்கம் :**

1976 மற்றும் 1988 க்கு இடையில், பிரெஞ்சு அரசாங்கத்திற்கும் கனாக்ஸ் சுதந்திர இயக்கத்திற்கும் இடையிலான மோதல்கள், கடுமையான வன்முறையால் இந்நாடு பாரிய சீர்குலைவுகளையும், அவலங்களையும் அக்காலங்களில் கண்டது.

பிரான்சுக்கு எதிரான கனாக்ஸ் சுதந்திர இயக்கம் பூர்வீக மக்களின் ஆதரவைப் பெற்றது. அவர்களின் கீழ் சமூகத்தில் விரக்தியடைந்த, பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் பிரெஞ்சு ஆதிக்க சுரண்டலை வலுமையாக எதிர்த்தனர்.

நீண்ட கால போராட்டத்தின் பின்னர், இத்தீவுகளில் பதற்றத்தைத் தணிக்கும் நோக்கில் 1988 ஒப்பந்தத்தின் கீழ் சர்வதேச மேற்பார்வையில் மூன்று சுதந்திர வாக்கெடுப்புகளுக்கு ஐ.நா சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அத்துடன் 1998ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நோமியா உட்பட பல ஒப்பந்தங்கள் இந்த பிரதேசத்திற்கு அதிக சுயாட்சிக்கான அங்கீகாரத்தை பெற்றுத் தந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், நியூ கலிடோனியாவில் சுதந்திரம் குறித்து அதிகபட்சம் மூன்று பொது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்புகள் நடத்த அனுமதிக்கப்பட்டது. அத்துடன் உள்ளூர் சட்டமன்றத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் கோரினால், 2022 பின்னர் மற்றொரு வாக்கெடுப்பும் நடைபெற உத்தேசிக்கப்பட்டது.

**ஐரோப்பியர்களின் குடியேற்றம் :**

நியூ கலிடோனியாவின் மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம் பேர் பூர்விக கனாக்ஸ் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். அதே நேரத்தில், பெரும்பாலும் இந்த பிராந்தியத்திலேயே பிறந்து, வளர்ந்த ஐரோப்பியர்கள் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினராகவும், மற்றவர்கள் பசிபிக் பகுதியை சேர்ந்த மற்ற தீவுகளிலிருந்து வந்தவர்கள் அல்லது கலப்பு பாரம்பரியத்தை கொண்டவர்களாகவும் உள்ளனர்.

நியூ கலிடோனியா 1853 இல் பிரான்சால் முதல் முறையாக ஆக்கிரமித்து இணைக்கப்பட்டது. இதன் விளைவால் ஐரோப்பியர்கள், பாலினேசியர்கள் மற்றும் பிற குடியேற்றவாசிகள் பூர்வீகக் கனாக்ஸை



சிறுபான்மையினராக ஆக்கியிருந்தனர். பிரெஞ்சு ஆதிக்கத்தில் இந்நாடு 1864 முதல் 1897 வரை தண்டனைக் காலனியாகப் பயன்படுத்தப்பட்டது. நியூ கலிடோனியா கிட்டத்தட்ட 170 ஆண்டுகளாக ஒரு பிரெஞ்சு ஆட்சிப் பிரதேசமாக உள்ளது.

பிரான்ஸ் அரசுக்கு 13 வெளிநாட்டுப் பிரதேசங்கள் உள்ளன. 2.7 மில்லியன் மக்கள் அங்கு வசிக்கின்றனர். இப்பிரதேசங்கள் பொதுவாக ஏழ்மையானவை மற்றும் பிரதான நிலப்பகுதியை விட அதிக வேலையின்மை கொண்டவை எனவும் அத்துடன் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகளுக்கும் வழிவகுக்கிறது.

**பொருளாதார வளமிக்க பூமி :**


நியூ கலிடோனியாவில் மின்னணு பொருட்கள் தயாரிப்பில் தேவையான முக்கிய அங்கமான நிக்கல் அதிகளவில் கிடைக்கிறது. தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 38,921 டொலர் ஆகவும், நியூ கலிடோனியா நிக்கலின் முக்கிய உற்பத்தியாளராகவும் உள்ளது.

சுரங்க வருவாய் அதிகமுள்ள இப்பிரதேசத்தை அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சொத்தாக பிரான்ஸ் அரசு இன்றும் கருதுகிறது.

நியூ கலிடோனியா, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினராக உள்ள தன்னாட்சியற்ற 17 பிராந்தியங்களில் ஒன்றாக திகழுகிறது.1853ஆம் ஆண்டில் இருந்து இந்த தீவுக்கூட்டத்தை பிரான்ஸ் முதன்முதலில் உரிமை கோரியதில் இருந்து இன்னமும் பிரான்சின் ஆதிக்க காலனித்துவம் முடிவுக்கு வரவில்லை.

**1986 முதல் சுதந்திர வாக்கெடுப்பு:**

ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் 1986 நியூ கலிடோனியா முதல் சுதந்திர வாக்கெடுப்பு நடைபெற்றது. பின்னர் மீள அடுத்த ஆண்டு செப்ரெம்பர் 13, 1987 அன்று நடைபெற்றது. இருப்பினும், சுதந்திரம் பெரும் வாக்கெடுப்பில் பெரும்பான்மை மக்களால் நிராகரிக்கப்பட்டது. 842 பேர் (1.7 வீதம்) சுதந்திரத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர் மற்றும் 48,611 பேர் (98.3 வீதம்) எதிராக வாக்களித்தனர்.



ஆயினும் கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி போன்ற பல சுதந்திர ஆதரவு குழுக்கள் வாக்களிப்பைப் முழுமையாக புறக்கணித்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீண்டகால போராட்டங்களின் பின், பிரெஞ்சு அரசாங்கம், முக்கிய சுதந்திரம் கோரிய விடுதலை அமைப்புக்கள், மற்றும் சுதந்திர எதிர்ப்புக் கட்சிகள் 5 மே 1998 இல் கையெழுத்திட்ட உடன்படிக்கையானது இத்தீவில் அமைதியை நிலைநாட்டியது.

இவ் உடன்படிக்கையால் 2018 இல் சுதந்திர வாக்கெடுப்புக்கு அடித்தளம் அமைத்தது. இந்த உடன்படிக்கையின்படி, நியூ கலிடோனியர்கள் சுதந்திரம் குறித்த மூன்று வாக்கெடுப்புகள் நடாத்த அனுமதிக்கப்பட்டனர். 2018 இல் முதலாவது, பின்னர் இரண்டாவது 2020 மற்றும் இறுதியாக 2022க்குள் என மூன்று வாக்கெடுப்புகள் நடாத்த திட்டமிடப்பட்டது. பிரான்சுடன் இணைந்து வாழ மக்கள் விருப்பைத் தெரிவித்து உள்ள இவ்வேளையில் மற்றொரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த நியூ கலிடோனியா மக்களவையில் கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி கடந்த மாத இறுதியில் கோரிக்கை விட்டுள்ளனர். இந்த சர்வஜன வாக்கெடுப்பு 2022 இறுதி மாதங்களில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**சீன செல்வாக்கும் புது ஆதிக்கமும் :**

துருப்பிடிக்காத எஃகு, பேட்டரிகள் மற்றும் மொபைல் போன்கள் தயாரிக்கப் பயன்படும் உலகின் நிக்கல் வளத்தில் சுமார் 10 சதவீதத்தை தன்னகத்தே கொண்ட இத்தீவு, பிரான்சின் ஆட்சிக் குரிய மிகப்பெரிய கடல் கடந்த பிரதேசங்களில் ஒன்றாகும்.

இப்பகுதியானது பிரான்சின் பசிபிக் வல்லரசு உரிமையின் ஒரு முக்கிய பகுதியாகும், நியூ கலிடோனியா சுற்றியுள்ள கடல் மற்றும் இராணுவ புவியியல் மையமானது பிரான்ஸ் ஆதிக்கத்தின் முக்கியத்தவத்தை பேணுகிறது.

நியூ கலிடோனியா தனிநாடாக ஒரு சுதந்திரமான தேசமாக அமைந்தால் பெய்ஜிங்கிற்கு நெருக்கமாக நகரும் என மேற்கத்தய அரசியல் நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர். இது மற்ற பசிபிக் தீவுகளில் நெருங்கிய பொருளாதார தொடர்புகளையும் அரசியல் செல்வாக்கையும் இழக்க நேரிடும் என கருதப்படுகிறது.

பிரெஞ்சு ஆளுகையும், பாதுகாப்பும் மறைந்துவிட்டால், நியூ கலிடோனியாவில் நிரந்தரமாக சீனா தன்னை நிலைநிறுத்துவதற்கு அனைத்து சாத்தியங்களும் இருக்கும் என்று பிரெஞ்சு சர்வதேச ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அத்துடன் பிஜி, வனவாடு, சாலமன் தீவுகள் மற்றும் பப்புவா நியூ கினியா உள்ளிட்ட இப்பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகள் ஏற்கனவே "சீன செயற்கைக்கோள்களாக" மாறிவிட்டன, என பிரான்ஸ் ஆய்வாளர் வாண்டெண்டிக் கூறியுள்ளார்.

"ஆஸ்திரேலியாவின் வீட்டு வாசலில் சீனா தனது முத்து நெக்லஸை அணிய இப்போது தேடுவது நியூகலிடோனியா" என்று அவர் நளினமாக கூறியுள்ளார்.

ஏற்கனவே நியூ கலிடோனியாவின் உலோக ஏற்றுமதிக்கு சீனா மிகப் பெரிய வாடிக்கையாளர் ஆகும். இதன் காரணமாகவே நியு கலிடோனிய நாட்டை இழக்க மேற்குலகம் விரும்பவில்லை.

மேலும் கனாக்ஷ் சுதந்திர ஆதரவு இயக்கம் நியூ கலிடோனியாவின் எதிர்கால வளர்ச்சிக்கு அதன் பிராந்திய கவுன்சிலுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட கோரியுள்ளது. அத்துடன் நியூ கலிடோனியாவின் மக்கள் பிரான்சுடன் தொடர்ந்து வாழ விரும்பும் திட்டம்பற்றி முடிவு செய்ய ஜூன் 2023க்குள் மற்றொரு வாக்கெடுப்பு நடாத்தவும் கோரியுள்ளது.

நியூ கலிடோனியா கனாக்ஸ் சுதந்திர ஆதரவு இயக்கம் கடந்தகால சர்வஜன வாக்கெடுப்பை முடிவை அங்கீகரிக்க வேண்டாம் என்றும்,அதை ரத்து செய்ய ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிட்டுள்ளது. 30 ஜூன் 2023 வரை நிலமைகளை ஆராய்ந்து, இதன் பின்னர் பிரெஞ்சு குடியரசில் உள்ள நியூ கலிடோனியாவின் புதிய நிலை குறித்த வாக்கெடுப்பு மீள நடைபெறலாம் என்றும் அறிவிக்கப்படுள்ளது. ஆனால் இதன் முழுமையான விவரங்கள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

கனாக்ஸ் சுதந்திர ஆதரவு இயக்கமான "கனாக்ஸ் சோசலிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி"கடந்தகால சர்வஜன வாக்கெடுப்பை முடிவை அங்கீகரிக்க வேண்டாம் என்ற கோரிக்கையினால் 1980 களில் சுதந்திரத்திற்கு ஆதரவான கனாக்ஸ்களுக்கும் சுதந்திரத்தை எதிர்த்த வெள்ளை பிரெஞ்சு மக்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்து பதட்டங்கள் மீண்டும் வன்முறையைத் தூண்டும் என்று மேற்குலக அவதானிகள் அஞ்சுகின்றனர்.

ஆயினும் பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரத்தை வேண்டி நிற்கும் பூர்வீக மக்களின் உரிமைக் குரலை சர்வதேசமும், ஐ.நாவும் இலகுவாக தட்டிக்கழிக்க முடியாது எனப் புலப்படுகிறது.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

### கல்வி tv CHANNEL-1

**25.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**25.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |








# கரையை தாக்கிய கடல் அலை

கொழும்பு, ஜூலை. 03

கடல் அலைகள் கரையை நோக்கி வருவதால் காலி கடல் வீதி, துறைமுக பொலிஸ், சுங்கம் உள்ளிட்ட பல இடங்கள் நேற்று மாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல படகுகளும் அலைகளினால் கரை ஒதுங்கியுள்ளதுடன் கடல் பாதையில் நீர் மற்றும் மணல் நிறைந்துள்ளது.

காலி-மாத்தறை பிரதான வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டது.

சமுத்திர மாவத்தையின் கரையும் சேதமடைந்துள்ளதுடன், நிலவும் பலத்த காற்றுடன் கடல் அலைகள் கரையை நோக்கி பாய்ந்துள்ளன. (அ)

# அத்தியாவசிய சேவைக்கு மட்டும் லிட்ரோ எரிவாயு விநியோகம்

கொழும்பு, ஜூலை. 03

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே தொடர்ந்தும் எரிவாயு விநியோகம் இடம்பெற்று வருவதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாதம் 33,000 மெற்றிக் தொன் எரிவாயு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறவன தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன் முதல் கப்பல் எதிர்வரும் 6ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 7ஆம் திகதி வரை உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு வெளியிடப்படாது எனவும், எரிவாயு விநியோகம் தொடர்பில் புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# வவுனியா எரிபொருள் நிலையத்தில் வைத்து திருப்பியனுப்பப்பட்ட மேலதிக அரச அதிபர்!

வவுனியா, ஜூலை. 03

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து எரிபொருள் வழங்காது வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருப்பி அனுப்பப்பட்டார்.

நேற்று குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது.

இதன்போது அதிகளவானவர்கள் வரிசையில் காத்திருந்து எரிபொருளை பெற்றபோது அங்கு சொந்த வாகனத்தில் வருகை தந்த மேலதிக அரசாங்க அதிபர், தனது வாகனத்துக்கு முழுமையாக எரிபொருள் நிரப்புமாறு தெரிவித்தார்.

எனினும் அங்கிருந்த சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன் இன்று(நேற்று) சுகாதார தரப்பினருக்கு மட்டும் எரிபொருள் வரங்குவதால் மேலதிக அரசாங்க அதிபருக்கு வழங்க வேண்டாமென எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அங்கிருந்து திரும்பிச் சென்றார். (அ)

## மின்துண்டிப்பை வழமைக்கு கொண்டு வருவதில் சிக்கல்!

கொழும்பு, ஜூலை. 03

திடீர் மின்சார துண்டிப்புகளை வழமைக்கு கொண்டு வருவதில் தாமதம் ஏற்படலாம் என இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

எரிபொருள் நெருக்கடியினால், பராமரிப்பு பிரிவிலுள்ள வாகனங்களை பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கலால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டினால், முன்னுரிமை அடிப்படையில் வாகனங்களை பயன்படுத்தத் தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டது.

இந்த நிலையில், பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை குறைத்துக் கொள்வதற்காக, ஒத்துழைப்புடன் செயற்படுமாறு பொது மக்களிடம் மின்சார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# கந்தக்காடு கலவரம்: 4 படையினர் கைது

## 59 கைதிகள் தொடர்ந்தும் தலைமறைவு

கொழும்பு, ஜூலை. 03

பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுவினருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கைதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் இராணுவத்தினர் இருவரும், விமானப் படை அலுவலர்கள் இரு வரும் கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கலவரத்தில் கொழும்பு - மோதரையைச் சேர்ந்த 36 வயதுடைய கைதி ஒருவர் உயிரிழந்ததுடன், 726 பேர் தப்பியோடியிருந்தனர்.

இந்நிலையில், 667 கைதி கள் மீளவும் கைதுசெய்யப்பட்டதுடன், 59 பேர் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றனர். (அ)

## நீர் விநியோகம் பாதிக்கப்படலாம்

கொழும்பு, ஜூலை. 03

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக நீர் விநியோகப் பணியாளர்கள் கடமைக்கு சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பணியாளர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடு தடைபட்டுள்ளதுடன், குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக சங்கம் எச்சரித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 09 - 1931



மறைவு 30 - 06 - 2022

## திருமதி
## யோகாம்பிகை இரத்தினசபாபதி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். வண்ணார்பண்ணை, கனடா Ottawa ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட யோகாம்பிகை இரத்தினசபாபதி அவர்கள் 30-06-2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி, நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா, கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற கந்தையா இரத்தினசபாபதி அவர்களின் அன்பு மனைவியும்,மணிவண்ணன்(அவுஸ்திரேலியா), அமலவண்ணன்(லண்டன்), Pastor ஞானவண்ணன் (Oshawa Toronto), ஆதிரை(அவுஸ்திரேலியா), சோதிவண்ணன் ( Ottawa - கனடா), உத்தரை(அவுஸ்திரேலியா), கஸ்தூரி (Ottawa, கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,அனுசலா, சாந்தா, ராசம்மா, ஞானேந்திரன், சுவந்தினி, விக்னேஸ்வரன், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மாயவன், மாதவன், கௌதமன், பிரசாந்தன், ராகம், தனஞ்சய், அமிர்தன், தபோவன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும்,அபிராமி, லோகினி, சுபாஷினி, ஆதித்தன், அகிலன், பிரகாஷ், பிரமேஷ், மகிந்தன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,ஆகேஷ், சஹானா, சாயி, யுவன், ஏவியல்(Avielle) ஆகியோரின் அருமை மிகு கொள்ளுப்பாட்டியும்,பத்மநாதன்( Toronto- கனட ா), காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, தண்டாயுதபாணி, சொக்கலிங்கம், புனிதவதி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

*பார்வைக்கு:*
Wednesday, 06 Jul 2022 6:00 PM - 9:00 PM
Thursday, 07 Jul 2022 9:00 AM - 10:00 AM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada.

*கிரியை :*
Thursday, 07 Jul 2022 10:00 AM - 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada.

*தகனம் :*
Thursday, 07 Jul 2022 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :

**ஞானவண்ணன்(ஞானா) - மகன்**
**Mobile : +16475270194**

**சோதிவண்ணன்(சோதி) - மகன்**
**Mobile : +16138635765**

**அமலவண்ணன்(அமலன்) - மகன்**
**Mobile : +447534499862**

**மணிவண்ணன்(மணி) - மகன்**
**Mobile : +61428689333**

தகவல்:
**குடும்பத்தினர்**

## பதவி...

பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்தும் நிறுவனங்களை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால், அவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக நிறுவனங்களின் பிரதானிகள் சிலர், அரச உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

எரிபொருள் மற்றும் அத்தியவசியமான மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக பல அரச நிறுவனங்களைகொண்டு நடத்த முடியாத சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால், நிறுவனங்களின் பிரதானிகள் விரக்தியிலும் செய்வதறியாதும் இருப்பதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல நிறுவனங்களில் வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (அ)

## அடுத்த...

காரணமாக எதிர்வரும் வாரத்தில் இருந்து நாடு முற்றாக முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவை பஸ்கள் மட்டுமன்றி சுகாதாரக் கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகளையும் பராமரிக்க முடியாத அளவுக்கு எரிபொருள் நெருக்கடி மோசமடைந்துள்ளது.

அத்தியாவசிய சேவைகளைக்கூட பராமரிக்க முடியாத அளவுக்கு எரிபொருள் நெருக்கடி நாட்டை பாதித்துள்ளதாகவும், ஒரு தொகை எரிபொருள் இறக்குமதி செய்யப்படும் வரை இந்நிலை தொடரும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் டீசல் கப்பலொன்றும், 22ஆம் திகதி பெற்றோல் கப்பலொன்றும் இலங்கைக்கு வரவுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சிறப்பாக...

நவ நாள் ஆராதனைகளை தொடர்ந்து நேற்று சனிக்கிழமை காலை திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலி ஒப்புக் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூபப் பவனி இடம் பெற்றதோடு, பக்தர்களுக்கு திருச்சொரூப ஆசியும் வழங்கப்பட்டது.

மடு அன்னையின் அருளைப் பெறுவதற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ் ஐ.ஓ.சி...

மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக நேற்று அத்தியாவசிய சேவையினருக்கும் ஏற்கனவே ரோக்கன் விநியோகிக்கப்பட்ட பொதுமக்களுக்குமென இரண்டு வரிசைகளில் எரிபொருள் விநியோகம் காலை முதல் இடம்பெற்றது.

இந்நிலையில் மாலை 5:30 மணியளவில் எரிபொருள் நிறைவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து பொதுமக்களும் அத்தியாவசிய சேவைப்பிரிவினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்கள் தாம் மூன்று நாட்களுக்கு மேலாக வரிசையில் காத்திருந்து எரிபொருளை பெறுகின்றோம் எனவும் இன்றும் எரிபொருள் இல்லையென்றால் நாம் என்ன செய்வது, ஒழுங்கான பங்கீட்டை ஆரம்பத்திலேயே மேற்கொள்ளாத அரசாங்க அதிபர் பதவி விலக வேண்டும், கோ கோம் ஜீ.ஏ என்ற கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ்.மாவட்ட பொலிஸ் நிலைய தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி வீதிப் போக்குவரத்தை சுமூகமான நிலைக்கு கொண்டு வர முயன்ற போதும் பொதுமக்கள் குழப்பமான சூழ்நிலையையே எதிர்கொண்டனர். (அ)

## எரிபொருள் வழங்க...

டங்களில் பங்கேற்பதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர். சிலர் தங்கள் வீடுகளுக்கு வந்து எரிபொருள் கேட்டு வம்பு செய்வதாகவும், சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அழைத்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி கோருவதாகவும் கூறி அமைச்சர்கள் தொலைபேசிகளை நிறுத்தி வைத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இதற்கு முன்னர் அமைச்சர்களிடம் பதவி உயர்வு, இடமாற்றம் கோரியவர்களும் தற்போது பத்து பதினைந்து லீற்றர் எரிபொருள் கேட்கின்றனர். இது மிகவும் கவலைக்கிடமான சூழ்நிலையாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## பாடசாலைகளி...

இதன் காரணமாக, அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் உள்ளிட்ட ஏனைய பாடசாலை உபகரணங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில், நாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலை உபகரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை விட அதிகமாக வர்த்தகர்கள் விற்பனை செய்வதால் தாம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் தற்போதைய எரிபொருள் நெருக்கடியில் பேருந்து பயண கட்டணங்களும் அதிகரித்துள்ளதால் மாணவர்களை, பாடசாலைகளுக்கு அனுப்புவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக பெற்றோர் குறிப்பிடுகின்றனர். (அ)

## அரசுக்கு...

லாந்தோட்டையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து கட்சி உறுப்பினர்களும் இன்று வரிசைகளில் நிற்கின்றனர். எனவே, கட்சி பேதம் வேண்டாம். நாட்டை மீட்க மக்கள் சக்தியாக ஒன்றிணைவோம்.

மக்கள், ஆம் சொன்னால் அரசை விரட்டுவதற்கான ஆட்டத்தை ஆரம்பிக்க நாம் தயார். 2 ஆவது அலை ஆரம்பமாகும். திகதி, விவரம் அறிவிக்கப்படும். அந்த அலை சுனாமிபோல அமையும்.

மக்களுக்கு நெருக்கடிவரும்போது, பொலிஸாரும், இராணுவத்தினரும் மக்கள் பக்கம்தான் நிற்பார்கள் - என்றார். (அ)

## பொலிஸாருக்கு...

எரிபொருள் நெருக்கடி காரணமாக சில விசாரணைகள் மற்றும் களப் பணிகள் தடைப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தகைய நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில், இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## இராணுவ...

வித்ததாக அதன் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வைத்தியர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)



# கரை ஒதுங்கிய புள்ளிச்சுறா

முல்லைத்தீவு, ஜூலை. 03

முல்லைத்தீவு - அளம்பில் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் பாரிய புள்ளிசுறா ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் கடற்கரையில் சுறாக்கள் கரை ஒதுங்குவது கடந்த காலங்களில் பதிவாகியிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன் தினம் உயிரிழந்த நிலையில் சுமார் 20 அடி நீளம் கொண்ட பாரிய சுறா ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

அண்மை நாட்களில் இந்திய இழுவைப்படகுகள் முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன இவற்றினால் கடல்வாள் உயிரினங்கள் அழிக்கப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவித்துவரும் நிலையில் இந்த சுறா மீனும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகின் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கலாம் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

# இரண்டு வாரங்களில் அலுவலக பஸ் சேவை முன்னெடுக்க முடிவு

கொழும்பு, ஜூலை. 03

எதிர்வரும் இரண்டு வாரங்களில் அலுவலக பஸ் சேவைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் பிரச்சினையை அடிப்படையாக கொண்டு பல்வேறு அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தனியார் பஸ்களுக்கு தேவையான எரிபொருள் வழங்கினால், தற்போதைய பஸ் கட்டணத்தை விட குறைந்த விலையில் அலுவலக சேவையை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போவினால் எரிபொருள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கான பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டிய கெமுனு விஜேரத்ன, போக்குவரத்து சிரமம் காரணமாக பயணிகள் எதிர்நோக்கும் சிரமங்களை அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாதது வேதனையான நிலை எனவும் குறிப்பிட்டார். (அ)

# காலி வீதி போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு, ஜூலை. 03

கடல் அலை கரையை கடந்து நிலப்பகுதிகளுக்குள் புகுந்துள்ளதால் உஸ்முதுனாவ சந்தியில் இருந்து ஹிங்கடுவை குமாரகந்த சந்தி வரை வாகன போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு சாரதிகளிடம் பொலிஸ் ஊடக பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எலகந்த வீதி அவதான நிலையில் உள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

# யாழிலிருந்து பயணித்த அரச பஸ்ஸில் நடத்துனரிடம் பணம் பறித்தது கும்பல்!

## 59,177 ரூபா பறிபோனது!

யாழ்ப்பாணம், ஜூலை. 03

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் பயணித்த மூவர் பேருந்தின் நடத்தினரைத் தள்ளிவிழுத்தி அவரிடமிருந்து 59 ஆயிரத்து 177 ரூபா பணத்தினைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று இரவு கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மூவரும் யாழ்ப்பாணத்திலிருந்து பயணத்து உமையாள்புரம் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்கியுள்ளனர்.

அவர்கள் இறங்குவதற்காக நடத்துநர் இடம்விட முற்பட்டபோது அவரைத் தள்ளிவிழுத்தி அவரிடமிருந்த பணத்தினைப் பறித்துக்கொண்டு ஓடியுள்ளனர்.

அவர்கள் இறங்கிய இடத்தில் வேறு சிலரும் காத்திருந்ததாக பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# 22 ஆவது திருத்தம் பயனில்லாத ஒன்று!

## சட்டத்தரணி விஜேநாயக்க அதிருப்தி

கொழும்பு, ஜூலை. 03

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பல சாதகமான அம்சங்கள் 22ஆவது திருத்த சட்டத்துக்குள் உள்ளடக்கப்படவில்லை என ஜனநாய கத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சட்டத்தரணி விஜேநாயக்க இவ்வாறு கூறியுள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

19ஆவது திருத்தச் சட்டத்துடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவான பலனைத் தரக்கூடிய அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள் ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது குறித்த மக்களின் எதிர்பார்ப்புக்கள் 22ஆவது திருத்த சட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.



# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 10,000 ரூபா

கொழும்பு, ஜூலை. 03

நாடளாவிய ரீதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கம் 200 பில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் மாலை கூடிய வாழ்க்கைச் செலவு தொடர் பான குழுவின் கூட்டத்தின்போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங் களுக்கு மாதாந்தம் 7,500 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

பொருளாதார நெருக்கடியால் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு மற்றும் அத்தியாவசியப் பொருட் களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு இந்த தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குறைந்த பட்சம் அடுத்த ஆறு மாதங்களுக்கு மாதாந்த உணவு நிவாரணம் வழங்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு உணவுப் பொருட் களை வழங்குவதே மிகப் பெரிய சவாலாகும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார். (அ)

# ஓ.எல். பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை. 03

எரிபொருள் நெருக்கடியால், கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின், இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்தவுடன், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை மீள ஆரம்பிக்க உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ.தர்மசேன தெரிவித்தார்.

எரிபொருளை பெற்றுக்கொள்ள ஆசிரியர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதால், இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் பிரச்னை தீர்க்கப்பட்டதன் பின்னர், அவர்களுக்கு தேவையான எரிபொருளைப் பெறுக் கொள்வதற்கான முறையான வேலைத்திட்டமொன்றை ஒழுங்கமைத்தன் பின்னரே சாதாரணத் தர பரீட்சை விடைத்தாள் இரண்டாம் கட்ட மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்க முடியும்.

அவ்வாறின்றேல், ஆசிரியர்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க முடியாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ.தர்மசேன தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சியில் பதுக்கிவைத்த டீசல், மண்ணெண்ணெய் மீட்பு!

கிளிநொச்சி, ஜூலை. 03

கிளிநொச்சி நகரப் பகுதியில் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் மற்றும் மண்ணெண் ணெய் என்பன மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்திக்கு அண்மித்த பகுதியில் வீடுகளுக்குள் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 800 லீற்றர் டீசல், 950 லீற்றர் மண் ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டன. இதனைப் பதுக்கி வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக் கப்பட்டிருந்த டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரும் கைதுசெய்யப்பட் டார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று கிளிநொச்சிப் பொலி ஸார் தெரிவித்தனர். (அ)



# மட்டக்களப்பு விவசாயிகளுக்கு தலா 25 லீற்றர் டீசல் விநியோகம்

மட்டக்களப்பு, ஜூலை. 03

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் டீசல் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விவசாயிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் தேசப்பிரியவின் ஆலோசனைக்கமைய ஓட்டமாவடி தியாவட்டவான் பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து நேற்று சனிக்கிழமை டீசல் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

வாழைச்சேனை கமநல சேவைகள் பிரிவிலிலுள்ள 13 விவசாய கண்டங்களில் தலா ஒரு விவசாயக் கண்டத்தில் இருந்து 10 பேர் வீதம் 130 விவசாயி களுக்கு தலா 25 லீற்றர் வீதம் டீசல் வழங்கப்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியா வசிய சேவைகளுக்கென வைக்கப்பட்டிருந்த 3307லீற்றர் டீசல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அறிவுரைக்கு அமைய விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

டீசல் விநியோகிக்கும் நிகழ்வில் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பன்டார, வாழைச்சேனை கமநல சேவைகள் பிரிவின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன், பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பரிசோதகர் ஏ.பி.எம்.பளீல் ஆகியோர் கலந்து கொண்டு இந்த டீசல் விநியோ கத்தை வழங்கினர். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்




**இரவு**

07.00 மணி : SPOTLIGHT
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை - பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ்



**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

---

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

---

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு